
கல்கி
மணியம்
KALKI ஜூன் 19, 1955 4 அணா


ஒவ்வொரு தினமும் உங்கள்
குழந்தைகள் அழுக்கினுள்ள
கிருமிகளின் அபாயத்துக்
குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை
லைப்பாய் சோப்பினால்
கழுவிக்களைந்து தினமும்
அவர்களைக் காப்
பாற்றுங்கள்.
லைப்பாயின் "பாதுகாக்கும்
நுரை" குழந்தைகளின்
ஆரோக்கியத்தைக்
காப்பாற்றுகிறது.
லைப்பாய்
சோப்
தினசரித்தொல்லையான அழுக்
கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY
SOAP
LIFEBUOY
இந்தியாவில் தயாரித்தது.
L. 252-50 TM

மலர் 14 இதழ் 47

கல்கி

மன்மத ஆனி 5

1955 ஜூன் 19

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 14 | இதழ் 47

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵ | ஆனி 5

ருஷ்யாவில் வசந்தோத்சவம்

மாஸ்கோ நகரத்துத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யும் வயதான ஒரு பெண்மணி சொன்னாளாம்: "மாரிக்காலம் சென்று, வசந்த காலம் வருகிறது என்றால் எங்களுக்கெல்லாம் எப்படி மகிழ்ச்சி மலர்கிறது; அப்படியிருக்கிறது நேருஜியின் விஜயம். அவருடைய வரவினால் நாங்கள் எல்லாம் இரண்டாவது வசந்தம் வந்தது போல ஆனந்தம் அடைகிறோம்!"

மேற்படி குறிப்பைத் தினப் பத்திரிகைகளில் பார்த்ததும் நாமும் மகிழ்ச்சி பூக்கிறோம். நம்முடைய நாட்டில் இப்போது நடக்கும் வசந்த காலத்தை விமானத்திலே தம்முடன் ஏற்றிக் கொண்டு சென்று ருஷ்ய நாட்டிலே மலர விட்டு விட்டார் நமது பெருமைக்கு உரிய பிரதம மந்திரி என்று எண்ணி சந்தோஷப்படுகிறோம்.

நேருஜி ருஷ்யா செல்லும் போதே அங்கே அமோகமான வரவேற்பு அவருக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்கவே செய்தோம். ஆனாலும் இப்பொழுது நடைபெறுகிற வரவேற்பையும் உபசரிப்பையும் பார்த்தால், நாம் எதிர்பார்த்ததற்குப் பன்மடங்கு அதிகமாக இருக்கிறது. ஒரே சங்கராபரணமாக இருக்கிறது என்று சொல்லலாம்.

அரசாங்கத் தலைவர்களும், மந்திரிகளும் நேருஜியை அபாரமான பிரியத்தோடு வரவேற்றிருக்கிறார்கள். பொது மக்கள் எல்லாம், ஆடவர், பெண்டிர் அடங்கலும் நமது தலைவரை ஒரே களிப்போடு உபசரித்திருக்கிறார்கள். ருஷ்யக் குழந்தைகள் நமது பிரதம மந்திரிக்குப் பூச்செண்டுகள் வழங்கித் தங்கள் அன்புக் காணிக்கையைச் செலுத்தி யிருக்கிறார்கள்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை யன்று வழக்கம்போல் மக்கள் அளித்துள்ள வரவேற்பைப் பற்றிப் பத்திரிகைகளிலே பார்த்தோம். அந்த மக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் கருங்கடலிலே சென்று ஸ்நானம் செய்வார்களாம். ஊரே அன்று முழுதும் வெறிச்சென்றிருக்குமாம். ஆனால் ஜூன் மாதம் 12-ந் தேதி வழக்கம்போல் மக்கள் தங்களுடைய ஞாயிற்றுக்கிழமை வழக்கத்தையே விட்டார்களாம். யாரும் கருங்கடலுக்குச் செல்லவில்லையாம். நேருஜியை வரவேற்று மகிழும் இன்பக் கடலிலேதான் குளித்தார்களாம்!

இதை யெல்லாம் பார்க்கும் போது ஒன்று தெளிவாகிறது. நேரு அவர்கள் பாரத மக்களின் இதயத்தில் எப்படி ஒரு மகத்தான ஸ்தானத்தை வகித்து வருகிறாரோ அதுபோலவே ருஷ்யா போன்ற அன்னிய நாட்டு மக்களின் இதயத்திலும் சமாதான தேவனாக அவர் மகத்தான ஒரு ஸ்தானத்தை வகிக்கிறார். அதிலும் சமீப காலத்தில் சமாதான வழிகளில் நாட்டம் செலுத்த முனைந்திருக்கும் ருஷ்ய நாட்டு மக்களின் மனத்தில் அவருக்குள்ள ஸ்தானம் ஒப்புயர்வற்றது என்று தெரிகிறது. ருஷ்ய நாட்டு அரசாங்கத் தலைவர்கள் அவரை வரவேற்றுப் பேசி யிருக்கும் பேச்சுக்களிலும் இந்த உண்மை புலனாகிறது. ருஷ்யாவின் உண்மை நோக்கம் சமாதானம் என்பதை இப்போது யாருமே சந்தேகிப்பதற்கு இடமில்லை. சமாதானத்தை இவர்கள் ஏன் விரும்புகிறார்கள் என்பதைத்தான் குதர்க்கம் செய்து கொண்டிருக்கலாம்.

ருஷ்யாவுக்குப் புறப்படுமுன்பு அணுகுண்டு ஒழிப்பு சம்பந்தமான யோசனையில் தமக்கு இருக்கும் ஆழ்ந்த பக்தியை ஐயந்திரிபுக்கு இடமின்றி வெளியிட்ட நேருஜி,

இன்று உலக மக்களின் கண் முன்பு அகில உலக சமாதானத்துக்கு வழிவகுக்கும் ஒரு சமாதான தூதராகவே காட்சி தருகிறார். அத்தோடு தொழில் வளமும், செயல் வளமும் நிரம்பிய ருஷ்ய நாட்டார், எதிர்காலத்தில் பாரதத்தோடு பரஸ்பர நல்லுறவை அதிகரித்துக் கொள்ளவும், இரு நாடுகளும் முன்னேற்றம் அடைவதற்கு உரிய நேசப் பான்மையை நிலைநாட்டவும் நேருஜி அடிகோலுவார் என்று எதிர்பார்ப்பது இயல்பே. ஆயினும் அவ்விடம் காட்டப்பெற்ற அன்பினால் நேருஜி தம் தடஸ்த நிலையை ஒரு நாளும் விட்டு விலக மாட்டார்.

ருஷ்யாவுக்கு நேருஜி சென்று தொழிற்சாலைகளையும், அணைக்கட்டுகளையும், நாட்டு நலத் திட்டங்களையும் நிர்வாக முறை முதலியவைகளையும் பார்வையிட்டுத் திரும்புவதன் பலனாக என்ன உறவு முறைகள் ஏற்படும் என்பதைப் பற்றிப் பல ஹேஷ்யங்கள் சொல்லுகிறார்கள். ஒன்று மட்டும் நிச்சயம். பரஸ்பர அவநம்பிக்கையும், சந்தேகமும் நிரம்பியுள்ள மேற்கு வல்லரசுகளிடையே சமாதானத்தை நிலைநாட்டக் கூடிய தார்மிக முறைமைக்குத் திறவுகோல், இந்தப் புண்ணிய பாரத நாட்டின் தலைவரிடந்தான் இருக்கிறது என்பதை அந்த நாட்டின் பொதுமக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள். நேருஜிக்கு ருஷ்யப் பொதுமக்கள் அளிக்கும் அமோகமான வரவேற்பு இதற்குச் சான்றாகும்.

ருஷ்யாவின் இந்த வசந்தத் திருநாள் அகில உலக சமாதானத் திருநாளின் கொடியேற்றமாக விளங்க வேண்டும் என்று பிரார்த்திப்போமாக!

நன்கொடைத் தத்துவம்!

பிரிட்டிஷ் பத்திரிகைகளில் பெரிய செல்வாக்கு ஸ்தானத்தைப் பெற்றிருக்கும் 'எகானமிஸ்ட்' பத்திரிகை எழுதுகிறது:

"யூகோஸ்லாவ் சர்வாதிகாரி டிட்டோவுக்கு ருஷ்யர்கள் வியாபாரச் சலுகைகளும், நிர்மாண சேவைக்குப் பயன்படும் அணுசக்தி உதவியும் இன்னும் பல சலுகைகளும் தருவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் டிட்டோ அனுபவசாலி. ஏமாந்து போக மாட்டார். நன்கொடைகள் பெறுவதில் அபாயம் உண்டு. இது அவருக்கு நன்றாகத் தெரியும். நன்கொடை பெறுவது மிக்க அபாயம் என்பது புராதன கிரேக்கர்களிலிருந்து உலகம் அறிந்த உண்மை."

பிரிட்டிஷ் பத்திரிகை இவ்வாறு யூகோஸ்லாவாவின் அபாயத்தைப் பற்றி எச்சரிக்கிறது. உண்மை என்பது எல்லாருக்கும் பொது. நன்கொடைகள் பெற்றால் பாசம் ஏற்படுவது இயற்கை. பாசமும் தளையும் ஏற்பட்டால் சுதந்திரம் குறையும். ஓரளவு சுதந்திரத்தைப் பரிவர்த்தனம் செய்தேதான் நன்கொடைகளைப் பெறுகிறோம். சில பரிவர்த்தனைகள் கண்ணுக்குத் தெரியும். சில தெரிய மாட்டா.

அதே 'எகானமிஸ்ட்' பத்திரிகை வேறொரு விஷயத்தைப் பற்றி வியக்தமாகவும் கூச்சமின்றியும் எழுதுகிறது:

"ருஷ்யா போக எஞ்சிய மேற்குப் பகுதி ஐரோப்பிய நாட்டார் முற்றிலும் ருஷ்யாவுக்கு நிரந்தர விரோதிகள் ஆகும் வரையில், கம்யூனிஸ்ட் கொள்கைக்கு மாறாகத் தீவிர வியக்தி வியாபாரப் பற்றுள்ளவர்களாக மாறும் வரையில், ஐரோப்பாவில் அமெரிக்க ராணுவப்படை இருந்தே வரவேண்டும்."



ஒரு முக்கிய அமெரிக்க வாரப் பத்திரிகையில் வந்த படம்

இதே அபிப்பிராயத்தைப் பொதுவாக எல்லா பிரிட்டிஷ் பத்திரிகைகளும் வெளியிட்டு வருகின்றன. பழைய காலத்து ஐரோப்பியப் பெரும் மன்னர் அல்லது அரசியல் நிபுணர் யாராவது ஒருவர் மறுபடி திரும்பி வந்து இந்த அபிப்பிராயத்தைக் கேட்டால் வியந்து வருத்தப்படுவார். அமெரிக்காவுக்கு ஐரோப்பா அடிமைப் பட்டுப் போயிற்று என்று கேட்பார். மற்றொரு ராஜ்யத்தின் ராணுவத்தைத் தருவித்து வைத்துக் கொண்டு, அதையே நம்பியிருந்தால் சுதந்திரம் ஏது என்று கேட்பார்.

அடிமைத்தனத்தின் வேகம் இரு பட்சத்திலும் பாதிக்கும். ஐரோப்பியச் சிக்கலில் சிக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்காவும் தன் ஆத்ம சுதந்திரத்தை இழந்திருக்கிறது. பயம் என்கிற சமுத்திரத்தில் காற்றால் அடிக்கப்பட்ட பாய்மரக்கப்பலைப் போல் சங்கடப்படுகிறது.

பாண்டுங்கில் நடந்த கிழக்குலக மகாநாட்டில் ஏகோபித்து ஒப்புக்கொண்ட தீர்மானம் எவ்வளவு முக்கியமானது என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். ஆசிய கண்டம் அமெரிக்க ராணுவத்துக்கு அடிமைப் பட்டுப் போகாமல் இருக்க வேண்டும். அடிமைத்தனம் உள்ளத்தில் ஸ்தானம் வகிக்கிறது.

"அவரவர் இறையவர் குறைவிலர். ஆனால் அவரவர் விதிவழி அடைய நான் நிற்கிறேன்" என்கிறது அமெரிக்கா, ஆழ்வாரின் பாட்டின்படி!

"ஐரோப்பிய நாடுகள் எல்லாம் சுதந்திரமாகவே இருக்கின்றன. அதற்குக் குறைவில்லை. ஆனால் உங்கள் சுதந்திரத்தின் பயனைத் தருவதற்கு

காவல் இருக்கிறேன்'' என்று அமெரிக்கா ராணுவ தளவாடங்களை வைத்திருக்கிறது.

மகாவிஷ்ணுவின் ஸ்தானமே அமெரிக்கா அடைந்து விட்டது. அவரவர் அறிவு அவரவரைக் காப்பாற்றும். அறிவு குறைந்தால் அடிமை நிலைமை காத்திருக்கிறது. இந்தியாவின் அநுபவத்தை ஆசியா முழுதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருத்துறைப்பூண்டி மகாநாடு

திருத்துறைப்பூண்டியில் நடந்த வைபவத்தைப் பற்றிச் சென்ற இதழில் செய்திக் கதையாகவும் படங்களுமாகவும் எழுதப்பட்டது. சொத்தும் பாக்கியமும் ஆண்டவன் நமக்குக் கொடுத்தான். அத்துடன் பிறருக்குக் கொடுக்கும் சக்தியையும் அவன் நமக்குத் தந்திருக்கிறான். இதுவே*கீதையில் பகவான் சொன்னது. '''இந்தக் கொடை சக்தியைப் பயன்படுத்திக் கொள். இது உனக்கு ஒரு காமதேனுவாகும்' என்று ஆண்டவன் சொல்லி மனிதனை ஆசிர்வதித்திருக்கிறான். மிக முக்கியமான மந்திரம். நிலத்தை உழும் குடியானவனுக்கு மிராசுதாரர்கள் தங்களுக்குள்ள பூமியில் ஒரு சிறு பகுதியை 'இது உனது' என்று பூரண சுதந்திரச் சொத்தாகக் கொடுத்து விட்டு,பாருங்கள்'' என்றார் ராஜாஜி திருத்துறைப்பூண்டியில்.

பூதானமானது தஞ்சை மிராசுதாரர்களுக்கு மட்டுமல்ல, நிலம் படைத்த எல்லா பாக்கியவான்களுக்கும் ஒரு காமதேனுவாகும். இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் பொருளுக்குக் காமதேனு என்று பொருள்.

---

*ஸஹ யக்ஞா: ப்ரஜா: ஸ்ர்ஷ்ட்வா
புரோ வாச ப்ரஜாபதி:
அனேன ப்ரஸவிஷ்யத்வம்
ஏஷவோ ஸ்த்விஷ்ட காமதுக்

[கீதை – அத்தியாயம் 3; சுலோகம்: 10.]

அட்டைப்பட விளக்கம்

மண்ணெண்ணெய் விளக்கு

இந்த யுகத்தின் நாகரிகங்களிலும் ஓரளவு குடும்ப சுதந்திர வாழ்க்கையை ஆலைப் பிசாசுக்குள் சிக்கிக் கொள்ளாமல் காப்பாற்றி, மக்கள் முன்னேறலாம் என்பதை மகாத்மா காந்தி அடிக்கடி வற்புறுத்தி வந்தார். யந்திரங்களில் குற்றமற்ற வகை ஒன்று; பிசாசு வகை ஒன்று. உதாரணமாக எடுத்துச் சொல்லுவார்: ''பைஸிகிளை நான் எதிர்க்கவில்லை. அது யந்திரமாயினும் மக்கள் வாழ்க்கைக்கு அதனால் சேதமில்லை. தையல் மிஷினை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதையும் ஒருவன் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு பிறரை அண்டாமலும் முதலாளியை எதிர்பார்க்காமலும் வாழ்க்கையை நடத்தலாம். இத்தகைய யந்திரங்களை நான் ஒருபோதும் ஆட்சேபித்ததில்லை'' என்று அடிக்கடி சொல்லுவார். மண்ணெண்ணெயும் மண்ணெண்ணெய் விளக்கும் இத்தகைய குடிசைப் பொருள்கள். ஏழையின் வாழ்க்கைக்கு வெளிச்சம் தந்து உதவும் பொருள்கள். புகை போக்கி வைத்த இந்த விளக்குகளை மக்கள் உபயோகிப்பதை மகாத்மாஜி ஆட்சேபிக்க மாட்டார்.

காற்றில் ஏன் விளக்கு அணைகிறது? எண்ணெய் எரிவதற்கு ஒரு வெப்ப நிலை வேண்டியிருக்கிறது. இது காற்றினால் திடீரென்று குறைந்து விட்டால் தீ அணைந்து விடுகிறது. திரியைப் பற்ற வைத்து பர்னர் கூண்டுக்குள் தாழ்த்திய பின் திரியில் ஏறிய எண்ணெய் ஆவி ஆகிறது. அந்த எண்ணெயாவி பர்னருக்குள் தனக்கு வேண்டிய சுத்தக் காற்றுடன் கலந்து கொண்டு பர்னருக்கு மேல் சென்று கொழுந்து விட்டு எரிகிறது. பர்னர் கூண்டில் சிறு துவாரங்கள் இருக்கின்றனவே அவற்றின் வழியாகச் சுத்தக் காற்று உள்ளே சென்று தீயை வளர்த்து வருகிறது. எண்ணெயாவியுடன் அதற்கு வேண்டிய காற்றும் நன்றாகக் கலந்திருக்கிறபடியால் புகையில்லாமல் வெளிச்சம் தந்து எரிகிறது. விளக்கில் எரிந்த காற்றானது சிம்னி வழியாக மேல் எழுந்து வெளிச் செல்லுகிறது. சிம்னியை விட்டு வெளியே போகும் வழியில் பக்கத்தில் உள்ள இரண்டு தகரக் குழாய்களிலுள்ள காற்றுக்குத் தன் உஷ்ணத்தைத் தருகிறது. அந்தக் குழாய்கள் விளக்கின் திரியண்டை கீழே போய்ச் சேருகிறபடியால், அவற்றிலுள்ள சூடு ஏறிய காற்றானது திரியின் வெப்பநிலை தாழாமல் பத்திரமாகக் காத்து வருகிறது. இதுவே ஹரிகேன் லாந்தர் அணையாமல் எரியும் ரகசியம்.

நம்முடைய அட்டைப் படத்தில் ஒரு மங்கை காற்றுக்கு அணையா விளக்கு ஒன்றைப் பொருத்துவதைச் சித்திரிக்கிறார் நமது ஓவியர் 'மணியம்'.

என்ன சேதி?

தஞ்சையில் பி. ஸி. ஜி.

க்ஷயரோகப் பரிட்சார்த்தமாக ஒரு பி. ஸி. ஜி. உத்தியோகஸ்தர் தஞ்சையில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தையை அழைத்து க்ஷயரோக சம்பந்தமான 'டுபெர்குலின்' ஏற்றினார். குழந்தை ஜுரம் கண்டு இறந்து விட்டது. ஜில்லா டாக்டர் ஓடிச் சென்று சவப் பரிட்சை செய்து இது பி. ஸி. ஜி. சம்பந்தமான மரணம் அல்ல என்று தீர்ப்புக் கொடுத்து விட்டார். இந்த விதமான 'எக்ஸ் பார்ட்டி' தீர்ப்புக்களை அடைவது எளிது. அவற்றை ராஜாஜி ஒப்புக்கொள்ள மாட்டார். அவசரம் அவசரமாக விஷம் ஏற்றுவதும் அவசரம் அவசரமாகத் தீர்ப்புக் கொடுப்பதும் சகஜமாகப் போய் விட்டது. இந்த ஊசி போடும் காரியத்தைத் தஞ்சையில் அந்தப் பெண் குழந்தைக்கு அன்று செய்யாதிருப்பின் இன்று அந்தப் பெண் உயிரோடிருந்திருக்கும். விஷச் சத்துக்களை ஏற்றுவதற்கு முன் உடல் நிலை என்ன என்பதை விசாரித்து அறிவது அதை ஆளும் அதிகாரிகளின் கடமை. விபத்துக்குப் பிறகு, காரணம் ஊசியல்ல என்று சொல்லி விடுவது போதாது. உள்ளே யிருக்கும் நோய்களைக் கிளப்பி அதிகப்படுத்தும் சுபாவம் இந்த விஷச் சத்துக்களுக்கு உண்டு என்பதை விஞ்ஞானிகள் அறிவார்கள்.

ருஷ்யாவின் கல்வி முறை

ருஷ்யாவில், பதினாயிரக் கணக்கான பள்ளிக்கூட மாணவர்களை ஒரு வருஷம் விவசாயத்தில் போட்டு முழு வேலையும் செய்யச் சொல்லி வருகிறார்களாம். சில இடங்களில் ஆயிரக் கணக்கான மாணவர்களை அறுவடை காலத்தில் அந்தக் காரியத்தில் ஈடுபட்டு அனுபவம் பெறுவதற்காக அனுப்புகிறார்களாம். இதைப் பிரசுரித்து இதுபற்றி மிக்க வருத்தம் காட்டுகின்றன சில பிரிட்டிஷ் பத்திரிகைகள். "ஐயோ! இப்படிக் குழந்தைகளைப் பலாத்காரமாக வேலையில் போட்டு அடிமைப் படுத்துகிறார்களே!" என்று இரங்கி எழுதுகின்றன. ருஷ்யாவில் பயிர் வேலை கெட்டுப் போயிருக்க வேண்டும், அதனால்தான் இப்படிச் செய்கிறார்கள் என்பது மேற்கத்தியாருடைய ஊகம். இது எவ்வாறாயினும் கல்விமுறை விஷயத்தில் ராஜாஜியைப் போலவே ருஷியாவிலும் எண்ணுகிறார்கள் என்றே தோன்றுகிறது.

பாலாற்றுப் பாலம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை உதவி மந்திரி ஸ்ரீ அனகேசன் செங்கல்பட்டுக்கு அருகில் பாலாறு மீது புதிதாகக் கட்டப்பட்ட பாலத்தைத் திறந்து வைத்தார். இதன் பயனாக இனி வருஷத்தில் 365 நாட்களும் ஏதொரு தடையுமின்றி பஸ், கார், லாரி, மக்கள் யாவரும் போய் வரலாம். முன்பெல்லாம் சில நாட்கள் பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி, போக்குவரத்தைத் தடைப்படுத்தி வந்தது. சென்னையையும் தமிழ் ஜில்லாக்களையும் இணைக்கும் முக்கியமான சாலையில் இப்படி இடையூறு வருஷத்தில் சில நாட்கள் இருப்பது கூடப் பொறுக்கக் கூடியதல்ல. பல முக்கியமான காரியங்கள் தடைப்பட்டும், தாமதப்பட்டும் வந்தன. இந்தப் புதிய பாலம் அந்தக் குறையை அறவே நீக்கி விட்டது.


இந்தப் புதிய பாலம் 1951ம் ஆண்டு கட்ட ஆரம்பித்து, இப்பொழுதுதான் பூர்த்தியாகி யிருக்கிறது. இதற்குக் காரணம் நமது என்ஜினீர்கள் பாலம் கட்டும் கலையில் புது முறையை இங்கு கையாண்டிருப்பதுதான். இப் புதுமுறை காரணமாக, இந்தப் பாலத்தின் மீது எவ்வளவு பாரம் போனாலும், வைத்தாலும், பாலத்தின் எப்பகுதியிலும் விரிசல்கள், பிளவுகள் ஏற்படாது. இத்தகைய முறையில் கட்டப்பட்ட பாலம் உலகிலேயே இதுதான் இரண்டாவதாம்.

விழாவுக்குத் தலைமை வகித்த மராமத்து இலாகா மந்திரி ஸ்ரீ சண்முக ராஜேசுவர சேதுபதி அவர்கள் "தண்ணீர் இல்லாத பாலாற்றின் மீது பாலம் கட்டி ஆகி விட்டது. இனித் தண்ணீரும் வரலாம்" என்று கூறினார். ஏதோ பாலம் கட்டுவதற்காகவே பாலத்தில் தண்ணீர் ஓடாமல் காத்திருந்தது போலும்! எப்படியாயினும் அவருடைய முயற்சியினால் மைசூருக்கும் நமது ராஜ்யத்துக்கும் பாலாற்றுத் தண்ணீர் சம்பந்தமாக நடைபெற்று வரும் தகராறு நீங்கி வட ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் ஓடும் பாலாற்றில் தண்ணீரும் ஓட ஆரம்பித்தால் எல்லோரும் மகிழ்வார்கள்.


கல்வித் திருப்பணி

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலை விட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்


பிரார்த்தனை !


"ஆண்டவனே! இந்த நேரு என்பவர் ருஷ்யாவிலிருந்து க்ஷேமமாகவும் அவ் விடத்திய பற்று ஏதும் ஒட்டிக் கொள்ளாமல் சுத்தமாகவும் பாபமற்றவருமாகத் திரும்பி வர வேண்டும் ஆண்டவனே!
ய: பர்யகாத் சுக்ரம் அகாயம் அவ்ரணம்
அஸ்நாவிரம் சுத்தம் அபாபவித்தம்
என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி அவருடைய சுத்த உள்ளம் அசுத்தப்படாமல் திரும்பி வரவேண்டும்! இது எங்கள் பிரார்த்தனை. கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார். இந்த அணுகுண்டுகளிலும் ஆண்டவன் உளன். இந்த அர்ச்சாவதார மூர்த்தியில் அவனை நாம் வழிபடுகிறோம். ஓ அணுவே, ஓ வடவாக்நியே, ஓ ஆலாகலமே, உன் அடி பணிந்து வழிபடுகிறோம்."
ஜான் புல்
அமெரிக்க மாமா


மருண்ட பார்வை!



அபேதத்தில் பேதம்



அமெரிக்காவின் தத்துவம் ஆயுதபலத்தின் மூலம் சாந்தி; ருஷ்யாவின் நோக்கம் சமாதானத்தின் மூலம் பலம்.



இந்திய சர்க்கார் பல பிரும்மாண்டமான நீர்த் தேக்கங்களையும், ஆராய்ச்சி நிலையங்களையும் நிறுவியிருக்கிறார்கள். பத்திரிகையாளர்களை அழைத்து அவைகளைச் சுற்றிக் காண்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்திய சர்க்காரின் அழைப்புக்கிணங்க, சென்னையிலிருந்து 'கல்கி' பத்திரிகையின் உதவி ஆசிரியர் திரு கி. மகாலிங்கம் (பகீரதன்) அவர்களும், 'ஹிந்து' பத்திரிகையிலிருந்து திரு எஸ். சீனிவாசன் அவர்களும், 'இந்தியன் எக்ஸ்பிரஸி'லிருந்து திரு வி. எஸ். கணபதிசர்மா அவர்களும் வடநாட்டிலுள்ள ரூர்கி பொறி இயல் கல்லூரிக்கும், பொறி இயல் கழகத்துக்கும், டேராடூனிலுள்ள வன ஆராய்ச்சி நிலையத்துக்கும், பக்ரா நங்கல் நீர்த் தேக்கத்துக்கும், உத்தரப் பிரதேசம், காஷ்மீர், பஞ்சாப், பெப்சுவிலுள்ள அபிவிருத்தித் திட்ட வேலைகளையும் சென்று பார்வையிடப் போகிறார்கள். ஜூன் மாதம் 12-ந் தேதி இம்மூவரும் சென்னையிலிருந்து டில்லிக்குப் புறப்பட்டனர். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்குக் 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்களும், 'கல்கி' காரியாலய உத்தியோகஸ்த நண்பர்களும் வந்திருந்து அவர்களைக் குதூகலத்துடன் வழியனுப்பி வைத்தனர்.

இந்தப் பிரயாண சம்பந்தமாக 'பகீரதன்' எழுதும் தொடர் கட்டுரைகள் 'கல்கி' இதழ்களில் வெளியாகும்.


ணியங் கோடி தரும் என்று பாடினார் பாரதியார். ஒருவனுக்கு மட்டுமல்ல; பல ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்குத் திருச்சி நகரத்திலே அறிவு புகட்டி வருகிறது இ. ஆர். உயர்நிலைப் பள்ளி. திருச்சி வட்டாரத்திலே இந்தக் கல்வி நிலையம் நல்ல பெயருடன் சிறந்து விளங்குகிறது.


திருச்சி சிந்தாமணியிலுள்ள இந்தப் பள்ளிக்கூடத்துக்கு மே மாதம் 23ந் தேதி ஒரு கடும் சோதனை ஏற்பட்டது. இயற்கையின் உற்பாதத்தினால் இந்தப் பள்ளியின் அழகழகான கட்டடங்கள் தீக்கிரையாகி அலங்கோலமாகிவிட்டன. அறிவுக் கோயில் அக்னி தேவனின் கொடும் பார்வையினால் சிதைந்து நிர்மூலமாகி விட்டது. இந்தச் சிதைந்த பள்ளிக்கூடத்தை உடனே புனர் நிர்மாணம் செய்தாக வேண்டும். விரைவில் அந்தப் பள்ளிக்குக் கட்டடங்கள் கட்டியாக வேண்டும்.

இந்தக் கல்வி நிலையத்தைப் புதுப்பிக்கும் பணியை நிறைவேற்றத் திருச்சி நகரத்திலுள்ள பிரமுகர்கள் முன் வந்திருக்கிறார்கள். பிரபல தொழில் அதிபர் திரு வி. சேஷசாயி அவர்களின் தலைமையில் நிதிக் குழு ஒன்று இயங்கி வருகிறது.

இதற்கு உதவும்படி பொது மக்களுக்கும், பள்ளியின் பழைய மாணவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இந்தத் திருப்பணிக்கு உதவுவதனால், திருச்சியிலுள்ள இளம் சிறுவர்களின் அறிவுப் பசியை நீக்குவதுடன் திருச்சி வட்டத்தில் பல்லாண்டுகளாகத் திறமையோடு நடந்து வரும் ஒரு கல்வி ஸ்தாபனத்துக்கு உதவிய திருப்தியும் ஏற்படும்.


டிரக் டயர்


கார் டயர்



73. கட்டுண்டான்

தேவர்களுக்குச் சமான வாலிப வீரனை அக்ஷன் எட்டுக் குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஏறிப் போவதை வால்மீகி முனிவர் வெகு அழகாகச் சித்திரிக்கிறார். ராமாயணத்தில் காடுகளின் அழகையும், வீரர்கள் யுத்தம் செய்யும் அற்புதச் செயல்களையும், போரின் வேகத்தையும் முனிவர் சித்திரித்திருப்பதை நான் மொழி பெயர்த்துக் காட்ட இயலாது. காடு மிக அழகாக இருந்தது, அல்லது யுத்தம் மிகக் கோரமாக நடந்தது என்று இவ்வளவுதான் சொல்ல முடியும். முனிவருடைய சித்திரமோ, பொருள்களின் அழகுக்குத் தகுந்த சுந்தர தொனிகொண்ட மொழிகளும், யுத்தத்தைத் தொனித்துக் காட்டும் கம்பீர ஒலி நிறைந்த மொழித்தொடர்களும், காட்டைப் போலவே யுத்தத்தைப் போலவே ஒன்றின் மேல் ஒன்றாகக் குவிந்து விழுந்து, மனத்தைக் கொள்ளை கொண்டு போகும் நடை. யுத்தங்களில் இரு தரத்தாருடைய செயல்களையும் அற்புத கம்பீரத்துடன் வர்ணிப்பது வால்மீகி முனிவருடைய தனிச் சக்தி. ராவணனுடைய அருமைக் குமாரன் அக்ஷனுக்கும் ஹனுமானுக்கும் நடந்த யுத்தத்தைச் சொல்லும் விஸ்தார வர்ணனையை நான் தமிழ்ப் படுத்திச் சொல்லப் போவது முடியாத காரியம்.

தவத்தால் பெற்ற தங்கமய ரதத்தில் ராவண குமாரன் ஏறிச் சென்றான். கல் தோரணத்தின் மேல் பயமின்றிக் கம்பீரமாக உட்கார்ந்திருந்த ஹனுமானைக் கண்டான். காலாக்கினி போல் சுடர் விட்டு எரிந்து நின்ற அந்த உருவத்தைக் கண்ட அக்ஷனுடைய உள்ளத்தில் 'இவன் எனக்குத் தகுந்த பகைவன்' என்ற எண்ணம் உண்டாகி, அவன் தன் வீரத்தைப் பெருக்கிக் கொண்டான்.

இளம் வீரன் மூன்று கூரிய பாணங்களை எய்தான். அவை ஹனுமானுடைய உடலில் பட்டு ரத்தம் பெருகிற்று. ரத்தம் பெருகப் பெருக மாருதியின் வீரம் வளர்ந்தது. முகத்தின் பொலிவு கொழுந்து விட்டு எரிந்தது. வாலிப அரக்கனுடைய வீரத்தைக் கண்டு ஹனுமானும் மிக மகிழ்ச்சியடைந்தான்.

போர் முற்றி இருவருக்குமிடையில் கடும் யுத்தம் நடந்தது. அம்புக் கூட்டம் மேகங்கள்போல் ஆகாயத்தில் கிளம்பி மாருதியை மூடின. மேலேமேல் மாரி பெய்வது போல் அம்பு மழை ஹனுமானுடைய கல் போன்ற தேகத்

தின் பேரில் பொழிந்தது. ஆகாயத்தில் கிளம்பி ஹனுமான் அற்புத முறையில் பாணங்களுக்கிடையில் சஞ்சரித்து அக்ஷனைத் தாக்கினான். வானத்தில் மேகங்களைக் காற்றானது சிதறியடிப்பது போல் அம்புக் கூட்டங்களை மாருதி லட்சியம் செய்யாமல் தன் அற்புத சஞ்சாரங்களால் சிதறியடித்தான். ராக்ஷச குமாரனுடைய சாமர்த்தியம், வீரம், பொறுமை சாவதானம் இவற்றைப் பார்த்து "ஐயோ, இவனைக் கொல்ல வேண்டுமே!" என்று துயரப்பட்டு ஹனுமான் வெகு நேரம் யுத்தத்தை நீடித்து நடத்தினான். அரக்கனுடைய பலம் பெருகிக் கொண்டே போயிற்று. முடிவில் ஹனுமான் மனத்தை உறுதி செய்து கொண்டு அரக்கனை வதம் செய்யத் தீர்மானித்தான்.

முதலில் அக்ஷனுடைய தேரை ஒடித்துத் தீர்க்க வேண்டும் என்று ஹனுமான் நிச்சயித்து, அதன்மேல் திடீர் என்று முழு வேகத்துடன் பாய்ந்தான். தேர் பொடியாகி விழுந்தது. ஏர்க்கால் முறிந்து, கூடுகவிழ்ந்து, நாசமாகிக் குதிரைகள் மாண்டு தேரின்றித் தரையில் நின்றான் அரக்க ராஜ குமாரன்.

இதன் பின்னும் அவன் தயங்காமல் வில்லும் கத்தியுமாக ஆகாயத்தில் கிளம்பினான். கிளம்பி மாருதியைத் தாக்கினான். இருவருக்கும் பெரும் போர் ஆகாயத்தில் நடந்தது. முடிவில் அக்ஷன் எலும்பெல்லாம் ஒடிந்து, நசுக்கப்பட்டுக் கீழே விழுந்து மாண்டான்.

* * *

ராக்ஷச குமாரன் வானரத்தால் கொல்லப்பட்டான் என்று ராவணன் அறிந்து, அவன் இதயம் துடித்தது.



கிளம்பிய ரோஷத்தை அடக்கித் தன் உள்ளத்தை ஒரு நிலையில் வைத்துக் கொண்டு இந்திரனுக்குச் சமான வீரனை தன் மகன் இந்திரஜித்தை அழைத்தான்.

"எல்லா அஸ்திரங்களையும் நன்றாகப் பயின்று அடைந்திருக்கிறாய். தேவாசுரர்களை யுத்தத்தில் வென்றிருக்கிறாய். பிதா மகனைப் பூஜித்து அவரிடமிருந்து பிரும்மாஸ்திரம் பெற்றிருக்கிறாய். உன்னை எதிர்த்து நிற்கக் கூடியவர்கள் உலகத்தில் யாருமில்லை. சோர்வு என்பதை அறியாதவன் நீ. அறிவில் சிறந்தவன் நீ. தவத்தால் சக்தி யடைந்திருக்கிறாய். நீ செய்ய முடியாதது ஒன்றில்லை. காரியங்களைச் சரியாக யோசித்துச் செய்வதில் உனக்கு நிகர் யாருமில்லை. நான் அனுப்பிய கின்னரர்கள் ஜம்புமாலி, நம்முடைய மந்திரிகளின் வீர புத்திரர்கள், சேனாபதிகள் ஐவர், உன் தம்பி அருமை அக்ஷன்—இவ்வளவு பேர்களும் மாண்டார்கள். நீ தான் இந்தச் சத்துருவை வென்று சிறைப்படுத்தும் வல்லமை கொண்டவன். சேனா பலத்தால் இவனை வெல்ல முடியாது. கிட்ட நெருங்கிக் கை கலந்து யுத்தம் செய்வதும் இவனிடம் செல்லாது. நன்றாய் யோசித்துச் செய்ய வேண்டியதைச் செய்து, நீ இவனை எதிர்த்து வெற்றியுடன் திரும்பி வா. தவத்தால் நீ பெற்றிருக்கும் அஸ்திரமே இந்தச் சமயத்தில் பயன்படும். உன் புத்தியைச் சிதற விடாமல் யுத்தம் செய். வெற்றியுடன் திரும்பி வருவாய்" என்றான்.

• • •

தந்தையின் சொல்லை ஏற்றுக் கொண்டு தேவப் பிரபாவம் பெற்ற இந்திரஜித்து தந்தையை வலம் செய்து வணங்கி ஆசி பெற்றுக் கொண்டு தைரியமாகவும் உற்சாகமாகவும் அசோகவனத்தை நோக்கிச் சென்றான்.

கோரப் பற்கள் விளங்கும் நான்கு சிம்மங்கள் பூட்டிய தேரில் ஏறி நின்று வில்லின் நாணை இழுத்து சப்தம் செய்து கொண்டு ஹனுமான் இருந்த இடம் சென்றான். பருவகால ஓசை செய்தது அவன் தேர். தாமரை இலையைப் போன்ற அவனுடைய அகன்ற கண்களில் வெற்றி எழில் திகழ்ந்தது.

ராக்ஷசேந்திர குமாரனுடைய தேர் தான் இருக்கு மிடத்தை நோக்கி வேகமாக வருவதைப் பார்த்த ஹனுமான் பெரு மகிழ்ச்சி யடைந்தான். யுத்தத்தில் நிபுணனை இந்திரஜித்தும் ஹனுமானை உத்தேசித்து வில்லை வளைத்துக் கூர்மையான பாணங்களையும் ஆயத்தமாக வைத்துக் கொண்டான்.

பெரும் யுத்தம் நடக்கு மென்று அறிந்து நாக யக்ஷ சித்தர்கள் ஆகாயத்தில் வந்து சேர்ந்தார்கள்.

இந்திரஜித்தைக் கண்டதும் ஹனுமான் கர்ஜனை செய்து தன் பெரும் சரீரத்தை இன்னும் பெருக்கிக் கொண்டான். ராக்ஷச வீரன் பேசாமல் அம்புகளைத் தொடுத்து எய்தான். தேவாசுர யுத்தத்தைப் போல் அம்புமாரி பொழிய ஆரம்பித்தது.

ஹனுமான் ஆகாயத்தில் கிளம்பி அற்புத வேகத்துடன் சஞ்சரித்து மின்னலைப் போல் வந்த கூரிய அம்புகளை விலக்கினான். அரக்கனுடைய பட்சத்தி லிருந்து கிளம்பிய பேரிகை நாதத்தை முதலிய கோஷங்களுக்குச் சமமாக வானர வீரன் தன் கர்ஜனைகளால் திக்குகள் எதிரொலிக்கச் செய்தான். இப்படி இரு வீரர்களிடையே நடந்த யுத்தம் பார்த்தவர்கள் பிரமிக்கும் வகையில் வளர்ந்து கொண்டே போயிற்று. இருவருடைய சாமர்த்தியமும் சமமாகவே இருந்தது.

எத்தனை பாணங்கள் பட்டும் ஹனுமானுடைய சக்தி குறையவில்லை. அதைப் பார்த்து, 'இந்த வானரம் என் அம்புகளால் தோல்வியடையப் போவதில்லை. என் பாணங்கள் இவனைக் காயப் படுத்துவதாகக் காணவில்லை. தந்தை சொன்னது உண்மை. பிரம்மாஸ்திரம் பிரயோகித்தே இவனைக் கட்டி விட வேண்டியது' என்று ராக்ஷசன் தீர்மானித்தான்

ராக்ஷச குமாரன் பிரம்மாஸ்திரத்தை எய்தான். அது வானர வீரனைத் தாக்கியதும் அவன் கட்டுண்டு செயலற்றுப் போனான்.

'ஓகோ! பிதாமகருடைய அஸ்திரத்தால் கட்டுண்டேன்' என்று மாருதி உடனே தெரிந்து கொண்டான்.

பிரம்மாவிடம் மாருதியும் வரம் பெற்றிருந்தான். அப்போது அதை நினைவுக்குத் தந்து கொண்டான். 'ஒரு முகூர்த்த நேரமே இது என்னைக் கட்டி நிற்கும். இதனால் எனக்கு யாதொரு ஆபத்துமில்லை. கட்டுப்பட்டு நிற்கும் காலத்தில் அரக்கர்கள் என்ன செய்வார்கள் பார்க்கலாம். தூதனாக வந்த என் வேலை ஒருவேளை இதனாலேயே பூர்த்தியாகும்' என்று யோசித்து, பிதாமகன் தனக்குச் சிரஞ்சீவி வரம் தந்த போது அவன் இட்ட ஆக்ஞையின்படி பிரம்மாஸ்திரத்துக்கு அடங்கித் தைரியமாகவும் செயலற்றும் தரையில் விழுந்தபடி கிடந்தான்.

ஹனுமான் விழுந்து வீழே செயலற்றுக் கிடக்கிறான் என்பதைக் கண்டதும் அது வரையில் பயந்து தூர நின்ற அரக்கர்கள்எல்லாரும் அவனைச் சுற்றிக் கொண்டார்கள். மாருதியைத் தாறுமாறாகத் திட்டிப் பேரிரைச்ச விட்டுக் கொண்டும், தங்களுடைய ராஜகுமாரனைப் புகழ்ந்தும் கூத்தாடினார்கள்.

" துண்டு துண்டாக வெட்டுவோம்! தின்று விடுவோம்! ராவணனிடம் இழுத்துப் போவோம்!" என்று பலவாறாகக் கூச்சலிட்டார்கள்.

பிறகு சிலர் "இவன் பாசாங்கு செய்வான். திடீர் என்று கிளம்பி நம்மைத் தாக்குவான்" என்று பயந்து சணல் கயிறும் தென்னங் கயிறும் கொண்டு வந்து ஹனுமானை நன்றாகக் கட்டி விட்டு, "கட்டி விட்டோம். இழுத்துப் போகலாம் ராவணேசுவரனண்டை" என்று அவர்கள் மிக மகிழ்ந்து கூச்சலிட்டார்கள்.

ராக்ஷசக் கூட்டம் இப்படிச் செய்வதைத் தடுக்க அவகாசம் பெறாத இந்திரஜித்து மிக வருத்தப்பட்டான்.

'ஐயோ நான் செய்தது வீணாகப் போயிற்றே! இந்த மூடர்களுக்கு மந்திர ரகசியங்கள் தெரியவில்லை. இப்படி இவர்கள் கயிறும் சாக்குப் பைகளும் போட்டுக் கட்டியபின் பிரம்மாஸ்திரத்தின் சக்தி ஒழிந்து போயிற்று. ஸ்தூலப் பொருள்களால் கட்டிய பின் மந்திரக் கட்டு தானாக அவிழ்ந்து போயிற்று. ஹனுமான் நாரும் கயிறும் போட்டுக் கட்டிய கட்டுகளை ஒரு கணத்தில் அறுத்து எறிந்து எழுந்து விடுவான். மறுபடி பிரம்மாஸ்திரம் பிரயோகிக்க முடியாது' என்று எண்ணி வருத்தப் பட்டான்.

மாருதியும் நிலைமையை அறிந்து கொண்டான். பிரம்மாஸ்திரத்தின் கட்டு நீங்கிப் போயிற்று என்றும் கயிறுகளால் கட்டப் பட்டதுதான் மிச்சம் என்றும் அதைத் தன் தேக பலத்தால் ஒரு கணத்தில் விலக்கிக் கொள்ளலாம் என்பதையும் உணர்ந்தான். ஆனபோதிலும் தன்னைக் கட்டியிழுத்துச் செல்லட்டும், ராவணனைக் கண்டு பேச அவகாசம் ஏற்பட்டது என்று நிச்சயித்து, வேண்டுமென்று பேசாமல் அவர்கள் செய்த கொடுமைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு செயலற்றே இருந்தான். அடித்தார்கள், திட்டினார்கள், ராக்ஷச ஸ்திரீகளும் பாமரர்களும் பரிகாசம் செய்யத் தெருவழியாக இழுத்துச் சென்றார்கள்.

விப்ர நாராயணா

ஸோமாஸ்

" கதிரவன் குணதிசைச்
சிகரம் வந்தணைந்தான்
கனஇருள் அகன்றது
காலையம் பொழுதாய்
மதுஇருந் தொழுகின
மாமல ரெல்லாம்
வானவர் அரசர்கள்
வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர்
இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும்
பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல்
போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி
எழுந்தரு ளாயே"

என்னும் அற்புதத் திருப்பள்ளியெழுச்சிப் பாசுரத்தைப் பாடிப் பாருங்கள். இது மாதிரி இன்னும் எத்தனை பாசுரங்கள்! பக்திச் சுவை கனி சொட்டச் சொட்டப் பரந்தாமனைப் பல தீந்தமிழ்ப் பாசுரங்கள் பாடி வாழ்த்திய தொண்டரடிப் பொடியாழ்வார் பக்தர் உலகத்துக்குப் புதியவரல்லர்; தமிழ்ப்பட உலகத்துக்கும் அவர் புதியவரல்லர்; விப்ர நாராயணா என்னும் பெயரும் அவருக்குப் புதியதல்ல.

நான் சமீபத்தில் ஒரு ரஸிக நண்பரைச் சந்தித்தேன். "என்ன ஸார், இப்பொழுதெல்லாம் பழைய புராணக் கதைகளெல்லாம் மீண்டும் தோன்ற ஆரம்பித்து விட்டன!" என்று சற்று ஏளனமாகச் சொன்னேன்.

அவருக்கு மகா கோபம் வந்து விட்டது. "என்ன ஸார், அதில் குடிமுழுகிப் போய் விட்டது! எத்தனையோ தடவை, எத்தனையோ வித்வான்கள், எத்தனையோ மேடைகளில் பாடிய தோடி, கல்யாணி, பைரவி முதலிய ராகங்களைத்தானே மீண்டும் மீண்டும் எல்லா வித்வான்களும் பாடுகிறார்கள்! அது மட்டும் தவறில்லையா! அதைப் போலத்தான் இதுவும்! ஏதோ பொழுதுபோக்காகப் படத்தைப் பார்ப்பீரா! அதை விட்டு விட்டு ஆராய்ச்சியில் இறங்கி விடுகிறீரே!" என்று சீறிவிழுந்தார்.

"பேஷ்! நீர் சொல்லுவது சரிதான்!" என்று சொல்லி விட்டு நழுவினேன்.

ஸ்ரீ வைஷ்ணவ பக்தர்களில் தலைசிறந்தவரும், ஆழ்வார்கள் பதின்மரில் ஒருவரும், ஸ்ரீரங்கநாதனிடம் மாறாத நேயம் பூண்டு அகங்கனிந்த அன்பில் அனைவரையும் ஆழ்த்தியவருமான [தொண்டரடிப்] பொடியாழ்வாரின் பின்னைத் திருநாமம் விப்ரநாராயணர் என்பது.

ஸ்ரீரங்கநாதன் சேவைக்குப் பங்கம் ஏதும் வராமல் இருக்கும் பொருட்டு, பிரம்மச்சரிய வாழ்வை ஏற்று, நந்தவன ஆசிரமத்தில் ஏகாந்த வாழ்வை மேற் கொண்ட விப்ர நாராயணர், ஸ்ரீரங்கநாதனுக்குத் தீந்தமிழ்ப் பாமாலையுடன் மணம் வீசும் பூமாலையும் புனைந்து தினந்தோறும் சாத்தி வந்தார். அவர் தொண்டு பூர்த்தியாகும் நாள் நெருங்கியது. இல்லையென்றால் ஆடலழகி தேவ தேவியின் கடைக்கண் வீச்சு அவர் மீது சென்றிருக்காது; ஸ்ரீரங்கநாதன் வீற்றிருக்கும் அவரது இதய பீடத்தில் அந்த மங்கை நல்லாள் வீற்றிருக்க மாட்டாள்.

அதனால் ஏற்பட்ட விபரீத விளைவுகளைத் தத்ரூபமாகப் பார்க்க விரும்பினால், ஸ்ரீமதி பானுமதி, ஸ்ரீ நாகேசுவரராவ் நடித்த பரணியின் "விப்ர நாராயணா" தமிழ்ப் படத்தில் விவரமாகக் காணலாம்.

சீறும் நாகம் சிறு குழலிலிருந்து வரும் மோடிக்குக் கட்டுப்பட்டு ஆடுவது போல், பரம பாகவதரான தொண்டரடிப் பொடியாழ்வார், பாவையின் பார்வைக்குப் பணிந்தார்; பரந்தாமனின் பணியை மறந்தார்.


எழிலரசி தேவ தேவியாகத் தோன்றும் ஸ்ரீமதி பானுமதி, நடன அரங்கில் மனங்கவர் தோற்றங்களில் நடனமாடியதிலிருந்து கடைசி வரையில் கவர்ச்சி குன்றாமல், மெருகு குறையாமல் நடித்திருக்கிறார். அபலையாக ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்த போதும், ஆழ்வாரைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்பால் ஈர்த்தபோதும், ஆழ்வாரின் செருக்கை அடக்கி ஒடுக்க நினைத்த அவள் மனமே ஆழ்வாரிடம் லயிக்கத் துவங்கிய நிலையிலும், ராஜ தண்டனையை நிறைவேற்ற ஆழ்வார் இழுத்துச் செல்லப்பட்ட போதும், ஸ்ரீமதி பானுமதியின் நடிப்பு படத்தில் சிறந்து விளங்குகிறது.

ஆழ்வார் பாத்திரத்துக்கு ஏற்றவர் நாகேசுவரராவ்தான் என்பதில் ஐயமில்லை. ஏகாந்த நிலையில் பக்தி பரவசமும், தேவ தேவியின் முதல் சந்திப்பில் கருணையும், அப்புறம் கட்டுக்கடங்காக் காதலும், காதல் முதிர்ச்சியில் உன்மத்தமும் ஆக அவர் நடிப்பில் பல உணர்ச்சிகள் கொந்தளித்தன. இது வரையில் காதலனாகவும், காதலில் ஏமாந்தவனாகவும் தோன்றி நமக்குப் பழக்கப்பட்ட நாகேசுவரராவ் இதில் எல்லோரையும் ஏமாற்றி விடுகிறார்!

ஸ்ரீரங்கநாதன் ஆலயம், பக்தர்கள் பாசுரம் ஓதும் இன்னொலி, தொண்டரடிப் பொடியாழ்வாரின் பக்தி வெள்ளம், இவை யெல்லாம் பாகவத உத்தமர்களைப் பரவசப் படுத்தும் முறையில் அமைந்திருக்கின்றன.

படம் பார்த்து முடிந்ததும், என் ரஸிக நண்பர் சொன்னது முற்றிலும் சரி என்று தோன்றியது. 'உலகத்தில் எது பழையது! எது புதியது!' என்றெண்ணி மனத்தைச் சந்தோஷப்படுத்திக் கொண்டேன்.

பூமியை வெட்டிக் குடைகிறார்கள்!



நம் முன்னோர்கள் செய்த புண்ணியத்தினால், காந்தி மகாத்மாவின் தவத்தினால், தேசத் தலைவர்கள் —தொண்டர்கள் செய்த பெரும் தியாகத்தினால் இந்தியா தேசம் சுதந்திரம் பெற்று! விட்டது. பரிபூரண சுதந்திரம் அடைந்து ஏழு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

சுதந்திர மில்லாத அடிமை வாழ்க்கை மிருகங்களின் அடிமை வாழ்க்கையை விட மோசமான தாகும். சுதந்திரம் இல்லாமல் வாழுகின்ற மக்களைப் பற்றி மகாகவி பாரதியார்,

"நின்னருள் பெற்றிலாதார் நிகரில்லாச் செல்வரேனும்......
அன்னவர் வாழ்க்கை பாழாம்!"


என்று கூறியிருக்கிறார். சுதந்திரம் இல்லாத சுகபோக வாழ்க்கையைக் காட்டிலும் சுதந்திரத்துடன் வாழும் வறுமை நிறைந்த வாழ்க்கையே இனியது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆகையால் எத்தகைய தியாகம் செய்யவேண்டியிருந்தாலும் உற்சாகத்துடன் செய்து தாய்நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

நாட்டு மக்களில் எல்லாருமே "உயிரைக் காட்டிலும் சுதந்திரம் பெரிது" என்று கருத மாட்டார்கள். "தேசத்துக்குச் சுதந்திரம் கிடைத்தது சரிதான்; அதனால் நாம் அடைந்த பயன் என்ன!" என்றுதான் கேட்பார்கள். மக்கள் பலரின் மனத்தில் இந்த மாதிரி எண்ணம் உதித்து விட்டால் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் சிரத்தை குறைந்து விடும். அரும் பாடுபட்டு, அளவற்ற தியாகம் செய்து, பெற்ற சுதந்திரத்தை இழக்கும் படியான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படும்.


ஆகையால், சுதந்திரம் பெற்றதனால் பயன் உண்டு என்பதை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். சுதந்திர வாழ்க்கைதான் இன்பம் நிறைந்த வாழ்க்கை என்பதை அவர்கள் அனுபவிக்கும்படி செய்ய வேண்டும். தேசத்தில் இருந்து வறுமை ஒழிய வேண்டும்; எல்லா விதப் பஞ்சங்களும் தீர வேண்டும்; செல்வம் செழிக்க வேண்டும்; இயந்திர சாதனங்கள் வளரவேண்டும்; அவற்றினால் பெறக் கூடிய பற்பல வசதிகளும் ஓங்கிப் பெருக வேண்டும்.

நம் நாட்டில் உள்ள எல்லாவிதமான பஞ்சங்கள் தீரவும், இயந்திர வசதிகள் வளரவும், நாகரிக வாழ்க்கைச் சாதனங்கள் பெருகவும் நமக்கு உதவுவதற்கு நாம் பெட்ரோலியம் எண்ணெய்ச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். பூமிக்கு அடியில் அதல பாதாளத்தில் கிடக்கும் பெட்ரோலியம் எண்ணெய்ச் செல்வத்தைக் கொண்டுவரப் பாடுபட வேண்டும். அதைச் சுத்தம் செய்து பிரித்து எடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து தெரிந்து கொள்ள முயல வேண்டும்.





பெட்ரோலியம் எடுத்துக் குவிக்கிறார்கள்!



பூமிக்கு அடியில் இருக்கும் பெட்ரோலியம் எண்ணெய்ச் செல்வத்தைப் பெறுவதற்கு உலகத்தின் பல பாகங்களில் நில ஆராய்ச்சி நிபுணர்கள் பாடுபட்டு உழைக்கிறார்கள். பூமியை வெட்டிக் குடைகிறார்கள். அப்படிக் குடைந்த பூமியிலிருந்து பெட்ரோலியம் என்ற எண்ணெயைக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களையும் ஏராளமான தொழிலாளரின் உழைப்புச் சக்தியையும் கொண்டு பெட்ரோலியம் எண்ணெய் எடுத்து மக்களுக்கு வழங்குகிறார்கள். பூமிக்கு அடியில் எண்ணெய் இருக்கலாம் என்று சந்தேகப்படும் பல இடங்களில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டுகிறார்கள். சில இடங்களில் பூமிக்கு அடியில் எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். பிறகு அந்த எண்ணெயைச் சுத்தம் செய்து பிரிக்கிறார்கள். அப்படிச் சுத்தம் செய்து பிரிக்கப்பட்ட பல வகையான எண்ணெய்கள் நமது வாழ்க்கை வளம் பெறுவதற்கு எத்தனை எத்தனையோ வழிகளில் உதவி செய்கின்றன.

பூமிக்குள் இருக்கும் எண்ணெய் நமக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு முக்கியம் அந்த எண்ணெயைச் சுத்தம் செய்யும் ஆலைகள். ஆலைகளில் சுத்தம் செய்து பிரிக்கப்பட்ட எண்ணெய்தான் நம் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது. அப்படி எண்ணெயைச் சுத்தம் செய்து பிரிக்கும் ஆலைகள் சில இந்தியாவில் இருக்கின்றன. அஸ்ஸாம் எண்ணெய்க் கம்பெனியார் தான் 1923-ம் ஆண்டில் முதன் முதல் இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையை ஆரம்பித்தனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது நாட்டில் உள்ள எண்ணெய் விநியோக ஸ்தாபனங்களான ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய்க் கம்பெனி, பர்மாஷெல் எண்ணெய்க் கம்பெனி, கால்டெக்ஸ் எண்ணெய்க் கம்பெனி ஆகிய மூன்றும் பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையை நம் நாட்டில் நிர்மாணிப்பதற்கு இந்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொண்டன.

சென்ற 1954-ம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய்க் கம்பெனியாரின் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை திறக்கப்பட்டதை நேயர்களில் பலர் அறிந்திருக்கலாம். தெரிந்து கொள்ளாதவர்கள் இப்பொழுதாவது தெரிந்து கொள்ளுங்கள். பம்பாய்க்கு அருகில் உள்ள டிராம்பே தீவில் இந்த எண்ணெய் சுத்தி செய்யும் ஆலையை நிர்மாணித்திருக்கிறார்கள். சுமார் இருநூற்று எண்பது



மணியம் —

பகீரதன்

ஏக்ரா நிலத்தில் பதினேழுரை கோடி ரூபாய் செலவில் அமைந்துள்ள இந்த எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலையை இந்திய சர்க்காரின் தொழில் உற்பத்தி மந்திரி திரு கே. ஸி. ரெட்டி திறந்து வைத்தார். இந்த ஆலைத் திறப்பு விழாவைப் பெரிய திருவிழாவாகவே உலகப் பிரசித்தி பெற்ற ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய் ஸ்தாபனத்தார் கொண்டாடி மகிழ்ந்தனர்.



கால்டெக்ஸ் எண்ணெய் ஸ்தாபனத்தாரின் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை விரைவில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பர்மாஷெல் எண்ணெய் ஸ்தாபனத்தாரின் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையின் திறப்பு விழா சென்ற மார்ச்சு மாதம் சிறப்பாக நடந்தது. அந்த ஆலையும் பம்பாய் நகரின் அருகே உள்ள திராம்பேதீவில்தான் அமைந்திருக்கிறது.


நமது நாட்டுக்கு இத்தகைய பெட்ரோலியம் தொழில்துறை முற்றிலும் புதியது. நாட்டின் முன்னேற்றத்துக்கு, நமது சுதந்திர சர்க்கார் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு பம்பாயில் அமைத்துள்ள எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலைகளின் உதவி மிகவும் அவசியம். நமது நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக அமைந்து கம்பீரமாக நிற்கும் எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலைகள், நமது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திப் பொன் கொழிக்கும் ஆலைகளாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

முப்பது கோடி ரூபாய் செலவில் பம்பாய் நகருக்கு அருகில் உள்ள திராம்பே தீவில் அமைந்துள்ள பர்மாஷெல் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையின் திறப்பு விழாவைக் கோலாகலமாக நடத்தினார்கள். இந்தியாவின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிக்கும் இந்த ஆலையைப் பாரத நாட்டின் உதவி ஜனாதிபதி திரு ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். இந்தியாவில் உள்ள பிரபல தொழில் அதிபர்களும், பிரமுகர்களும், உலகப் புகழ் பெற்று விளங்கும் பெட்ரோலியம் தொழில் துறையைச் சேர்ந்த பிரபுக்களும் இந்த ஆலையின் திறப்பு விழாவுக்குத் திரளாக விஜயம் செய்திருந்தார்கள்.

சுமார் ஐந்நூறு ஏக்ரா பூமியில் புதிதாகப் பூமிக்குள்ளிருந்து கிளம்பியது போன்ற வியப்புடன் காட்சி அளிக்கிறது திராம்பே நகரம். கந்தர்வ பூமியோ, கற்பனை உலகமோ என்று வியக்கும்படி தீபாலங்காரங்களுடன் திறப்பு விழாவன்று பர்மாஷெல் எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலை ஜகஜ்ஜோதியாகக் காட்சி அளித்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் திராம்பேத் தீவு வெறும் பாழ்நிலமாகக் கிடந்தது. எங்கு பார்த்தாலும் புல்லும் புதர்களுமாக மண்டிக் கிடந்தன. குன்றும் குழியுமாக இருந்த அந்த இடத்தில் கடல் மட்டத்துக்கும் கீழான பயங்கரப் பள்ளங்கள் வேறு இருந்தன. இப்படித் தாழ்வுற்றுக் கேட்பாரற்று மேடும் பள்ளமுமாகக் கிடந்த அந்தப் பாழ் நிலத்தில் இன்று பதின்மூன்று அடுக்குகளையுடைய எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையின் எஃகு மாளிகை வானளாவ உயர்ந்து நிற்கிறது. பர்மா ஷெல் எண்ணெய் ஸ்தாபனத்தின் புகழை உலகுக்கெல்லாம் எடுத்துக் கூறுவதுபோல உயர்ந்து நிற்கிறது. அந்த ஆலையில் தொண்டாற்றும் சிப்பந்திகளுக்காக அங்கு எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு சௌந்தர்ய நகரத்தையே பர்மாஷெல் எண்ணெய் ஸ்தாபனத்தார் நிர்மாணித்திருக்கிறார்கள்.

இத்தகைய அற்புதமான திராம்பே நகரத்தை ஏன் அமைத்தார்கள்! ஏற்கெனவே இந்தியாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை போதாது என்று கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இன்னும் சில எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளை ஏன் நிர்மாணித்திருக்கிறார்கள்! அதன் திறப்பு விழாக்கள் என்ன அவ்வளவு முக்கியம் வாய்ந்தது! பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்கள் அப்படி என்ன நம்முடைய வாழ்க்கையை வளமாக்கி உயர்த்தி விடுகின்றன!





பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்கள் நம்முடைய வாழ்க்கையில் எப்படி எல்லாமோ பின்னிக் கிடக்கின்றன. பிரிக்க முடியாதபடி பிணைந்து கிடக்கின்றன. அந்த விந்தைப் பொருளான பெட்ரோலியம் எண்ணெயைப் பற்றிய விவரங்களை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டாமா! ஆம்! ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.




1. சர்வம் எண்ணெய் மயம்

வீட்டை விட்டுக் கிளம்பித் தெருவில் அடி வைத்தவுடன் நாம் காணும் பொருள்களை எல்லாம் சற்றுக் கூர்ந்து பாருங்கள். நீள நீளமான தூசி இல்லாத சாலைகள் அமைத்திருக்கிறார்கள். கன்னங் கரேல் என்று கருநாகப் பழம் போலத் தார் போட்ட சாலை போட்டிருக்கிறார்கள். அந்த வழவழப்பான சாலையிலே 'பாம்' 'பாம்' என்று அலறிக் கொண்டு மோட்டார் கார்கள் கன வேகத்தில் ஓடுகின்றன. ஆண்களும் பெண்களும் சைக்கிளை மிதித்துக் கொண்டு விரைந்து செல்கிறார்கள். இன்னும் ஏராளமான ஜனங்களை ஏற்றிக் கொண்டு பஸ்கள் ஓடுகின்றன; நமக்கு வேண்டிய பலப்பல பொருள்களைச் சுமந்து கொண்டு லாரிகள் ஓடுகின்றன. 'டர்...ர்...ர்' 'ட...ர்...ர்' என்று காதைத் துளைக்கும்படி பெரியதாகச் சத்தம் கேட்கிறது. ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறோம். ஆகாய விமானம் ஒன்று வான வீதியில் உல்லாசமாகப் பறந்து செல்கிறது. இதை யெல்லாம் பார்த்துக் கொண்டு மேலே செல்கிறோம். 'வீல்' என்று நீளமாகக் கூவிக் கொண்டு, புகையைக் கக்கிக் கொண்டு ரயில் வண்டி ஓடுகிறது. அதையும் பார்த்துவிட்டுக் கடற்கரைப் பக்கம் காற்று வாங்கச் செல்கிறோம். குமுறிக் கொண்டிருக்கும் பயங்கரக் கடலைப் பிளந்து கொண்டு பெரிய பெரிய கப்பல்கள் ஒய்யாரமாகச் செல்கின்றன. இவைகள் எல்லாம் ஓடுவதற்கு முக்கியமாக வேண்டியது என்ன தெரியுமா! எண்ணெய்! பெட்ரோலியம் எண்ணெய்தான்!

தூசி இல்லாமல் தார் சாலைகள் அமைக்கத் தார் எண்ணெய். பஸ்கள், லாரிகள் ஓட டீசல் எண்ணெய். மோட்டார்கள் ஓட பெட்ரோல் எண்ணெய். சைக்கிளைக் கஷ்டமில்லாமல் மிதிக்க கிரீஸ் எண்ணெய். விமானம் பறப்பதற்கு ஏவியேஷன் காஸோலின் எண்ணெய். ரயில் வண்டி வேகமாகச் சுகமாக ஓடுவதற்கு லூப்ரிகேஷன் எண்ணெய். கொந்தளிக்கும் பெரிய கடலில் செல்லும் கப்பல்களுக்கு பியூயல் எண்ணெய்—இப்படி எந்த இயந்திரங்களை எடுத்துக் கொண்டாலும் அவைகள் இயங்குவதற்குஎண்ணெய்வேண்டியிருக்கிறது..


வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் வருகிறோம். களைப்புத் தீரச் சாய்மான நாற்காலியில் படுத்திருக்கிறோம். எதிரில் மேஜையும் நாற்காலியும் இருக்கின்றன. அதன் மேல் பகுதி பளபள வென்று மின்னிக் கண்ணைப் பறிக்கிறது. மரத்தைப் பாதுகாப்பதற்காக அதன் மீது பூசப்பட்டிருப்பது என்ன தெரியுமா! வார்னிஷ் எண்ணெய். கிணற்றடிக்குப் போய் முகம், கைகால்களை எல்லாம் அலம்பிக் கொண்டு திரும்புகிறோம். புஷ்பங்களின் நறுமணம் வீசுகிறது. மனத்தை மயலுறுத்துகின்ற அந்த இனிய மணம் எங்கிருந்துவருகிறது என்று திரும்பிப் பார்க்கிறோம். கை நகங்களில் பள பளவென்று சிவப்பு வர்ணம், மருதாணி போல் பூசிக் கொண்டு ஒரு கல்லூரி மாணவி வருகிறாள். அவள் கல்லூரியில் நடக்கும் நாடக டிக்கட்டை நம் தலையில் கட்ட முயலுகிறாள். அவள் கை நகத்தின் அழகை, அதில் பூசியுள்ள நகத்தின் சிவப்பு வர்ணத்தைப் பார்த்துப் பார்த்து வியக்கிறோம். எந்தக் கல்லூரியில் எந்த நாடகம் என்றுகூடக் கேட்காமல் அவள் கொடுத்த டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு கேட்ட பணத்தைக் கொடுத்து விடுகிறோம். அந்த நகச் சாயமும் கூடப் பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்தான். இந்தச் சமயத்தில் யாரோ பாடுகிறார்கள். அருமையான பாட்டு. நேர்த்தியான துக்கடாக்கள்.





ஒரு வரிக்கு ஒரு வர்ணமெட்டு. இரண்டே சங்கதி. அதன் பின்பு மற்றொரு பாட்டு. இப்படியாகக் காற்றிலே மிதந்து வந்து அந்தப் பாட்டு நம்மைப் பரவசப்படுத்துகிறது. இந்தப் பாட்டை யார் பாடுகிறார்கள்! எங்கிருந்து பாடுகிறார்கள் என்று விசாரிக்கிறோம். பக்கத்து வீட்டில் கிராமபோன் ரிக்கார்டு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம். அந்த கிராமபோன் தட்டும் பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்தான். இப்படி ஆயிரக் கணக்கான வழிகளில் ஆயிரக் கணக்கான பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்கள் நமக்கு உபயோகமாகின்றன.

வீட்டில் மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாக எரிந்து கொண்டிருக்கின்றன. நாம் குதூகலமாக இருந்து கொண்டிருக்கிறோம். திடீர் என்று மின்சாரம் நின்று, வீடு இருட்டாகி விடுகிறது. "அரிக்கனைக் கொளுத்து" "அரிக்கனைக் கொளுத்து" என்று அலறும் சத்தம் கேட்கிறது. "ஐயையோ! அரிக்கனில் மண்ணெண்ணெய் இல்லையே!" என்று ஏங்குகிறார்கள்.



மண்ணெண்ணெயும் பெட்ரோலியம்தான். "போகட்டும். மெழுகுவத்தியாவது இருக்கிறதா!" என்று தேடச் சொல்கிறோம். எங்கிருந்தோ மெழுகுவத்தி கொண்டு வந்து ஏற்றப்படுகிறது. இருள் நீங்கிச் சற்று வெளிச்சம் உண்டாகிறது. எல்லாரும் "அப்பாடா!" என்று பெருமூச்சு விடுகிறோம். இந்த மெழுகுவத்தியும் மேற்படி விந்தைப் பொருளான பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்தான்.

இன்னும் சுகாதார வசதிக்கு உபயோகமான எத்தனையோ விதமான மருந்துகளும் இந்த பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்களிலிருந்து தயாரிக்கப் படுகின்றன. இது போல எத்தனை எத்தனையோ எண்ணத் தொலையாத பொருள்கள் பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்களில் தயாராகின்றன. நாமும் நம்மை யறியாமலே அவைகளை உபயோகப்படுத்திப் பயன்பெற்று வருகிறோம்.

இவ்வாறு நாம் உபயோகப்படுத்தும் எல்லாப் பொருள்களும் பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள் மயமாகவே இருந்து வருகின்றன. சர்வம் எண்ணெய் மயம்தான்!

இந்த அதிசயமான பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள் எங்கே கிடைக்கிறது! இதை எங்கு செய்து வைத்திருக்கிறார்கள்! யார் எப்படிக் கண்டு பிடித்தார்கள்!

2. எண்ணெய் பிறந்த கதை

மாலை வேளை. சூரியன் மேற்குத் திசையில் மெதுவாக மறைந்து கொண்டிருக்கிறான். கடற் கரையில் ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்திருக்கிறார்கள். கண்ணுக்கு எட்டிய தூரம் தண்ணீர், தண்ணீர், தண்ணீர் என்று கடல் முடிவில்லாமல் பரந்து விரிந்து கிடக்கிறது. தங்க மயமான சூரியனொளியின் பிரதிபலிப்போடு கடல் துள்ளி விளையாடுகிறது. படல் படலாகக் கரையை நோக்கி அதன் அலைகள் ஓடி வருகின்றன. கரையில் நுரைத் தூளை வாரி இறைத்து விட்டு மீண்டும் பின் வாங்கி ஓடி விடுகின்றன. இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கரையோரமாகச் சில நண்டுகள் ஓடி வந்து நமக்கு விளையாட்டுக் காட்டுகின்றன. அவைகளைப் பிடிக்க வேண்டும் என்று கூடச் சிலருக்குத் தோன்றும். ஆனால் அதை அவ்வளவு சுலபமாகப் பிடிக்கமுடியாது. நாம் கிட்ட நெருங்கினால் சட்டென்று அங்குள்ள வளைக்குள் புகுந்து மறைந்து விடும். இன்னும் அதைப் போலவே எத்தனையோ பூச்சிகள் ஊர்ந்தும் ஓடியும் கொண்டிருப்பதைக் காணலாம். அவைகளில் நத்தைகள் சற்று அதிகம் காணப்படும். அதைச் சுலபமாகப் பிடித்து விடலாம். அப்படி ஒரு நத்தையைப் பிடித்துப் பார்த்தால் அதன் ஓட்டுக்குள் நூற்றுக் கணக்கான சின்னஞ் சிறு பூச்சிகள் இருப்பதைக் காணலாம். இப்படிக் கடற்கரை ஓரமாகப் பலவிதமான ஜந்துகள் வாழ்ந்து வருவதை நம்மில் பலர் பார்த்திருக்கலாம். அவைகள் நம்முடன் ஓடி விளையாடுவதைக் கண்டு மகிழ்ந்திருக்கலாம்.

இது போலவே அந்தப் பரந்து விரிந்து கிடக்கும் பெரிய கடலினுள் கோடிக்கணக்கான ஜீவராசிகள் வாழுகின்றன. சின்னஞ் சிறு மீன்களில் இருந்து பெரிய மலை போன்ற திமிங்கிலங்கள்வரை வாழ்ந்து வருகின்றன. கட

லுக்கு அடியில் உள்ள பூமியில் எத்தனையோ வகையான மரங்கள், செடிகள், கொடிகள், விலங்குகள், ஊர்வன, நீந்துவன என்று பல கோடி ஜீவராசிகள் வாழுகின்றன. தாவர வர்க்கங்கள் காடுகள் போல மண்டிக் கிடக்கின்றன. நம் கண்முன் காண்பது போன்ற ஒரு தனி உலகமே கடலுக்குள் இருக்கிறது.

தரையிலும் பெரிய பெரிய மிருகங்களும், காடுகளும் இருப்பதைப் பார்க்கிறோம். ஒவ்வொரு பொருளும் அதன் அதனுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. உலகம் அமைதியாக இருந்து வருகிறது. அதில் வாழும் ஜீவராசிகளும் தங்கள் காரியங்களை ஒழுங்காகச் செய்து கொண்டு வருகின்றன.

இந்த அமைதி அப்படியே இருப்பதில்லை. உலகம் அடிக்கடி மாறுகிறது. சிற்சில சமயங்களில் இயற்கையின் அமைதி குலைந்து சிதறுகிறது. இயற்கைக் குழப்பங்கள் உண்டாகின்றன. புயல் அடிக்கிறது; பூமி அடுகிறது; பூகம்பங்கள் ஏற்படுகின்றன. பூமி வெடிக்கிறது. அதிலிருந்து அக்கினிக் குழம்பு 'குபு, குபு' வென்று பொங்கி ஆறாக ஓடுகிறது. அதன் கொதிக்கும் அலைகள் சாரி வீசுகின்றன. அக்கினிக் குழம்புகள் தூளிபடுகின்றன. அவை ஒன்றுடன் ஒன்று மோதி வெடிக்கின்றன. பூமி நிர்த்தனம் செய்கிறது. எல்லாம் மின்னல் வேகத்தில் நிகழ்ந்து விடுகின்றன.

இவை போன்ற கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கர இயற்கை உற்பாதங்கள் ஏற்படும்போது இயற்கையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விடுகின்றன. காடும் மலையும் வனமும் வனாந்திரமும் கிராமங்களும் பட்டணங்களும் நிறைந்துள்ள பூமி மறைந்து கடலாகி விடுகிறது. கடல் இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறது. கடல் இருந்த இடத்தில் மண், மண், மண். பல யோசனை தூரம் மண்தான். நாலு திசைகளிலும் மண்தான். மலைகளைப் போல சில இடங்களில் உயரமான மண் குவியல். பெரிய கடல் இப்படி உருமாறி விடுகிறது. காலப் போக்கில் அந்த மண் இறுகி இறுகிப் பாறையாகிறது. பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பாறையும் இறுகி இறுகிச் சில இடங்களில் 'கருங்கல் மலையாகவே மாறி விடுகிறது.

இந்த இயற்கை மாறுதலின்போது அந்தக் கடலில் இருந்த மீன்கள், 'மிருகங்கள், காடுகள் எல்லாம் அந்த மணலுக்குள் அகப்பட்டுச் சிக்கி மடிந்து போகின்றன. மலை போன்ற மண் குவியல்களுக்கு இடையில் அகப்பட்ட அந்த எண்ணற்ற ஜீவராசிக் கூட்டங்கள், தாவரக் காடுகள் அமுங்கி, நசுங்கி மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுகின்றன. வருஷங்கள் ஆக ஆக அந்தக் கடல் ஜீவராசிகள் மண்ணும், கடல் தாவரங்களின் மண்ணும் படல் படலாக இறுகிவிடுகின்றன. அந்த மண்படல்கள் அடுக்கடுக்காக மேலே மேலே இன்னும் இறுகி இறுகிப் பாறையாகி, மலையாகி விடுகின்றன. இப்பொழுது கூட சில மலைப் பாறைகளில் கடல் ஜீவராசிகளின் ஓடுகள் மக்கிப் போகாமல் கிடைப்பதாக சில ஆராய்ச்சி நிபுணர்கள் வியப்புடன் சொல்லுகின்றனர்.

கற்பனை செய்து பார்க்க முடியாதபடி இமய மலை போன்ற மண் குவியலின் கனம் அழுத்த அழுத்த அதன் இடைவெளிகளில் அகப்பட்ட எண்ணற்ற கடல் மிருகங்களும், தாவரக் காடுகளும் நசுக்கிப் பிழியப்படுகின்றன. அம்மாதிரிப் பிழியப்படும்போது மிருகங்கள், தாவர வர்க்கங்கள் முதலியவற்றில் உள்ள கொழுப்புகள், எண்ணெய்கள் வடிந்துவடிந்து பூமிக்குக் கீழே போகின்றன. அப்படி வடிந்து கொண்டு போகும் போது பூமிக்கு அடியில் உள்ள பாறையான இடங்களில்போய் அதற்குக் கீழே வடிய முடியாமல் அங்கேயே குளம் போல் தேங்கி விடுகின்றன. அதுபோல் தங்கி இருக்கும் திரவ பதார்த்தம்தான் 'குரூடாயில்'; அதாவது பண்படாத எண்ணெய்கள் என்று விஞ்ஞான நிபுணர்கள் சொல்லுகிறார்கள். எத்தனையோ ஆண்டு காலமாக ஆராய்ச்சி செய்து இந்த உண்மையைக் கண்டு பிடித்திருக்கின்றனர். பெட்ரோலியம் எண்ணெய் பிறந்த விசித்திரக் கதையைத் தெரிந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த எண்ணெய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. அது எப்படி வளர்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா! (தொடரும்)





வடமொழிக் கதை: :: மொழிபெயர்ப்பு: ஜெயமணி

புஷ்ப புரத்தில் உள்ள ஜனங்கள் உதார குணத்துக்குப் பெயர் போனவர்கள். எனினும் அதற்கு விதிவிலக்காக அவ்வூரில் தாமோதர பந்த் ராட்கே வந்து பிறந்தார். அவரைப் போன்ற கருமியை ஜனங்கள் எங்குமே கண்டதில்லை.

ராட்கே பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருந்தார். ஆனல், உபாத்தியாயர்களுக்கு உரித்தான ஏழைமைத்தனம் அவரிடம் இல்லை. அவர் மிகுந்த செல்வவந்தராக விளங்கினர். ஒரு லட்சப் பிரபுவின் ஒரே பெண்ணை அவர் விவாகம் செய்து கொண்டதால், அந்தப் பிரபுவின் சொத்துக்கள் யாவும் உபாத்தியாயர் தாமோதர பந்துக்கே கிடைத்தன. அப்படி யிருந்தும் அவர் மிகக் குறைந்த சம்பளம் உள்ள உபாத்தியாயர் தொழிலை விடவில்லை. அந்தத் தொழிலை விடுவதற்கு அவரது கருமித்தனமே குறுக்காக நின்றது!

ராட்கேய்க்கு அடித்த அதிர்ஷ்டம் அத்துடன் நிற்கவில்லை. நாற்புறத்திலும் அழகிய நந்தவனத்தினல் சூழப்பட்ட மாளிகையில் அவர் வசித்து வந்தார். அந்த நந்தவனத்தை அடிக்கடி செப்பனிட்டுச் சீர்ப்படுத்திக் கண்டோர் வியக்கும்படியாக வைத்துக் கொள்வதற்குச் சம்பளமில்லாமலே அவருக்கு மூன்று வேலைக்காரர்கள் இருந்தனர். ராட்கேயின் மூன்று புத்திரிகளான மங்களா, க்ஷமா, துர்க்கா இவர்கள் இடைவிடாது உழைத்து, நந்தவனத்தை மிகவும் நேர்த்தியாகப் பாதுகாத்து வந்தனர்.

இவ்வளவு சுபிட்சத்துக்கும் செல்வத்துக்கும் மத்தியில் கூட ராட்கேயின் கருமித்தனமே மேலோங்கி நின்றது!

ராட்கே வேலையில் இருந்த பள்ளிக்கூடத்தில் மொத்தம் பதினைந்து உபாத்தியாயர்கள் இருந்தனர். அவர்கள் பரஸ்பரம் மிகுந்த நட்புக் கொண்டிருந்ததுடன், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் விருந்து வைத்து உல்லாசமாகக் காலங் கழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஓர் உபாத்தியாயர் விருந்து வைத்து மற்றப் பதினைந்து பேர்களையும் விருந்துக்கு அழைப்பார். மேற்படி விருந்துகளில் ஒன்றைக்கூட ராட்கே நழுவ விடுவதில்லை. ஆனல், ராட்கே மாத்திரம் ஒரு ஞாயிற்றுக் கிழமை கூட மற்றவர்களுக்கு விருந்து அளித்ததில்லை. தன் சுற்று வரும்போது, ஏதாவது ஒரு சாக்கு சொல்லி விருந்து வைக்கும் பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டு விடுவார்.

கருமிகளுக்கெல்லாம் கருமியான ராட்கேய்க்கு மிகுந்த குணவதியான ஒருத்தி மனைவியாக வாய்த்ததும் அவரது அதிர்ஷ்டமே. ஒரு ஹிந்துப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய சர்வ லட்சணங்களும் தாமோதர பந்த் ராட்கேயின் மனைவியான சைலாவதிக்கு அமைந்திருந்தன.

அறுசுவையுடன் சமையல் செய்வதிலும் சைலாவதி கைதேர்ந்தவள். ஆனால், சமையலில் தனக்குள்ள அபாரமான திறமையைக் காட்டுவதற்கு அவளுக்குச் சந்தர்ப்பம் வாய்த்தால்தானே!

பண்டிகை நாட்களில் கூட சைலாவதிக்கு வீட்டில் தன் இஷ்டப்படி சமைப்பதற்கு உரிமை இல்லை. பண்டிகையன்று ரசமும் வற்றல் குழம்பும் போதும் என்று ராட்கே கூறினால் கூட அவள் யாதொரு ஆட்சேபணையும் சொல்லாமல் அப்படியே செய்வாள். சைலாவதி ராட்கேயின் பேச்சுக்கு மறு பேச்சு எதுவும் பேசியதே யில்லை.

ராட்கே ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் விருந்துக்குச் செல்லுவது சைலாவதிக்கு வியப்பாக இருந்தது.

"அப்படிப்பட்ட உதார குணமுள்ளவருக்கு நம்முடைய வீட்டில் ஒரு ஞாயிற்றுக் கிழமையாவது விருந்து வைக்க வேண்டாமா?" என்று சைலாவதி ஒரு நாள் கேட்டு விட்டாள்.

இதைக் கேட்டதும் ராட்கே நடுங்கி விட்டார். தம்முடைய மனைவி சைலாவதியின் மனத்தில் அத்தகைய எண்ணம், அதாவது பிறருக்கு விருந்து வைப்பது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டதே தவறு என்று அவருக்குத் தோன்றியது!

ஒரு ஞாயிற்றுக் கிழமை கூட விருந்து வைக்காததற்காகத் தம்முடைய சகாக்கள் தம்மைத் தூற்றுவார்கள் என்பது அவருக்குத் தெரியும். இருந்தாலும் அதைப் பற்றி யெல்லாம் அவர் சிறிதும் கவலைப் படவில்லை. யார் தூற்றினால் என்ன? தமது கையிலிருந்து பணம் செலவழியாமல் இருந்தால் போதும் என்பதுதான் அவரது எண்ணம்.

எனினும், ராட்கே தமது மனைவி சைலாவதி கேட்ட கேள்விக்குச் சரியான பதில் கூறி விட்டார்.

"நமக்கு ஒரு பெண் அல்ல. இரண்டு பெண்கள் அல்ல; மூன்று பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டாமா? வீண் விருந்துகளில் பணத்தைச் செலவழித்து விட்டால், கல்யாணச் செலவுக்கு என்ன செய்வது! சைலாவதி! உனக்கு உலகம் தெரியாது. பேசாமல் இரு!"

ராட்கே இவ்விதம் கூறிய பிறகு சைலாவதி வாயடைத்துப் போனாள்.

தாமோதர பந்த் ராட்கேயின் அதிர்ஷ்டம், அவரது மூன்று பெண்கள் அவரிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்கள். அவர்கள் வீட்டை விட்டு வெளிக் கிளம்பியதே இல்லை. எனவே, உலகம் தெரியாத அவர்கள் தங்களுக்குப் புதிய புதிய சாமான்கள் வேண்டும் என்று சொல்லுவதே யில்லை. அவர்கள் நந்தவனத்தில் புஷ்பச் செடிகளை வளர்ப்பதிலும், பழ மரங்களை வைத்துப் பராமரிப்பதிலும், கறிகாய் வகைச் செடிகள் பயிர் செய்வதிலுமே தங்கள் முழு கவனத்தையும் செலுத்தி வந்தார்கள்.


பதினெட்டு வயது நிரம்பிப் பருவ மங்கையாகத் திகழ்ந்த மங்களாவும், பருவ வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த க்ஷமாவும், கடைக்குட்டியான சிறுமி துர்க்காவும் சைலாவதியின் வாழ்க்கையையே ஒளி பெறச் செய்யும் தீபங்களாக விளங்கி வந்தனர்.

சைலாவதியின் அரும் குணங்கள் அவர்களுக்கும் படிந்திருந்தன. அந்தப் பெண்கள் படிக்கவோ, அல்லது வேறு அலுவல்களை யொட்டியோ, தங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லுவதில்லை. எனவே சைலாவதி அவர்களுக்குத் தாம்பத்திய வாழ்க்கை ஆனந்தமாக இருப்பதற்கு அத்தியாவசியமான சமையல் உள்பட குடும்ப வேலைகள் எல்லாவற்றையும் கற்பித்தாள். அதன் பலனாக அவளது ஒவ்வொரு மகளும் குடும்பத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றல் பெற்றிருந்தனர்.

ஆனால், ராட்கேய்க்குத் தம் பெண்கள் தான் வாழ்க்கையில் சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்னையாகத் தோன்றினர். அதிலும் குறிப்பாக, தம் மூத்த பெண் மங்களாவைக் கண்டபோதெல்லாம் அவர் மனத்தில் கலக்கம் ஏற்பட்டது. அவர் பெருமூச்சு விட்டார். மங்களாவைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்குப் பணம் செலவு செய்ய வேண்டுமே என்ற கலக்கம் தான்! மங்களாவுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். அத்துடன் அவரது பிரச்னை தீர்ந்து விடாது. கல்யாணம் செய்து கொடுப்பதற்கு அவளைத் தவிர இன்னும் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள் அல்லவா?

* * *

தங்களுக்கு விருந்து வைக்காமல் வெகு காலமாக ராட்கே காலம் கடத்தி வருவது மற்ற உபாத்தியாயர்களுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. "நாம் எல்லோரும் அசடுகள் என்றும், தாம் மாத்திரம் கெட்டிக்காரப் பேர்வழி என்றும் இந்த ராட்கே நினைத்துக் கொண்டிருக்கிறார். அவருக்குப் பாடம் கற்பிக்க



நீடித்து உழைக்க வாய்ப்புள்ளது...
TWO BY TWO
FULL VOILE
சூப்பர்பைன்
மெர்ஸிரைஸ் செய்யப்பட்டது
ராஜ்ரேகா
ராஜ்ஷோபா
ராஜ்லக்ஷ்மி
ராஜ்சுந்தரி
பயனீர் பீஸ்குட்ஸ் கம்பெனி
பம்பாய்-2.
மாபத்லால் பைன் மில்ஸ்-நவ்ஸாரி



நம்பிக்கையானது
சக்தி வாய்ந்தது
சிக்கனமானது
மர்பி ரேடியோ
murphy radio
மாடல் டிஎ 222
விலை ரூ. 300/-
மாடல் டிஎ - 224
விலை ரூ. 425/-
மாடல் டிஎ 226
விலை ரூ. 575/-
டிஸ்டிரிபியூட்டர்கள் :
அடிஸன் & கம்பெனி லிமிடெட்,
158 மவுண்ட் ரோட், மதராஸ்.



அவளுடைய
பளபளப்பான
வெள்ளைப்
புடவைகள்
அவள்
சிநேகிதிகளின்
புகழ்ச்சியை
பெற்றன
என் எஜமானியின் சிநேகிதிகளுக்கு அவள் வெள்ளையான புடவையை எப்பொழுதுமே அணிவது எப்படி என்று அவளிடம் ஒரு நாள் கேட்பதற்கு முன்பு தெரியாது.
தன்னுடைய எல்லா ஆடைகளுக்கும் (பருத்தி, ஆர்ட் ஸில்க் துணிகள் மாத்திரம்) புடவைகள் உள்பட டினோபாலை உபயோகிக்கிறேன் என அவள் சொன்னாள். டினோபால் உபயோகிக்கப்பட்ட வெள்ளைத் துணிகள் எடுத்துக் காட்டாக இருக்கக் காரணம், அவைகளின் கண்களைப் பறிக்கும் வெண்மைதான்.
டினோபால் அளிக்கும் வெண்மை 3 அல்லது 4 சலவைக்கு நிலைக்கும்; அதனால் அதை அடிக்கடி உபயோகப்படுத்த வேண்டியதில்லை. ஒரு கால் டீஸ்பூன் அளவு டினோபால் ஒரு வாளி நிறைய உள்ள துணிகளை வெளுக்கின்றன என்பது நினைவிலிருக்கட்டும்.
டினோபால்
Geigy



தமிழ்நாட்டு நாடகக் கலைஞர் நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் சமீபத்தில் பம்பாய்க்கு விஜயம் செய்தபோது, பாரத நாடகக் கலைக் குழுவினர் அவரை அன்புடன் வரவேற்றுத் தேநீர் விருந்தளித்தனர். அந்த விருந்தில் நவாப் ராஜமாணிக்கம் தமது நாடகமேடை அனுபவங்களைப் பற்றிப் பேசுவதை மேலே படத்தில் காணலாம்.

ஏதாவது வழி செய்ய வேண்டும்'' என்று அவர்கள் முடிவு செய்தனர்.

அவர்களில் ஒருவர் ஓர் யுக்தி செய்தார். ''ராட்கே நம் எல்லோரையும் விருந்துக்கு வருமாறு கெஞ்சும்படி நான் செய்து விடுகிறேன்'' என்று கூறினார். அப்படியே செய்வதற்கு மற்றவர்களும் இசைந்தனர்.

''வருகிற வியாழக்கிழமை நம்மில் எவரும் வீட்டில் சாப்பிடக்கூடாது, வெளியேயும் போகக்கூடாது. ஆனால் கருமி ராட்கே வந்து நம்மைச் சாப்பிடக் கூப்பிட்டால் 'நான் சாப்பிட்டாகி விட்டது' என்று ஒவ்வொருவரும் அவரிடம் சொல்லிவிட வேண்டும்'' என்றார் அவர்.

அவர் போட்டிருந்த திட்டப்படியே—, வியாழக் கிழமையன்று உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடத்தில் சந்தித்துக் கொண்டபோது ஒருவருக்கொருவர் கண் ஜாடை காட்டிக் கொண்டனர்.

அன்று ராட்கேயும் பள்ளிக்கூடத்துக்கு வந்தார். அவர் வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் கிழவனான வேலைக்காரன் வழக்கம் போல் அன்றும் அவரது புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்தில் வைத்து விட்டுத் திரும்பினான்.

அவன் சிறிது தூரம் சென்றதும், ஓர் உபாத்தியாயர் அந்த வேலைக்காரனைக் கூப்பிட்டார். ''அப்பா! இந்தப் பத்து ரூபாயை உன் எஜமான் ராட்கே கொடுத்தார். இதை அவர் வீட்டில் கொண்டு போய்க் கொடு. அவர் இன்று இரவு எங்களையெல்லாம் விருந்துக்கு அழைத்திருக்கிறார். கறிகாய் முதலிய அவசியமான செலவுகளுக்கு இதோ பத்து ரூபாய் கொடுத்து அனுப்பியுள்ளார். இதை அவரது மனைவியிடம் சொல்லி விடு'' என்று அந்த வேலைக்காரனிடம் கூறி விட்டார்.

அவன் வீட்டுக்குச் சென்று, ராட்கேயின் மனைவியிடம் பத்து ரூபாயைக் கொடுத்ததுடன், உபாத்தியாயர் கூறிய மற்ற விவரங்களையும் சொன்னான். தன் கணவரின் மனமாற்றத்தைக் கண்டு சைலாவதிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கணவன் கட்டளை எதுவாயினும் அதை நிறைவேற்றுவதே தனது கடமை என்று கருதும் சைலாவதி, உடனே விருந்துக்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்ய ஆரம்பித்தாள். சமையலில் தன் திறமையைக் காட்ட இது வரையில் கிடைக்காத சந்தர்ப்பம் இப்போது கிடைத்ததைக் குறித்து அவளது மகிழ்ச்சி எல்லை கடந்தது. அவளுக்கு உதவியாக அவளது மூன்று பெண்களும் சுற்று வட்ட வேலைகளைச் செய்யலாயினர். ஒருநாளுமிராத படி ராட்கே அன்று விருந்துக்கு ஏற்பாடு செய்தது அவர்களை அளவற்ற ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

அவர்கள் நந்தவனத்திலிருந்த கறிகாய்கள், விதவிதமான பழங்கள் முதலியவற்றைப் பறித்துக் கொண்டு வந்தனர்.

ராட்கே மாலையில் வீட்டுக்கு வந்தபோது, வீடு முழுதும் ஒரே அமளியாக இருந்தது. சைலாவதியும், மங்களா முதலியோரும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தனர். சமையல் வாசனை எங்கும் வீசி, நாக்கில் ஜலம் ஊறும்படி செய்தது.

ராட்கேய்க்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் அப்படியே திக்பிரமை பிடித்தவர் போல் நின்று விட்டார்.

இந்தச் சமயத்தில் சைலாவதி சமையல் அறையிலிருந்து வெளியே வந்தாள். ''இரண்டொரு நாட்களுக்கு முன்பே சொல்லியிருக்கக் கூடாதா? இன்னும் சிறிது நேரத்தில் உங்கள் நண்பர்கள் விருந்துக்கு வந்துவிடுவார்களே?'' என்றாள்.

விருந்து என்ற வார்த்தையைக் கேட்டதும் ராட்கேய்க்குக் கோபம் பொங்கியது. ''உனக்கு என்ன பைத்தியம் பிடித்து

விட்டதா? யார் விருந்துக்கு வரப் போகிறார்கள்? நான் யாரையும் அழைக்கவில்லையே!" என்றார்.

வேலைக்காரன் பத்து ரூபாய் கொண்டு வந்து கொடுத்ததையும், விருந்து தயாரிக்கும்படி ராட்கே கட்டளை யிட்டதாகக் கூறியதையும் அவர் கேட்ட பிறகுதான், நிலைமை சிறிது சிறிதாக அவருக்குத் தெளிவாகத் தொடங்கியது.

தம் சகாக்களில் ஒருவர் காலையில் சிறிது தூரத்தில் தம் வேலைக்காரனுடன் பேசிக் கொண்டிருந்தது. அப்போதுதான் அவருக்கு ஞாபகத்துக்கு வந்தது. அந்த உபாத்தியாயர்தான் இப்படிச் சூழ்ச்சி செய்திருக்க வேண்டும் என்பதை அவர் தெரிந்து கொண்டார்.

ஆனால், இனி என்ன செய்வது? இரவு நேரம் வந்து விட்டது. பணமும் செலவாகி விட்டது. விருந்தும் தயாராகி விட்டது. ஆனால், விருந்தாளிகளைக் காணவில்லை. அந்த நேரத்தில் அவர் எப்படிப் போய்த் தம் சகாக்களை விருந்துக்கு அழைப்பது?

ராட்கேயின் நண்பர்கள் சாப்பிட்டிருந்தால் கூட, விருந்து என்றால் வந்து விடுவார்கள் என்றும், எனவே, வீணாகக் காலம் கடத்தாமல் அவர்களை அழைத்து வருவதே உத்தமம் என்றும், இல்லாவிடில் அருமையாகச் சமைத்த பண்டங்கள் யாவும் வீணாகி விடுமென்றும் அவரது மனைவி யோசனை கூறினாள்.

அச்சந்தர்ப்பத்தில் அந்த யோசனையே சிறந்தது என்று ராட்கேய்க்கும் தோன்றியது. எனவே, வெட்கத்தைப் பாராமல் தம் நண்பர்களை அழைக்கச் சென்றார்.

ராட்கே அவரது நண்பர்களை விருந்துக்கு வரும்படி அழைத்த போது, அவர்களில் ஒவ்வொருவரும் ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி தாங்கள் சாப்பிட்டாகி விட்டது என்று கூறிவிட்டார்கள். எனவே, கடைசியில் ராட்கே அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளும்படி நேர்ந்தது.

* * *

ராட்கேயின் வீட்டில் அன்று உண்மையிலேயே விருந்து பிரமாதமாக இருந்தது. சைலாவதி சமையலில் தனக்குள்ள திறமையை யெல்லாம் காட்டியிருந்ததால், ஒரு வியஞ்சனத்தைவிட மற்றொரு வியஞ்சனம் சாப்பிடுவதற்கு அமிருதமாக இருந்தது. எனவே, உபாத்தியாயர்கள் யாவரும் சைலாவதியை மிகவும் பாராட்டினார்கள். அந்த விருந்துக்கு முக்கிய காரண புருஷரான உபாத்தியாயரை மனத்துக்குள் வாழ்த்தினார்கள்.

விருந்துக்காக வீண் செலவு செய்யும்படி நேர்ந்ததே என்று ராட்கே வருந்தினாலும், அதுவும் ராட்கேய்க்கு அதிர்ஷ்டத்தையே கொடுத்தது. ஏனெனில், அந்த விருந்துக்காக இரகசியத் திட்டம் தயாரித்த உபாத்தியாயர், அன்று ராட்கேயின் மூத்த பெண் மங்களாவின் அழகையும், அடக்கத்தையும், தன் தாயாருக்கு உதவியாக அவள் பரிமாறி வேலை செய்ததையும் கண்டு மகிழ்ச்சி யடைந்து, அவளைத் தன் மகனுக்குத்தான் விவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அதைக் கேட்டதும் ராட்கேய்க்கு உண்டான ஆனந்தத்தை விவரிக்க முடியாது. எனினும் அதே சமயத்தில் அவர் மனத்தில் எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் எழாமல் இல்லை.

சில வருஷங்களில் க்ஷமா, துர்க்கா இருவரும் விவாக வயதை அடையும் போது, அதிகச் செலவும் அலைச்சலும் கஷ்டமுமின்றி அவ்வளவு சுலபமாகக் காரியம் கைகூடுமா என்று ராட்கேயின் மனம் தவிக்கத் தொடங்கியது!



பிரபல திருமணம்

சிவரகோட்டை ஸ்ரீ சுப. சுப்பிரமணியப் பிள்ளை குமாரன் செல்வன் கதிரேசனுக்கும் கண்டரமாணிக்கம் ஸ்ரீ க. வீர. லெட்சுமணப் பிள்ளை அவர்களின் குமாரத்தி செல்வி அன்னபூரணிக்கும் சென்ற 11-4-55ல் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. காரைக்குடி நகர சபைத் தலைவர் ஸ்ரீ கரு. சுப்பய்யா அம்பலம், டாக்டர் எஸ். சுப்பிரமணியம், ஸ்ரீ சா. கணேசன் முதலிய பிரமுகர்களும், பந்துக்களும் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். இலங்கை காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். தொண்டமான் முதலிய பிரமுகர்களிடமிருந்து ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்தன. திருமணத்தை ஒட்டி ஹரிஜனங்களுக்கும் ஏழைகட்கும் அன்னதானம் வழங்கப்பெற்றது. வாழ்க மணமக்கள்



பாரதநாட்டிற்குப் பெருமை-
யளித்திடும் அணிகலன்
பெண்குலமே
அன்பே உருவான
மகள்
கணவனே
தெய்வமெனமதிக்கும்
மனைவி
தன்னலம் கருதாத
உத்தமத்தாய்
கணவனே
கண்கண்ட
தெய்வம்
நடனங்கள்
கேவா கலரில்
சென்னை
காஸினோ · பிரபாத் · ஸரஸ்வதி
மற்றும் தமிழ்நாடெங்கும்
நாராயணன் கம்பெனி தயாரிப்பு

பணியாற்றும் பிரமுகருக்குப் பட்டம்

கொழும்பு, ஜூன் மீ 12உ

பாரத புண்ணிய பூமியிலிருந்து இலங்கையில் குடியேறிப் பிறந்த பொன்னாட்டுக்கும், புகுந்த சேய் நாட்டுக்கும் சிறப்பாகப் பல துறைகளிலும் பணியாற்றி வரும் குடும்பங்களில் ஸ்ரீ ஆர். ஏ. நடேசனின் குடும்பம் விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்தது. இவருடைய சேவையையும் செல்வாக்கையும் சகலருடனும் சரளமாகப் பழகும் இங்கிதத்தையும் இலங்கை அரசாங்கம் எவ்வளவு தூரம் பாராட்டுகின்றதென்பதற்கு அடையாளமாக இவ் வாரம் ஸ்ரீ நடேசனுக்கு ஓ. பி. இ. பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறார்கள். இந்தக் கௌரவப்பட்டம் உண்மையில் ஸ்ரீ நடேசனுடைய செல்வத்துக்கோ செல்வாக்குக்கோ வழங்கப்பட்டதல்ல! வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர்கள் அந்நாட்டு மக்களுடன் பாலும் தேனும் போலக் கலந்து இனிமையாக வாழ வேண்டுமென்று முன்னொரு சமயம் பாரதப் பிரதமர் நேருவும் தமிழகத்தின் தவ ஸ்ரேஷ்டர் ராஜாஜியும் சொன்னார்கள். அவர்களுடைய உயரிய உபதேசத்துக்கு ஒரு உதாரண புருஷராக விளங்குவதை முன்னிட்டே ஸ்ரீ நடேசனை அரசாங்கம் இவ்விதம் கௌரவித்திருக்கிறதென்று கூறினால் சிறிதும் மிகையாகாது.

ஸ்ரீ நடேசன் இலங்கையில் பிறந்தவரென்றாலும் அவருடைய தகப்பனார் ஸ்ரீ ஆர். அழகுப் பிள்ளை தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து இலங்கையில் குடியேறியவர். 'தகப்பனைப்போல் பிள்ளை' என்பதைப் போல ஸ்ரீ நடேசன் தோட்டத் தொழிலில் பரிபூரணமாக ஈடுபட்டு இன்று அப்புத்தளை, கலஹா பகுதிகளில் பல தேயிலை ரப்பர் தோட்டங்களின் அதிபதியாயிருக்கிறார். அத்துடன் கொழும்பில் ஒரு பிரபல அச்சகத்தையும் சிறப்பாக நடத்தி நிர்வகிக்கிறார்.

கல்விக்காக அவர் ஆற்றும் அரும்பணி விசேஷமாகக் குறிப்பிடத் தக்கது. கொழும்பு இந்துக் கல்லூரியின் நிதிக்காகச் சமீபத்தில் நடந்த நாடக விழாவில் அவர் மிகுந்த பிரயாசைப் பட்டதையும் தமிழ் மக்கள் மறக்க முடியாது. நல்ல காரியங்களுக்குத் தலை கொடுத்துப் பணி புரியவும் இரண்டு கைகளினாலும் தானதர்மங்கள் செய்யவும் ஸ்ரீ நடேசன் தயங்கியதேயில்லை. பாரதத்திலிருந்து வரும் கலைஞர்களை வரவேற்று உபசரிப்பதிலும் ஸ்ரீ நடேசன் நிகரற்றவர். 'கல்கி'யின் காலஞ் சென்ற ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தியின் நெருங்கிய நண்பர்களில் ஸ்ரீ நடேசனும் ஒருவரென்று கூறினால் அது ஒன்றே போதும் அவருடைய குணாதிசயங்களை வர்ணிக்க.

ஸ்ரீ நடேசன் அரசியலில் தீவிரமான ஈடுபாடு உடையவராயில்லா விட்டாலும் இந்தியர் அபிலாஷைகளில் விசேஷ சிரத்தையும் அனுதாபமும் உடையவர். சென்ற 1947ம் வருடப் பொதுத் தேர்தலில் அவர் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டது இங்கு குறிப்பிடத் தகுந்தது.

பிரதம மந்திரி ஸர் ஜான் கோத்தலாவலாவின் அந்தரங்கக் காரியதரிசியான ஸ்ரீ பி. நடேசனின் தகப்பனாரும் இலங்கையின் பொது வாழ்வில் சிறப்பாகப் பங்கு கொண்டிருப்பவருமான ஸ்ரீ எஸ். பரராஜசிங்கத்துக்கு ஸர் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

இவ் வாரம் கொழும்பில் நடந்த அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார் பேசுகையில் ஊருக்கு ஒற்றுமை உபதேசம் செய்யும் தமிழ் எழுத்தாளர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடனிருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்களென்றும் தாய்த் தமிழ் நாட்டிலும் சேய் நாட்டிலுமுள்ள தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுபட்டால் அவர்களை எந்த சக்தியினாலும் அசைக்க முடியாதென்றும் குறுகிய கடல் பிரித்து வைக்கச் சக்தியற்றது என்றும் கூறினார்.

அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்ய வேண்டிய அவசியத்தையும் இவ்விதச் சங்கம் ஏற்படுவதில் காலஞ் சென்ற ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி காட்டிய அபார சிரத்தையையும் சுதந்திரன் ஆசிரியர் ஸ்ரீ எஸ். டி. சிவநாயகம் கூட்ட ஆரம்பத்தில் எடுத்துரைத்தார். சங்கத்துக்கு ஸ்ரீ கே. பி. அரன் தலைவராகவும், ஸ்ரீ எஸ். டி. சிவநாயகம் பொதுச் செயலாளராகவும் இவர்களைத் தவிர ஐந்து உபதலைவர்கள், இணைக் காரியதரிசியினர், பொருளாளர், நிர்வாகக் குழுவினர் ஆகியோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். —ரஜனி.



பம்பாய் ஈஸ்டர்ன் ஸைகோகிராப் லிமிடெட் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் திரு பி. ஜி. சீதாராமின் புதல்வி சௌ. சரஸ்வதிக்கும் சென்ட்ரல் ரயில்வேயைச் சேர்ந்த திரு எம். என். குப்புசாமிக்கும் மே மாதம் 23-ந் தேதி திருப்பதியில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்திருந்தன.

வாழ்க சரஸ்வதி — குப்புசாமி!

இரவிலும் பகலிலும் இவ்வாச்சரியப் பாதுகாப்பு சாதனத்தால்

உங்கள் சருமத்தை அழகாயும் நேர்த்தியாகவும் வைத்துக் கொள்ளுங்கள்



செழுமையான பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் மற்றும் பனியைப் போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தை பாதுகாத்து அதை மிருதுவாயும் அழகாயும் வைக்கின்றன.



மிருதுத்தன்மையும் சுத்தத்தையுமளிக்க ஒரு இராக்கால க்ரீம்

நீங்கள் படுக்கப் போகுமுன் செழுமையான பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் உபயோகிக்கவும். சில செகண்டுகளில் இது உங்கள் சருமத்திற்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது—இயற்கையான எண்ணெய்ச்சத்து அளித்து வறட்சியை அகற்றி உங்கள் சருமத்தின் யௌவனத்தையும் வனப்பையும் நிலைக்கச் செய்கிறது.

பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் ஒரு ஆச்சரியமான சுத்திகரிப்பு சாதனமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். உங்கள் சருமத்திலுள்ள கண்ணுக்குத்தென்படாத துவாரங்கள் பெரிதாகாமல் தடுத்து உங்கள் சருமத்தை களங்கமற்றும் அழகுடனுமிருக்கச்செய்கிறது.





பாதுகாப்பிற்கும், சௌந்தரியத்திற்காகவும் ஒரு பகல் நேர க்ரீம்

பனியைப்போன்ற பிரகாசமான வானிஷிங் க்ரீமின் ஒரு நேர்த்தியான சன்னப்பூச்சு பகல் நேரத்தில் உங்கள் சௌந்தரியத்தை அதிகப்படுத்துகிறது. இதன் சாசுவதமான பாதுகாப்புத்தன்மை, வனப்புள்ள சருமத்தின் வைரியான தூசி, வெயில் மற்றும் வறட்சிக் காற்று முதலியவற்றின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுகின்றது. அளவுக்குமிஞ்சிய எண்ணெய்ச்சத்து சருமத்தின் துவாரத்தில் படிந்து கெடுதலைத்தரும். இவ்விதம் அதிக எண்ணெய் வழியும் சருமத்திற்கு, பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் ஒரு குணமளிக்கும் ஆச்சரிய சாதனம்.

பாண்ட்ஸ்


கோல்டு க்ரீம்

வானிஷிங் க்ரீம்

அழகிய நங்கையர் எங்கிருப்பவர்களாயினும் தங்கள் சௌந்தரியத்திற்கு இச்சுலபமான இருவிதப் பாதுகாப்பையே நம்பியுள்ளனர். அவர்கள் உதாரணத்தையே நீங்களும் பின்பற்றுங்கள்—இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமையும் பகலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமையும் உபயோகியுங்கள். உங்கள் பிரகாசமான—அழகிய வதனத்தைக்கண்டு நீங்களே குதூகலமடைவீர்கள்.

P. 1348

பிரஷால் தேய்ப்பதால் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஈறுகளைப் பலப்படுத்துகிறது



இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனுமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.



* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்


அத்தியாயம் 23

சேரி எரிந்தது

முனிசாமி கவுண்டருக்கு நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. அது என்னைத் தொடர்ந்து வரும் துரதிர்ஷ்டம்தானோ, அல்லது வேறு காரணமோ, தெரியவில்லை.

அந்தச் சிரமத்தினால் அவருக்கும் உடம்புக்கு வந்தது. பத்து நாட்கள் ஜுரம் என்று படுத்தவர், திரும்பக் குணமடைந்த போது பதினைந்து வயது அதிகமாகத் தோற்ற மளித்தார். கவலைதான் ஒரு மனிதனை எப்படி மாற்றி விடுகிறது?

நான் பள்ளிக்கூடத்தில் வேலை செய்து வந்தபடியால் சௌகரியமாக இருந்தது. முதலில் வேலை செய்து வந்த உபாத்தியாயர் இன்னும் மூன்று மாதங்கள் வர இயலாதென்று எழுதியபடியால், நானும் தொடர்ந்து வேலை செய்தேன். ஆறு மாதங்கள் பள்ளிக்கூடத்தில் வேலை செய்தேன். அதன் பிறகு அந்த உபாத்தியாயர் உடம்பு குணமாகிவந்து விட்டார். எனக்கும் வேலை போய் விட்டது. ஆனால் பள்ளிக்கூடத்தில் என்னை அனுப்ப யாருக்குமே இஷ்டமிருக்கவில்லை. தலைமை உபாத்தியாயர் என்னை அழைத்து, "இந்துமதி! வயதில் நீ சிறிய பெண்தான். ஆனால் மிகுந்த அனுபவமுள்ள உபாத்தியாயரைப் போல் திறமையுடன் உன் வேலையைச் செய்தாய். உன்னை அனுப்பவே எனக்கு இஷ்டமில்லை" என்று அன்புடன் கூறினார். இதைவிடச் சிறந்த பாராட்டு ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயினிக்குக் கிடைக்குமா?



குழந்தைகளுக்கெல்லாம் கூட ரொம்ப வருத்தம்தான். "டீச்சர்! நீங்க இங்கேயே இருக்கக் கூடாதா? அந்தக் காக்கா மூக்கு வாத்தியார் அடிப்பார், டீச்சர். எங்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது அவரை" என்று ஒரு பெண் சொன்னாள்.

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது, அம்மா! வாத்தியாரைப் பற்றி அப்படிச் சொன்னால் படிப்பு வராது. நீ சமர்த்தாக இருந்தால் எந்த வாத்தியாரும் உன்னை அடிக்க மாட்டார்" என்றேன்.

நான் வேலையை விட்டு வந்த பிறகுதான் உண்மையில் அந்தக் குடும்பத்தில் சிரமம் தெரிய ஆரம்பித்தது. வேலை இருந்தவரை எனக்கும் கவலைப்பட அதிக நேரமில்லை. ஆனால் தினந்தோறும் செய்திப் பத்திரிகையைப் பார்த்து விட்டு வேதனைப்படுவேன். இங்கிலாந்தில் 'அங்கே குண்டு விழுந்தது', 'இங்கே விழுந்தது' என்று படிக்கும்போதெல்லாம் என் நெஞ்சம் எப்படி விம்மித் துடித்தது என்பதை ஈசுவரனே அறிவார்.

ஒரு நாள் முனிசாமி கவுண்டர் தம் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்த போது நான் அங்கு சென்றேன்.

உடனே வள்ளியின் பாட்டி என்னைப் பார்த்து, "நீயே பாரு அம்மா! நான் வள்ளிக்காக ஒரே ஒரு சங்கிலி வைத்திருக்கிறேன். அதைக் கேட்

கிருர், பார். நமக்குத்தான் எப்போது பார்த்தாலும் பண முடை இருக்கிறது. அதற்காகச் சங்கிலியை விற்று விட்டால் எப்படி? பிறகு குழந்தைக்கு என்னத்தைச் செய்யறது? அவளுக்குத் திரும்பப் பண்ண முடியவே முடியாது'' என்று கூறினர்.

''சங்கிலியை விற்கும்படி பணமுடை ஏற்பட்டு விட்டதா தாத்தா?'' என்று அவரைக் கேட்டேன்.

''ஆமாம்! குழந்தை! போன வருஷம் நம் வீட்டு அழகான காளை கோமாரி வந்து செத்துப் போயிற்று. அதனல் உழுவதற்கு அவசியம் மாடு வேண்டியிருந்தது. அதனல்தான் நான் கடன் வாங்கினேன். அதைத் தவிர என்னுடைய சின்ன மாந்தோப்பைக் குத்தகைக்கு விட்டிருந்தேன். அவன் எனக்குப் பணம் கொடுக்கவில்லை. காய் நிறையக் காய்த்தால்தானே அவன் கொடுப்பான்? அவன் மேல் தப்பு இல்லே. ஆனல் விளைச்சலும் இந்தத்தடவை ரொம்பமோசம். விதைத்த விதையைத்தான் திருப்பி எடுப்போம்போலிருக்கிறது. அதற்கு மேல் இரண்டு மரக்கால் கிடைத்தால் கூட ஒரு பெரிய அதிர்ஷ்டம்தான். கையிலோ செப்புக் காசுகூட இல்லே'' என்று கூறினர்.

எனக்கு அளவு கடந்த வருத்தம் ஏற்பட்டு விட்டது. ''என்னல்தான் உங்களுக்கும் கஷ்டம் வந்து விட்டது. நான் போய் விடுகிறேன். பிறகு எல்லாம் சரியாகி விடும்'' என்று கூறி விட்டு அழுது விட்டேன்.

இருவரும் என்னைத் தேற்றினர்கள். ''இப்படி நீ நினைப்பதே தப்பு. படித்த பெண், இப்படியெல்லாம் பேசலாமா? நாங்கள் அப்படி நினைக்கவே இல்லே. மாடு செத்து ஒரு வருஷத்துக்கு மேலே ஆச்சு. நீ வந்து ஏழெட்டு மாதந்தானே ஆகிறது? இதற்கும் அதற்கும் முதலில் சம்பந்தமே இல்லே. நீ ஏன் வீணுக உன் மனத்தையே நோகச் செய்து கொள்கிருய்?'' என்ருர் கவுண்டர்.

அந்தச் சமயத்தில் வள்ளி அந்தப் பக்கம் வரவே அவளிடம் பாட்டி, ''இந்தா, வள்ளி உங்க அக்கா போகிருளாம். இங்கே இருக்க மாட்டாளாம்'' என்ருள்.

வள்ளி ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு, ''இந்து அக்கா! அம்மா சும்மாத்தானே சொல்லரு? போகமாட்டாயோன்னே?'' என்று பிரியத்துடன் கேட்டாள். அவளுடைய அன்பில் என் நெஞ்சு கனிந்தது.

''நான் போகவில்லே, வள்ளி!'' என்று அவளிடம் கூறினேனே தவிர, 'இவர்களுடைய அன்பை நான் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது. அதிலும் அவர்கள் என்னிடம் இத்தனை பிரியமாக இருந்தபடியால் அவர்களுக்கு நாம் பாரமாக இருப்பது தவறு' என்று நினைத்துக் கொண்டேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லே. 'நான் போகுமிடமெல்லாம் இப்படித் துன்பம் தொடர்ந்து வர வேண்டுமா? லக்ஷ்மி தேவிக்கு என்னிடம் என்ன அப்படி விரோதம்? ஒரு விதத்தில் நான் ரங்கதுரையைக் கல்யாணம் செய்து கொள்ளாமலிருந்தால் நல்லதுதான். இல்லாவிட்டால் அவருக்கும் கஷ்டம் வந்து விடும். ஆமாம்! இனிமேல்தான் கஷ்டம் அவருக்கு வரப் போகிறதாக்கும்? என்னிடம் அன்பாக இருந்ததற்குத்தான் பலன் கைமேல் கிடைத்து விட்டதே! பாவம்! ஊரை விட்டுத் தன்னந்தனியாகப் படிப்பதற்குப் போனவருக்கு, நிம்மதி இல்லாமல் யுத்தம் வந்து விட்டதே' என்று நினைத்து வருந்தினேன்.

பிறகு பெரியவரின் கஷ்டம் நினைவுக்கு வந்தது. பாவம்! கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தவிக்கிருர். என்னை நொந்து கொண்டு என்ன பயன்? அவருக்குப் பணம் கிடைப்பதற்கு ஏதாவது ஒரு வழி செய்தாலும் அர்த்தமுண்டு. என்னிடமிருப்பது இப்போது ஒன்றுதான். அந்தப் பொருளைக் கொடுத்து விட்டால், என் மனம் நிம்மதியாகவும் இருக்கும். அம்மாவின் சங்கிலியை இவர்களிடம் கொடுப்பதனல் எனக்கு அம்மாவின் ஞாபகம் போய் விடாது. அம்மா உண்மையில் அதற்காகப் பெருமைப் படத்தான் செய்வாள். ஆகையால் பொழுது விடிந்ததும், சங்கிலியை முனிசாமி கவுண்டரிடம் கொடுத்து விடுகிறேன். முதலில் வாங்கிக் கொள்ள மாட்டார். ஆனல் வற்புறுத்தி அவரை வாங்கிக் கொள்ள வைக்க வேண்டும்.



அவர்தான் எவ்வளவு தாராள மனப்பான்மையுள்ளவர்! பணக்காரச் செட்டியார் இவரைக் கடனைத் திருப்பித் தரும்படி பிழிந்து எடுக்கிறார். ஆனால் குத்தகைக்காரன் பணம் கொடுக்காமலிருப்பதை இவர் போனால் போகிறது என்கிறார். அவன் பேரில் தவறு கூடச் சொல்லவில்லை. என்ன ஆச்சரியமான இதயம் அவருடையது. கிராமத்தில் பிறந்தால் என்ன? நகரத்



தில் பிறந்தால் என்ன? நாகரிகம் என்பது இதயத்தில் அல்லவா பொதிந்து கிடக்கிறது? உடையிலும், பழக்க வழக்கங்களிலுமா இருக்கிறது? முனிசாமி கவுண்டரைப் போன்ற விசாலமான இதயம் படைத்தவர்கள்தான் பண்பாடு உடையவர்கள் என்று எனக்குத் தோன்றியது. அவரிடம் எனக்கு மரியாதையும் மதிப்பும் பெருகி வளர்ந்தன.

காலையில் முதல் காரியமாக அவரிடம் சென்று என்னுடைய சங்கிலியை எடுத்துக் கொடுத்தேன்.

"இது என்னம்மா?" என்றார்.

"இந்தச் சங்கிலி என்னுடையது. நான் உங்களுக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறேன். இதை உங்களுடைய அவசரத்துக்கு உபயோகப் படுத்திக் கொள்ளுங்கள். வள்ளியின் சங்கிலியை விற்க வேண்டாம்."

"குழந்தை! உன்னுடைய பிரியம் காட்டும் தன்மைக்கு ஈடு ஒன்றுமே இல்லை. ஆனால் நான் இதை விற்க ஒரு நாளும் ஒப்பமாட்டேன். இது உனக்கு உன் அம்மா கொடுத்தது தானே?" என்று கேட்டார்.

"ஆமாம்! அம்மாவுடையதுதான். அதனால்தான் தைரியமாகக் கொடுத்தேன். அவள் என்ன விரும்புவாள் என்று நினைத்தேனோ அதைத்தான் செய்தேன். இதை நீங்கள் பெற்றுக் கொள்ளத்தான்வேண்டும்" என்றேன்.

"இப்போது வேண்டாம், இந்து. நான் மிகவும் அவசியமாக இருந்தால் வாங்கிக் கொள்கிறேன். குத்தகைக்காரன் இரண்டு நாட்களில் பணம் தந்து விடுவதாகச் சொல்லியிருக்கிறான். அவன் தந்து விட்டால் ஒரு கஷ்டமும் இல்லை. ஆனால் பாவம்! அவனுக்கு எத்தனை கஷ்டமோ? யார் கண்டது?" என்றார்.

குத்தகைக்காரன் அவ்வளவு சீக்கிரம் பணத்தைக் கொடுக்கவில்லை. மேலும் மேலும் சிரமம் வளர்ந்தது.

அப்போதுதான் அந்தப் பயங்கரமான சம்பவம் நடந்தது. வீரத்தான் பட்டி கிராமத்துக்குக் கூப்பிடு தூரத்திலிருந்த சேரி ஒரு நாளிரவு தீப் பற்றிக் கொண்டது. ஏன் தீப் பிடித்தது என்ற காரணம் யாருக்கும் தெரியவில்லை. ஆனால் இரவு முழுதும் தீயை அணைக்க யாராலும் முடியவில்லை. கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் எரிந்து விடியற் காலையில், எரிவதற்கு ஒன்றுமில்லாத காரணத்தால் அணைந்தது. சேரிக்குப் பக்கத்திலிருந்த பச்சை மரங்களெல்லாம் எரிந்து போயிருந்தன வென்றால் எவ்வளவு உக்கிரமாக எரிந்திருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொள்ளலாம்.

தெய்வச் செயலாக உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. ஆனால் அந்த ஏழை



பார்க்கர்

நீலநிற

வாஷபின் ராயல் ப்ளு

க்வின்க்

மசியை சுத்தமாக கழுவி அழித்து விடலாம்!

எதிர்பாராதபடி உம் உடையிலோ விரல்களிலோ பார்க்கரின் நீலநிற (வாஷபின் ராயல் ப்ளு) க்வின்க் மசி கொட்டிவிட்டால் சாதாரண சோப்பும் ஜலமும் உபயோகித்து மசி விழுந்த இடமே தெரியாமல் கழுவி சுத்தமாக்கி விடலாம்.

உங்கள் பாதுகாப்பை முன்னிட்டு, நீலநிற வாஷபின் க்வின்கை உபயோகியுங்கள். எழுதியது அழியாமல் நிலைத்திருக்க வேண்டுமானால், நிறம் கெடாத பெர்மனென்ட் க்வின்க் மசியை உபயோகிக்கவும். எல்லா க்வின்க் மசிகளிலும்—வாஷபின் ஆனாலும் சரி, பெர்மனென்ட் ஆனாலும் சரி பேனாவை சுத்தமாக்கி பாதுகாக்கும் ஸால்வ்-X அடங்கியுள்ளது.



பார்க்கர்
க்வின்க்

ஸால்வ்-X அடங்கிய
மசி இது ஒன்றே

விலை ரூ. 1/-

பார்க்கர் பென் கம்பெனி (இந்தியா) லிட்.,
த. பெ. 51, மதராஸ் 1

ஏக விநியோகஸ்தர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்,
டேர் ஹவுஸ், மதராஸ் 1

PEQ. 938

ஜனங்கள் தங்களுடைய மிகச்சொற்ப மான உடைமைகளைக் கூட அக்னி பகவானுக்கு இரையாக்கி விட்டு நின்றதைப் பார்க்க முடியவில்லை. என்ன பரிதாபமான விஷயம்? உணவுப் பொருள்களும், சொற்ப சாமான்களும் எரிந்து விட்டன.

அந்தச் சமயத்தில் முனிசாமி கவுண்டர் நான் சிறிதும் எதிர்பாராத காரியத்தைச் செய்தார். விளைந்திருந்ததே மிகச் சொற்பமான நெல். இருந்த அரிசியை அப்படியே கூடை கூடையாக எடுத்துக் கொண்டு விநியோகம் செய்து, அவர்கள் சமைத்துச் சாப்பிடுவதைப் பார்த்து விட்டுத்தான் வீட்டுக்கு வந்தார். நான் கண் கலங்க அதைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தேன்.

இதனால் அவருக்கும் அவருடைய மனையாளுக்கும் பெரிய சண்டையாகப் போய் விட்டது. "தனக்கு மிஞ்சிய தர்மம் இல்லை" என்பது பாட்டியின் கட்சி. "நம்மிடம் நமக்கே சாப்பாட்டுக்கு வழியில்லாத போது இப்படி வாரிக் கொடுக்கலாமா? இந்தப் பிஞ்சு ஒண்ணு இருக்கே என்றாவது கவலை வேண்டாமா?" என்று வருத்தத்துடன் கூறினார்.

கவுண்டரோ, "அறுபது பேர் சாப்பிட ஒரு கவளம் இல்லாமல் பட்டினி கிடக்கும் போது, நாம் மாத்திரம் வீட்டில் உட்கார்ந்து சாப்பிடுவதா? வருகிற கஷ்டம் எல்லாருக்கும் வரட்டும். நாமும் சேர்ந்து கஷ்டப்படுவோம். இறைவன் அருள் இருந்தால் சீக்கிரம் உதவி ஏதாவது கிடைக்கும்" என்று கூறினார்.

சேரி எரிந்ததற்குப் பலன் முனிசாமி கவுண்டருக்கு மேலும் வறுமை ஏற்பட்டது. சேரி ஜனங்களுக்கு ஒரு விதத்தில் நன்மை ஏற்பட்டது. புதிய குடிசைகள் கட்டிக் கொண்டார்கள். கிராமத்திலும் சுற்றுவட்டாரத்திலும் உள்ள சுமாராகப் பணம் படைத்தவர்கள் அவரவர்கள் வீட்டிலிருந்து துணிமணிகள் சேகரித்து ஜனங்களுக்கு அளித்தார்கள். அதற்கெல்லாம் முனிசாமி கவுண்டர்தான் உதாரண புருஷராக இருந்தார்.

ஆனால் என்னுடைய சங்கிலி, வள்ளியுடைய சங்கிலி இரண்டையும் விற்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வேறு என்ன செய்வது?

அவர் என்னிடம், "நீ வேண்டுமானால் கூனூருக்குப் போய் அந்தச் சேவா ஆசிரமத்தில் இப்போது சேர்ந்து விடு, அம்மா. எங்களோடு நீயும் சாப்பாட்டுக்கு இல்லாமல் கஷ்டப்பட வேண்டாம். நான் எப்படியாவது உனக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்" என்று கவலையுடன் கூறினார்.

"நீங்கள் சுகமாக இருந்த போது இருந்து விட்டுக் கஷ்டப்படும் போது போவேனா? சீக்கிரத்தில் நல்ல காலம் வரும், பாருங்கள். சின்னமுத்துப் பாளையத்தில், ஒரு பள்ளிக்கூடம் நடத்துகிறார்களாம். நான் அங்கே சென்று எனக்கு ஏதாவது வேலை தரும்படி கேட்கிறேன். என்னை அழைத்துக் கொண்டு போகிறீர்களா?" என்று கேட்டேன்.

அவரும் அதற்குச் சம்மதித்தார்.

அத்தியாயம் 24

எதிர்பாராத சந்திப்பு

நானும் முனிசாமி கவுண்டருமாகச் சின்னமுத்துப் பாளையத்துக்குப் புறப்பட்டோம். வள்ளியின் பாட்டி தானும் பக்கத்து ஊரில் ஒரு உறவினர் வீட்டில் இறங்கிக் கொள்வதாகவும், திரும்பி வரும் போது அழைத்துக் கொண்டு வந்து விடலாமென்றும் கூறிவிட்டுப் புறப்பட்டார். வள்ளியும் கிளம்பினாள். நாங்கள் மாட்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தோம். காலை சுமார் ஏழு மணி இருக்கும். வள்ளியின் விருப்பப்படி நான் ஏதோ பாடிக் கொண்டிருந்தேன். அப்போது, எங்களைத் தாண்டிக் கோயமுத்தூர் பக்கத்திலிருந்து ஒரு பெரிய லாரியும், கார்கள் இரண்டும் வேகமாகச் சென்றன.

வள்ளியையும் பாட்டியையும் வழியில் இறக்கி விட்டு நாங்கள் மலையடிவாரத்துக்குப் போய்ச் சேர்ந்த பொழுது, அந்த லாரியும் கார்களும் அங்கே நின்று கொண்டிருந்தன.

நாங்கள் போக வேண்டிய இடத்துக்கு மலை மேல் ஒரு மைல் ஏறிப் போக வேண்டும். ஆகவே வண்டியை விட்டு இறங்கினோம்.

அங்கங்கே சிலர் நின்று கொண்டிருந்தனர். சற்றுத் தூரம் சென்றதும் இன்னொரு காட்சி தென்பட்டது. கும்பலாகச் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். ஏதோ கொஞ்சம் ரகளையாக இருந்தது போலத் தோன்றியது. நான் அதைப் பார்த்ததும் 'ஷூட்டிங்' எடுக்கிறார்கள் என்று அறிந்து கொண்டேன். ஆனால் ஏதோ சண்டை



போலத் தோன்றியது. ஒருவர் பெரிதாகச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். நடுவில் வேஷம் தரித்த ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தாள்.

அவர்கள் பேசியது முதலில் காதில் விழவில்லை. ஆனால் அந்த இடத்தை நெருங்க நெருங்கப் பேசுவது புரிய ஆரம்பித்தது.

கதாநாயகியாக வேஷம் தரித்து நின்ற நடிகை, டைரக்டர் என்று நான் நினைத்த ஒரு மனிதரிடம், "இருபது பாட்டு வேண்டுமென்று கேட்டேன். நான்குதான் கொடுத்தீர்கள். நல்ல பட்டுப் புடவை உடுத்திக் கொண்டு, நிறைய நகை போட்டுக் கொள்ளக்கூடிய வேஷம் கேட்டேன். கிழிந்த புடவையுடன் காட்டில் அலையும் வேஷம் கொடுத்தீர்கள். அதையெல்லாம் பொறுத்திருந்தேன். மோசமான காப்பியைப் பொறுக்க முடியாது. காப்பி நன்றாக இல்லா விட்டால் என்னால் நடிக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் இல்லா விட்டால் இங்கே ஒன்றும் முழுகிப் போய்விட வில்லை. இஷ்டமிருந்தால் நடியுங்கள். இல்லா விட்டால் நாங்கள் வேறு யாரையாவது பார்த்துக் கொள்ளுகிறோம். அளவுக்கு மீறிப் பேச வேண்டாம்" என்றார் ஸூட் அணிந்து கொண்டிருந்த ஆசாமி.

"டைரக்டர் ஸார்! என் வாழ்நாளிலேயே முதல் தடவையாக இப்படிப்பட்ட 'இன்ஸல்டை'க் காதால் கேட்கிறேன். இனிமேல் பொறுக்க முடியாது" என்றாள் நடிகை.

"நான் தான் பொறுக்க வேண்டாம் என்கிறேனே. எதற்காகத் திருப்பித் திருப்பி அதையே சொல்கிறீர்கள்?" என்றார்.

கதாநாயகியின் கையிலிருந்த காப்பி டம்ளர் காமிராவை நோக்கிப் பறந்தது. காமிராவின் மேல் மோதிச் சிதறியது. காமிராவின் பின்னாலிருந்தவர் மேலெல்லாம் காப்பி தெறித்தது. "காமிரா போச்சு! போச்சு!" என்பதைத் தவிர அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

நடிகை திரும்பி வெகு வேகமாகச் சென்றாள். அங்கே நின்ற சிறிய காரில் ஏறிக் கொண்டாள். கார் புறப்பட்டு விட்டது. எல்லோரும் கார் சென்ற திக்கையே திகைப்புடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

டைரக்டருக்குக் கோபம் பொங்கியது. "உங்களை யெல்லாம் நம்பி ஒரு காரியம் செய்ய முன் வரலாமா? இந்தக் காப்பியை நன்றாகப் போடச் சொல்லி எடுத்துக் கொண்டு வரக் கூடாது? அவள் போய் விட்டாளே. என்ன செய்வது? உபயோகமில்லாத வனை எல்லாம் வைத்துக் கொண்டு வேலை வாங்க வேண்டியிருக்கிறது" என்று யாரிடமோ எரிந்து விழுந்தார்.

"நாங்கள் என்ன ஸார் செய்வது? நீங்கள்தான் சண்டை பிடித்தீர்கள்!" என்று ஒருவர் கூறினார்.

இவர்களைத் தாண்டிக் கொண்டு கொஞ்ச தூரம் சென்றோம். பாதை சற்று வளைந்து திரும்பியது. திருப்பத்தின் முனையில் இருந்த ஒரு ஆல மரத்தடியில் ஒரு ரிஷி உட்கார்ந்திருந்தார்.

முனிசாமி கவுண்டருக்கு இப்படிப் பட்டவர்களைக் கண்டால் பக்திப் பரவசம் பெருகி விடும். கிராமத்திலேயே யாராவது மஞ்சள் துணி கட்டிக் கொண்டு வந்தால் வீட்டுக்குச் சாப்பிட அழைத்துக் கொண்டு வந்து விடுவார். இந்த ரிஷியைப் பார்த்த உடனே வேகமாக அவரிடம் சென்று நமஸ்கரித்தார். நான் சற்றுப் பின்னாலேயே நின்றேன். அவரைப் பார்த்த உடனே மனத்தில் இனம் புரியாத தயக்கம் ஒன்று உண்டாயிற்று.

ரிஷி, முனிசாமி கவுண்டரைப் பார்த்தார். பிறகு என்னைப் பார்த்து விட்டு, "இந்தக் குழந்தை உங்கள் வீட்டுக்குச் சமீபத்தில்தானே வந்தாள்?" என்றார்.

"ஆமாம், ஸ்வாமி! ஞான திருஷ்டி கூடத் தங்களுக்கு உண்டென்று தெரிகிறது. இன்னும் ஏதாவது சொல்ல வேண்டும்" என்று பயபக்தியுடன் கேட்டார் முனிசாமி கவுண்டர்.

அதற்கு ரிஷி, "ஞான திருஷ்டி மூலம் இந்தப் பெண் யாரென்று கூறட்டுமா?" என்று கேட்டார்.

"தங்கள் திருவுள்ளம், ஸ்வாமி!" என்றார் கவுண்டர்.

"இந்தப் பெண்ணுடைய பெயர் இந்துமதி. தாயாரின் பெயர் சந்திரமணி. தந்தையின் பெயர் காசிலிங்கம். ஆனால் அவள் வளர்ப்புத் தந்தையின் பெயர் மந்திரமூர்த்தி."

'இதெல்லாம் இவருக்கு எப்படித் தெரியும்? இந்தக் குரலை எங்கே கேட்டிருக்கிறோம்?' என்று நான் சிறிது யோசித்தேன்.

"ஸ்வாமிகளின் சக்தியே சக்தி. இந்துமதி! ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம் பண்ணு அம்மா!" என்றார் கவுண்டர். ஆனால் நான் நகரவே யில்லை.

"ஸ்வாமி! இன்று நாங்கள் போகும் காரியம் வெற்றியடையுமா என்று தாங்கள் தயவுசெய்து கூறமுடியுமா?"

"இந்துமதிக்கு மகத்தான வெற்றி வரப்போகிறது. பார்த்துக் கொண்டே இருங்கள். பெயரும், புகழும், பொருளும் அவளுக்குக் குவியப் போகின்றன. ஆனால் அவளுக்குக் கலியாணமாகி விட்டதோ?" என்று ரிஷி கேட்டார்.

"அதை மாத்திரம் சொல்ல வேண்டுமா? தங்களுடைய ஞான திருஷ்டியில் தெரியாதா?" என்று கேட்டு விட்டேன் நான்.

"அப்படி யில்லை. எல்லாம் தெரியும். ஆனால் நீங்கள் உண்மை சொல்கிறீர்களா என்று பரிசோதித்துப் பார்த்தேன்" என்றார் ரிஷி.

"அவளுக்கு இன்னும் கலியாணமாக வில்லை, ஸ்வாமி" என்றார் கவுண்டர்.

"சீமைக்குப் போன ஆசாமி வரவில்லை போலிருக்கிறது. பாவம்!



வருவான் வருவா னென்று இந்தப் பெண்ணும் காத்திருக்கிறாள். ஆனால் இறைவனுக்குத்தான் வெளிச்சம்" என்றார் மகரிஷி.

எனக்குத் திக்கென்றது. அவர் கூறியதில் எனக்கு நம்பிக்கையே இல்லை. இருந்த போதிலும் அவர் கூறிய விஷயம் என்னுடைய நெஞ்சைத் துன்புறுத்திற்று.

"நாம் போகலாம் தாத்தா! நமக்கு ரிஷிகளோடு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? போகலாம் வாருங்கள்" என்று அழைத்தேன்.

"இருங்கள், கொஞ்சம் பிரசாதம் சாப்பிட்டு விட்டுப் போக வேண்டாமா?" என்று சொல்லிக் கொண்டு

பின்பக்கத்திலிருந்து ஒரு "தர்மாஸ் பிளாஸ்கை" எடுத்தார். அதன் மூடியில் சூடாகக் காப்பியை விட்டு என்னிடம் கொடுத்தார்.

"ஏன் ஸ்வாமி! ரிஷிகள் காப்பி கூடச் சாப்பிடுவதுண்டா?" என்று கவுண்டர் கபடமில்லாமல் வினவினர்.

அவருடைய எளிமையான குணத்தைக் கண்டு எனக்குச் சிரிப்பு வந்தது.

"எனக்குக் காப்பி வேண்டாம்" என்று கூறினேன்.

"இந்தக் காப்பிக்காகத்தான் இப்போது சண்டை ஆரம்பித்தது. அந்த நடிகை கோபித்துக் கொண்டு போய் விட்டாள். இருந்தாலும் பரவாயில்லை. நீ சாப்பிடு. அவள் சொன்னமாதிரி அவ்வளவு மோசமில்லை. தண்ணியைக் கொட்டித் தொலைத்திருக்கிறான்,மடையன்!" என்றார் ரிஷி.

முனிசாமி கவுண்டருக்கு விஷயம் விளங்க ஆரம்பித்தது.

"ஆனால் உங்களுக்கு எப்படி இந்துமதியைப் பற்றி இவ்வளவு தூரம் தெரிந்தது ஸ்வாமி?"

"அதெல்லாம் மலையாள பகவதி உபாசனை பண்ணியபடியால் வந்தது" என்று சொல்லிக்கொண்டே தாடியை எடுத்து ஒரு பக்கத்தில் வைத்து விட்டு என்னைப் பார்த்து, "என்னைத் தெரியவில்லையா, இந்துமதி உனக்கு?" என்று அவர் கேட்டார்.

"உங்களைத் தெரிந்து கொண்டு எனக்கு என்ன ஆக வேண்டும்?" என்று மிடுக்குடன் கேட்டேன்.

"என்னைத் தெரிந்து கொண்டால் எவ்வளவோ பயன் உண்டு. உனக்கு எத்தனையோ விதத்தில் நான் உதவியாக இருப்பேன்" என்றார் அவர். அவர் வேறு யாருமில்லை. சாக்ஷாத் அய்யாக்குட்டியேதான்!

அதன் பிறகு கவுண்டருக்கு அவர் யாரென்பதைக் கூறினேன். கவுண்டர் அதிசயப்பட்டார். "கடவுள் தானம்மா இந்தக் கஷ்ட காலத்தில் இப்படி ஒரு மனிதரை உதவிக்கு அனுப்பியிருக்கிறார்" என்று கூறினார்.

எனக்கும் அய்யாக்குட்டியைப் பார்த்ததில் சிறிது சந்தோஷம் ஏற்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும். எங்களுடைய கஷ்டத்தை ஓரளவுக்கு அவர் தீர்த்து வைக்கலாம் என்ற நம்பிக்கை துளிர் விட ஆரம்பித்தது.

ஆகவே அவர் என்னை உட்காரச் சொன்னவுடன் உட்கார்ந்தேன். கவுண்டரும் உட்கார்ந்தார். இருவரும் காப்பி கொஞ்சம் சாப்பிட்டு விட்டு, (நடிகை கோபித்துக் கொண்டு போனதில் ஒரு தவறுமில்லை என நான் எண்ணியது என்னமோ நிஜம்தான்!) பேசிக்கொண்டிருந்தோம்.

"பத்மநாபன் உன்னை அழைத்துக் கொண்டு போனரே? உனக்கு என்ன ஆயிற்று? நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று கேட்டார் அய்யாக்குட்டி.

"அதெல்லாம் பெரிய கதை. இப்போது சொல்ல முடியாது. மேலும் உங்களுக்கு அதைப் பற்றி என்ன கவலை இருக்கப் போகிறது?" என்று கேட்டேன்.

"நீ அப்படியே இருக்கிறாயே இந்து! துளிக்கூட மாற வில்லையே? இப்போது எதற்காக இந்தப்பக்கம் வந்தீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?"

நான் விஷயத்தைக் கூறினேன்.

"நீங்கள் இருவரும் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் திரும்பி ஊருக்குப் போங்கள். அலைய வேண்டாம்."

"ரொம்ப அழகாக இருக்கிறது! நீங்கள் வேண்டாம் என்றால் நான் உடனே கேட்க வேண்டுமா?"

"அப்படிச் சொல்லவில்லை, இந்து. அந்தப் பள்ளிக்கூடம் ஏதோ காரணத்தால் மூடப்பட்டிருக்கிறது. சற்று முன் மேலே ஏறிப் போன போது பார்த்தோம்."

"அட கடவுளே! திரும்பிப் போகத் தான் வேண்டும்" என்றார் கவுண்டர்.

"நான் இரண்டு நாட்களில் உங்கள் ஊருக்கு வருகிறேன். அங்கு வந்து எல்லாம் பேசிக் கொள்ளலாம். வரும் போது உனக்கு ஏதாவது வேண்டுமானால் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்றார் அய்யாக்குட்டி.

"ஒரு வீசை காப்பிக் கொட்டையும் சர்க்கரையும் வாங்கிக் கொண்டு வாருங்கள். உங்களுக்குக் காப்பி நானே போட்டுக் கலந்து தருகிறேன். அப்போது தான் உங்களுக்கு இந்த நடிகை கோபித்துக் கொண்டதற்குக் காரணம் தெரியும்!" என்றேன்.

"சரி! சினிமாக் கூட்டம் புறப்படுகிறாப்போலே தோன்றுகிறது. நான் போகிறேன்" என்று கிளம்பினர் அய்யாக்குட்டி.

(தொடரும்)

CPG. 1535 (A)



நீங்கள் சும்மா ஒரு புத்தகம் படிக்கும்போதுகூட

உங்கள் சக்தி செலவாகிக் கொண்டு வருகிறது

இழந்த சக்தியை க்ளுகோவிடா எவ்விதம் சரி செய்ய உதவி, உங்களுக்கு தென்பும் சுறுசுறுப்பும் ஊட்டுகிறது.


இரவு பகல் ஒவ்வொரு நிமிஷமும், நீங்கள் விச்ராந்தியுடன் இருப்பதாக நினைக்கும்போது கூட, உங்கள் இருதயமும் மற்றும் முக்யமான உறுப்புகளும் கடுமையாக வேலை செய்கின்றன. அவைகள் தூங்குவதுமில்லை, களைப்பாறுவதுமில்லை. உங்கள் சக்தியை விரயமாக்கிக்கொண்டே வருகின்றன. நித்திய வேலைகளோடு இப்படி வீணாகும் சக்தியும் சேர்ந்து உங்கள் உடல் வலிமையை பாதிக்கக் கூடுமாதலால், உங்களுக்கு அதிகப்படி சக்தி கிடைப்பதற்கு ஒரு மார்க்கம் தேவையாவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதற்கு க்ளுகோவிடா உட்கொள்வதைவிட சிறந்தவழி கிடையாது.

க்ளுகோவிடாதான் சக்தியூட்டும் இயற்கை உணவாகிய சுத்தமான க்ளுகோஸ். அதில் விடமின்களும் தாதுப் பொருள்களுங்கூட சேர்க்கப்பட்டுள்ளன. பிரதிதினமும் இரண்டு ஸ்பூன் அளவு க்ளுகோவிடா, தேநீர், காப்பி அல்லது ஏதாவது குளிர்ந்த பானத்துடன் சேர்த்துப் பருகவும். அது உங்கள் தினப்படி வேலையை எதிர்த்து நிற்கவும் ஓய்ந்த வேளைகளை அதி உற்சாகமுள்ளதாகவும் செய்ய உதவியாயிருக்கும்.

க்ளுகோஸ் மிகஎளிதில் ஜீரணமாகிறது—உடனடியாக சக்தி தருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு அகில இந்திய ஆராய்ச்சியின் மூலம் 10 டாக்டர்களில் 9 பேர் வழக்கமாக இதையே சிபார்சு செய்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவ்வன்றாட அலுவல்களில் எவ்வளவு சக்தி செலவழிகிறதென்பதை பாருங்கள்!

(ஒவ்வொரு வேலையும் அதனால் விரயமாகும் சக்தியை சரிசெய்யக்கூடிய க்ளுகோஸின் அளவைக்கொண்டு மதிப்பிடப்பட்டிருக்கிறது)





ரயிலைப் பிடிக்க ஓடுதல்:
நிமிஷம் 1-க்கு ½ அவுன்ஸ்



தலைமை அதிகாரியுடன் பேசுதல்:
மணி 1-க்கு ¼ அவுன்ஸ்



சும்மா உட்கார்ந்து கொண்டிருத்தல்:
மணி 1-க்கு 1½ அவுன்ஸ்

உங்களுக்கு **க்ளுகோவிடா** அவசியம்

—இன்றே ஒரு டின் வாங்குங்கள்!

காரன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட், பம்பாய் 1-கல்கத்தா 1



ஆற்றங்கரையினிலே

23. உறையூர்

"உயர்வும் தாழ்வும் ஒருவழி நில்லா" என்பது ஓர் உண்மையான வாசகம். உயர்ந்தவர் தாழ்வர்; தாழ்ந்தவர் உயர்வர். இது உலகத்து இயற்கை. அவ்வாறே பேரூர் சிற்றூர் ஆகும்; சிற்றூர் பேரூர் ஆகும். கொங்கு நாட்டில் உள்ள பேரூர் சிற்றூர் ஆயிற்று. தமிழ் நாட்டில் சிறிய ஊராய் இருந்த சிற்றூர் பெரிய ஊராகி ஒரு மாவட்டத்தின் தலைமைப் பதியாக இன்று விளங்குகின்றது.

காவிரியாற்றின் கரையிலே முன்னாளில் பெரிய ஊர்கள் பல இருந்தன. அவற்றுள்ளே தலைமை சான்றது உறையூர் என்னும் திருநகரம். அதுவே சோழ நாட்டின் பழைய தலைநகரம். "ஊர் எனப்படுவது உறையூர்" என்று அதன் சீர்மையைப் பாராட்டினர் செந்தமிழ்ப் புலவர். வடமலை என்னும் பெருமலையில் வேங்கைக் கொடியை நாட்டிய திருமாவளவன் மரபினராய சோழ மன்னர்கள் உறையூரில் அரசு வீற்றிருந்தனர்.

"குலகிரியின் கொடுமுடிமேல்
　　கொடிவேங்கைக் குறியெழுதி
நிலவுதரும் மதிக்குடைக்கீழ்
　　நெடுநிலங்காத்து இனிதளிக்கும்
மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர்
　　வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம்
　　உள்ளுறையு ளாம்உறையூர்"

[குலகிரி - இமயமலை, கொடுமுடி - சிகரம்.]

என்று திருத்தொண்டர் புராணம் அதன் பெருமையைப் பாடிற்று. தமிழ்ச் சோழர் வாழ்ந்த அத் தலைநகரில் கலைமகளும் திருமகளும் களிநடம் புரிவாராயினர். "கார் ஏறும் கோபுரமும், கதிர் ஏறும் சோலைகளும், தேர் ஏறும் வீதிகளும்" அத் திருநகரின் கண் கொள்ளாக் காட்சிகள் என்று பொய்யறியாப் புலவர் பாடினர்.

செழுமை வாய்ந்த உறையூரிலே பிறந்த கோழிகளும் சிறந்த வீரம் வாய்ந்து விளங்கின. அக் கோழிகள் பாய்ந்தும், பறந்தும், படிந்தும், அடித்தும் நெடும் போர் புரிவதைக் கண்டு மகிழ்ந்தனர் பண்டை அரசர்கள். பகைவர் மீது படையெடுத்துச் செல்லாத காலங்களில் அன்னார் கோழிப் போர் கண்டு மகிழ்ந்தனர்.

"வருசெருவொன்று இன்மையினால்மற் போரும்
　　சொற்புலவர் வாதப்போரும்
இருசிறைவா ரணப்போரும் இகல்மதவா
　　ரணப்போரும் இனையகண்டே"

[செரு-போர், சிறை வாரணம்-கோழி, மத வாரணம்-யானை.]

சோழ மன்னன் ஒருவன் இன்புற்றான் என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது. போர்நிகழாத காலங்களில் சோழமன்னன் தலைநகரில் மல்லர்கள் மற்போர் புரிவர்; புலவர்கள் சொற்போர் புரிவர்; கோழியும் கோழியும் கொடும் போர் புரியும்; வேழமும் வேழமும் வெம்போர் புரியும்.

இத்தகைய காட்சிகளில் ஈடுபட்டிருந்த சோழ மன்னன் கண்ணெதிரே ஒரு கோழிக்கும் யானைக்கும் போர் மூண்டது. "ஒழிந்தது கோழி" என்று எண்ணி எல்லோரும் விழித்த கண் இமையால் பார்த்து நின்றனர். சிறிது நேரத்தில் வேழம் தோற்றது; கோழி வென்றது. வீரக் கோழியை வேந்தனும் வியந்து புகழ்ந்தான். "கோழியூர் என்ற பெயர் உறை



யூருக்கு அமைவதாக" என்று ஆணை பிறப்பித்தான். சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ் நூல்களில் கோழியூர் என்ற பெயர் உறையூருக்கு வழங்குகின்றது. சேர நாட்டில் கோழிக்கோடும், (calicut) சோழ நாட்டில் கோழியூரும் முன்னாளில் முடிமன்னர் வாழ்ந்த மணி நகரங்களாகும்.

கற்பரசியாகிய கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரில் கோவில் அமைத்த பின்னர், பிற நாட்டுப் பெரு மன்னரும் தத்தம் நாட்டில் பத்தினிக் கோயில் கட்டத் தலைப்பட்டார்கள். அப்போது உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த பெருங்கிள்ளி என்னும் சோழ மன்னன் "கோழியகத்துப் பத்தினிக் கோட்டம் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தான்" என்று சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. எனவே, சோழ நாட்டிலே பிறந்து, பாண்டி நாட்டிலே கற்பின் திறம் காட்டி, சேர நாட்டிலே தெய்வீகம் உற்ற கண்ணகி காவிரி யாற்றின் கரையில் உள்ள கோழியூரிற் கோயில் கொண்டு அருள் புரிவாளாயினள்.

கோழியூரில் அரசாண்ட கோப்பெருஞ் சோழனுக்கும், பிசிர் என்ற சிற்றூரில் வாழ்ந்த ஆந்தை என்னும் புலவருக்கும் இடையே தோன்றி வளர்ந்த நட்பின் திறத்தினைச் சங்க இலக்கியம் பாராட்டுகின்றது. சோழவள நாட்டின் தலைநகரில் ஏற்றமும் தோற்றமும் வாழ்ந்து விளங்கிய வேந்தனும், பாண்டி நாட்டுப் பட்டியொன்றில் ஏழையாய் உயிர் வாழ்ந்த புலவரும் தலைசிறந்த தோழராய் இருந்தனர். ஒரு நாள் அந்திவானத்தில் அழகாகப் பறந்து சென்ற அன்னப் பறவைகளைக் கண்டார் ஆந்தையார். வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த அன்னங்களில் ஒன்றைத் தோழராகிய சோழ மன்னனிடம் தூதனுப்பத் துணிந்தார். "அன்னமே! சோழ நாட்டுக் கோழியூரிலே வான் அளாவிய மாளிகையைக் காண்பாய்! அங்கே வாழ்கின்ற மன்னன் முன்னே சென்று 'நான் ஆந்தையின் தொண்டன்' என்று சொல்! உடனே முகமலர்ந்து உனக்குப் பரிசளித்து அனுப்புவான் அப்பார் வேந்தன்" என்று பேசினார் ஆந்தையார்.

இத்தகைய மேன்மையுற்றிருந்த உறையூரிலே முத்தமிழும் உயர்ந்து ஓங்கி வளர்ந்தது. தமிழ் இசையைப் பண்ணோடு பாடவல்ல பாணர் குலம் மன்னராலும் மக்களாலும் ஆதரிக்கப் பெற்றது.

பாணர் குலம் மிகப் பழமை வாய்ந்த தமிழ்க் குலமே. ஆயினும், தாழ்ந்த வகுப்பாகக் கருதப்பட்டது. உயர்ந்த குலத்தவரால் ஒதுக்கப்பட்ட பாணர்கள் உறையூரில் ஒடுங்கி அடங்கி உயிர் வாழ்ந்தார்கள். ஆலயங்களில் சென்று வழிபடும் உரிமை அன்னார்க்கு இல்லை. அக் குலத்தார்க்கு அழியாப் பெருமை அளிக்கத் தோன்றினார் ஒரு பாணர்.

இளமையிலேயே அவர் இசைக்கலையை ஆசையோடு கற்றுணர்ந்தார். யாழ் இசையில் கைதேர்ந்த அப்பாணருக்கு ஏழிசையும் இணங்கிப் பணி செய்தது. காவிரி யாற்றின் நடுவே பள்ளி கொண்டருளும் திரு அரங்க நாதனைக் கண்குளிரக் கண்டு பண்ணோடு பாட்டிசைக்க ஆசைப்பட்டார் அப் பாணர். பஞ்சம வகுப்பைச் சேர்ந்த பாணனுக்கு அவ் உரிமை கிடையாது

என்று அறிந்து நெஞ்சம் உருகினார். காவிரி யாற்றின் தென் கரையிலே பெரிய கோயிலுக்கு எதிரே நின்று, கல்லும் புல்லும் கரைந்து உருக நாள்தோறும் மெய் மறந்து இனிய பாட்டிசைத்தார். அவர் பெருமையை அறியாதார் சிலர் கடுமொழி பேசினார்; கல்லையும் வீசினார். ஒறுத்தாரை எல்லாம் பொறுத்தார் திருப் பாணர். அரங்கநாதன் அருளால் சாதிச் செருக்கு அறுந்தது; பாணர் பெருமை சிறந்தது. பழக்கம் வீழ்ந்தது; பண்பாடு வென்றது.

பெரிய கோயிலின் உள்ளே சென்று திருவரங்கநாதன் பள்ளி கொண்ட கோலத்தைப் பார்த்தார் திருப்பாணர்; பரவசமுற்றார்; ஆனந்தக் களிப்பினால் ஆடினார், பாடினார்.

"கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்
உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணி
அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று
ஒன்றினைக் காணாவே"

என்று அவர் இசைத்த தமிழ்ப் பாட்டைக் கேளாத செவி என்ன செவியோ!

உறையூரிலே தோன்றி, இறவாத இன்பத் தமிழால் இறைவனைப் போற்றி, பிறவாத பேறு பெற்ற பாணர் பெருமானைப் பாண் பெருமாள் என்றும், திருப்பாண் ஆழ்வார் என்றும் தமிழகம் வழிபடுகின்றது.

டி.கே.சி.யின் கடிதங்கள்

மூகாம் பம்பாய்
1—11—46

ரயில்ப் பிரயாணத்தில் ஒரு சிறு கம்பார்ட்மெண்டுக்குள் இருபது பேரை அடைக்கிற காரியத்தை நாம் பார்க்கிறோம். Black Hole of Calcutta கொடுமையை இங்கிலீஷ் ஹிஸ்டரியில் (அதாவது இங்கிலீஷ்காரர் எழுதிய இந்தியன் ஹிஸ்டரியில்) வாசித்திருக்கிறோம். ஆனாலும் தாங்கள் குறிப்பிடுகிற "Compressing the maximum of words into the minimum of thought" கொடுமையிலெல்லாம் கொடுமையே.

திருவள்ளுவர் ஏதோ புரட்டி விட்டாராம்.

"கடுகைத் துளைத்(து)எழ்
கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த
குறள்"

கொஞ்ச வார்த்தைக்குள் ஏழு கடல்களைப் புகுத்தி விட்டாராம். அதென்ன பெரிய காரியம்! ஒரு கடுகுக்குள் ஒரு அகராதியையே திணித்தாலல்லவோ பெரிய காரியம்.

எல்லாவற்றிற்கும் காரணம் **பள்ளிக்கூடத்துப் படிப்பு**தான்.

Paraphrase என்றும், பதவுரை, பொழிப்புரை என்றும் மாணவர்களையும் ஆசிரியர்களையுமே—டிரில் வாங்கிக் கொண்டிருக்கிறவரை 'சொற்பொழிவு' நிற்கப் போவதில்லை. குலை சாடிவிட்டால் மரத்தில் காயேது?

பள்ளிக்கூடத்தில் நடக்கிற இன்னொரு காரியத்தையும் சொல்லித் தீர்க்க வேண்டியதுதான்.

அற்புதமான விஷயங்களைப் போதித்துப் போதித்து, இது சாரம், இது சக்கை என்று தெளிக்கிற காரியமே இல்லாமல் போய் விட்டது.

ஏமாளிகள் பத்துப்பேர் கரும்பாலையைப் பேந்தப் பேந்தப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'கருப்பஞ்சாறு குடிக்கிறாயா?' என்று ஒருவனைப் பார்த்துக் கேட்டான் ஆலை ஆசாமி. 'ஆகட்டும்' என்றான் அவன்.

'சாறு வடிகிற பக்கம் உட்காரு. வாயோடு கையை ஏந்து' என்றான். அப்படியே ஏந்தினான். ஆலைக்குள் ஒரு கரும்புத்துண்டு போயிற்று. அடுத்தாற்போல் பேய்க்கரும்பு, சோளத்தட்டை, வேப்பவிளாறு எல்லாமே போயிற்று. அப்படியே மற்ற ஒன்பது பேரும் கருப்பஞ்சாற்றைப் பருகினார்கள். நன்றாய் இருக்கிறதென்றும் சொன்னார்கள்.


ஆலைக்காரன் செய்த காரியம் அயோக்கியத்தனம்.


ஆனால் ஆசிரியர்கள் விஷயமாக அப்படிச் சொல்லுவதற்கில்லை. கரும்பென்று எண்ணியேதான் பேய்க் கரும்பு முதலியவைகளையும் ஆலைக்குள் திணிக்கிறார்கள் அப்பாவிகள்.

கல்வி எல்லாம் இந்த நிலையில் இருக்கும் போது கம்பன் என்றும், கலை என்றும் எதிர்பார்ப்பது அவ்வளவு சரியல்ல. இந்த மண் உலகம் சூரியனைச் சுற்றி இன்னும் இருநூறு தடவை பிரதக்ஷணம் வரவேண்டும் அதற்கு!

இப்படிக்கு,
டி. கே. சிதம்பரநாதன்

குறைந்த சிலவில்
நெடுநாள் உழைக்கும்
வசீகரமான
காங்கிரிட் வீடுகள்





காங்கிரிட்டினால், விசாலமானதும், வாழ்க்கை வசதிகளுடன் வேலை மேம்பாடுடைய வீடுகளை கட்டி, அடிக்கடி செப்பனிட வேண்டிய தொல்லை இல்லாது, குறைந்த வருடாந்தரச் சிலவில் வீட்டு வசதியைப் பெறுங்கள்.

நீலகிரி பிராண்ட்

இந்த புகழ்பெற்ற ஏ சி சி சிமெண்ட் காலமெனும் சோதனையில் தேறியது.

ஏ சி சி

தி சிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

9, மௌண்ட் ரோடு, மதராஸ். 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர். [illegible] கம்பெனி பில்டிங், பங்களூர்.

வேண்டாத விருந்தாளி



ஜெயந்தி

பவானியின் கண்களின் ஓரத்தில் நீர் குமிழியிட்டது. புடவைத் தலைப்பால் கண்களில் துளித்த நீரைத் துடைத்துக் கொண்டாள். நீர்த் திவலைகள் கண்களை மறைக்கவே, அவள் அது வரை பார்த்துக் கொண்டிருந்த புகைப்பட உருவமும் மங்கலாகத் தெரிந்தது; தன் வாழ்வும் மங்கி விட்டதைப் பவானி நினைவுப்படுத்திக் கொண்டாள்.

பூத உடலை மறைத்துக் கொண்டு, புகைப்பட உருவில் இன்று சுவரில் தொங்கும் அவள் கணவர் ஜெயராமன், புலம்பியபடி கண்ணீர் வடிக்கும் அவளை நேரில் பார்த்தால் இவ்வாறு மௌனமாய் இருப்பாரோ?

அவரது நிரந்தர மறைவு, அவளை நீடித்த துயரில் ஆழ்த்தி விட்டது என்பதை இனி அவர் உணரப் போவதில்லை! தமக்குப் பின் அவளை ஆதரிக்க மூன்று ஜீவன்கள் தயாராக இருப்பதாக நினைத்து நிம்மதியாகக் கண்ணை மூடி விட்டார்.

"பவானி! நான் போய் விட்டால் நீ அநாதையாகி விட மாட்டாய்! உன்னைக் கவனித்து ஆதரிக்க ராஜா மாதிரி உன் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்! கவலையே படாதே! நீ பெற்ற பிள்ளைகள் உன்னைக் கைவிட்டு விடுவார்களா?"

கடைசியாக அவர் கேட்ட கேள்வி அதுதான்! அதற்குப் பவானி யோசித்துப் பதில் சொல்லுவதற்கு முன் அவர் ஆவி பிரிந்து விட்டது.

இன்றைய நிலைமையை நினைத்துப் பார்க்கும்போது, இரண்டு வருடங்களுக்கு முன் மரணப் படுக்கையில் தன் கணவர் இருந்து கொண்டு கேட்ட கேள்விக்குத் தான் பதில் சொல்லி இருக்கக் கூடுமானால், அன்று தான் சொல்ல இருந்த பதில் முற்றிலும் தவறானது என்பதைத் தற்போதைய சம்பவங்களுடன் ஒப்பிட்டுத் தீர்மானித்துக் கொண்டாள் பவானி.

அவரும் அவளிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன. அப்பப்பா! அன்றிலிருந்து அவளுடைய மனநிம்மதியும் அவளிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்து விட்டதை அவள் நன்றாக உணர்கிறாள்.

பவானி கடந்த இரண்டு வருடங்களை நினைத்துப் பார்த்தாள்.

மும்மணிகள் போன்று மூன்று பிள்ளைகள் பவானிக்கு இருக்கிறார்கள். மூத்தவன் ஜகந்நாதன் சென்னையில் கல்லூரிப் பிரின்ஸிபால். இளையவன் காசிநாதன் மதுரையில் சொந்த 'டிஸ்பென்ஸரி' நடத்தி வருகிறான். மூன்றாவது பையன் சந்திரசேகரன் பம்பாயில் 'ஆட்டோமோபைல்ஸ் என்ஜினீயராக' இருக்கிறான். கைநிறையச் சம்பாதிக்கும் மூவரும் கவலையின்றி வாழ்க்கை நடத்தும்போது பவானி கண்கலங்கக் காரணமென்ன?

பவானிக்கு இனி வாழ்க்கையில் தேவையானவை என்ன? வைர நகையும், பட்டுப் புடவையுமா அவள் கேட்கிறாள்? வயிற்றை நிரப்ப உணவும், நொந்த உள்ளத்துக்குச் சாந்தியளிக்கும் அன்பான வார்த்தைகளையும் மட்டுந்தானே அவள் இந்த உலகில் எதிர் பார்க்கிறாள்!

பவானியின் கண்களில் தேங்கிய கண்ணீர்த் துளி 'டப்' என்று அவள் கையில் விழுந்தது. நெருப்பைப் போல் சுடும் அந்த நீர்த்துளி உண்மையில் கண்களிலிருந்தே வடிந்தாலும் அதன் பிறப்பிடம் உள்ளே வேகும் அவளது நொந்த இதயத்தின் அடித்தளம் என்பதை அவளைத் தவிர, வேறு யார் அறிவார்கள்?

"அம்மா! அம்மா...அம்மா!"-அன்போ, ஆதுரமோ இன்றி அந்தக் குரல் தொடர்ந்து வெளிவந்தது.

"........................"

"அம்மா! என்ன எப்பொழுது பார்த்தாலும் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்து விடுகிறாய்? ம்... அப்புறம் உன் தீர்மானம்தான் என்னம்மா?" என்றான் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே. அவள் அருகில் நிற்கும் உருவத்தைப் பார்க்கத் தயங்கினாள். அங்கு நின்றது யார்?

ஆம்! அவள் மூத்தபிள்ளை ஜகந்நாதனே தான்! அவள் பெற்று, வளர்த்துச்சீராட்டி, பாலூட்டி வளர்த்த பிள்ளையேதான்!



அவளைப் பார்க்க அவன் ஏன் தயங்குகிறான்! அவள் மௌனம் ஜகந்நாதனின் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. துக்கத்தில் பேச்சு வராமல் திணறும் பவானியை அவன் புரிந்து கொள்ளவில்லை. அவள் தன்னை அலட்சியம் செய்து விட்டதாகவே அவன் 'பிள்ளைமன'த்துக்குப் பட்டது!

"அம்மா! இன்னுமா யோசனை? ராத்திரி வண்டிக்குப் புறப்பட வேண்டாமா? இப்படி வாய்மூடி மௌனமாயிருந்தால் என்னம்மா அர்த்தம்?"—அன்பு ததும்ப 'அம்மா!' என்று இனிமையாக அழைக்க வேண்டிய வாயில் அதே சொல் 'அனல் கக்கும்படி' வெளி வந்தது.

பவானிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. துக்கத்தை விழுங்கிக் கொண்டே நிலத்தைக் கீறியபடி யோசனையில் ஆழ்ந்து விட்டாள். எதிரில் நிற்கும் ஜகந்நாதனுக்கு என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

அந்தச் சூழ்நிலையில் அவள் தன்னை ஒரு 'வேண்டாத விருந்தாளி'யாக எண்ணிக் கொண்டாள். அன்றொருநாள் ஜகந்நாதனின் மனைவி அவளிடம் என்ன பேச்சுப் பேசி விட்டாள்!

"ம்...உங்களுக்கும் கொஞ்சம் சாமர்த்தியம் வேண்டும். நான்கு மாதங்களுக்கு மேல் ஒரு நாள் தம்மிடம் வைத்துக்கொள்ள உங்கள் மதுரைத் தம்பி சம்மதித்தாரா? அவரும் உங்கம்மாவின் பிள்ளைதானே! அவருக்கு மட்டும் உறவு விட்டா போய் விட்டது? கடைசித் தம்பி சாமர்த்தியமாகத் 'தம்பதி சமேதராக'க் கல்கத்தா போகப் போவதால் அம்மாவைத் தற்போது அனுப்ப வேண்டாம் என்று எழுதி விட்டார். நீங்கள் ஆறு மாத காலமாக இங்கே வைத்துக் கொண்டு இன்னும் தவிக்கிறீர்கள். ருசி கண்ட பூனை உரியை விட்டு நகருமா?"-வார்த்தை அம்புகளால் வர்மத்தை வெளிக்கொட்டியபடி சமையலறையிலிருந்து குரல் வருவதைப் பவானி கேட்டுக் கொண்டாள். அவள் எண்சாண் உடம்பும் சொல்லம்புகளால் கடுமையாகத் தாக்கப்பட்டு ஒரு சாணாகக் குறுகியது.

எதிர்வீட்டுப் பாகிரதி அடிக்கடி சொல்லும் ஒரு வார்த்தை அப்போது அவள் நினைவுக்கு வந்தது.

"மாமி! என்னதானிருந்தாலும் கல்யாணமாகும் வரைதான் உங்கள் பிள்ளை உங்களுடையவன்! அதன்பின் அவன் யாரோ, நீங்கள் யாரோ!"—அவள் அடிக்

கூடி இவ்வாறு சொல்வது அப்போது பவானிக்குக் கேலியாகவே தோன்றியது. இன்று அவள் நிலைமையை நினைக்கும் போது பாரதியின் தீர்க்க தரிசனம் முற்றிலும் உண்மை என்பதை அவள் மனம் ஒப்புக் கொண்டது.

ஜகந்நாதன் பொறுமையை இழந்து விட்டான். "ஏனம்மா! கால்மணி நேரமாக நானும் கேட்கிறேன். நீ வாயடைத்துக் கிடக்கிறாயே!"— பெற்ற பிள்ளை தாயிடம் பேசும் தோரணையா இது?

ஆனால், அவன் அப்படித்தான் கேட்டான். பவானி திடீரென்று அழுகையை அடக்க முடியாமல் விம்மினாள். அவள் நெஞ்சம் நெருப்பின்றி ஜகந்நாதனின் கடும் வார்த்தைகளாலேயே வெந்து கொண்டிருந்தது.

"ஜகந்நாதா! நான் எதையடா தீர்மானிப்பது? ஹூம்! பத்து மாதம் வயிற்றில் சுமந்தேன் உங்களை! இன்று உங்கள் வீட்டு நிலம் என்னைச் சுமப்பதைக் கூட உங்களால் விட்டு வைக்க முடியவில்லை! என் ரத்தத்தைக் கொடுத்து வளர்த்த உங்களிடம் ஒரு வாய் சோற்றைக்கூட நான் எதிர்பார்க்கக் கூடாதா? உன் தம்பி காசி என்னை இனி அவன் வீட்டு வாசற்படி மிதிக்கக்கூடாத அளவுக்குப் பேசி விட்டான் ...... நீயாவது என்னை ஆதரிப்பாய் என்று நினைத்தேன்... விவரம் தெரிந்த நீங்களே இப்படியிருந்தால் சின்னவன் சேகரன் என்னை எப்படி நடத்தப் போகிறானோ?" ...... பவானி அநேக விம்மல்களுக்கிடையே இதைச் சொல்லி முடித்துவிட்டு நடுங்கியபடி நின்றாள்.



ஜகந்நாதன் வாய் திறக்கவில்லை. தன் தாயார் கூறிய வார்த்தைகளை அணு அணுவாக ஆராய முற்பட்டான். அவள் கூறிய வார்த்தைகள் அவன் நெஞ்சில் நன்றாகப் பதிந்து விட்டன.

"ம்...பத்து மாதம் வயிற்றில் சுமந்தாள்... தற்போது என் வீட்டு நிலம் அவளைச் சுமப்பது கூடவா எனக்குப் பொறுக்கவில்லை!" அவன் மனத்தின் ஒரு கூறு அவனை மனித உணர்ச்சியோடு இருக்கத் தூண்டியது.

ஆனால், அது நீடிப்பதற்குள்...? "இதோ பாருங்கோ! இந்தப் பேச்சுக் கெல்லாம் தலையசைத்துச் சுமையை நாங்களே தாங்கிக் கொள்வதாக இருந்தால் என்னால் இங்கிருந்து கொண்டு பொங்கிப் போட முடியாது! உங்கம்மாவை ராத்திரி வண்டிக்கு அனுப்ப இஷ்டமில்லா விட்டால், அதே வண்டிக்குப் பம்பாய் புறப்பட்டு நான் என் அண்ணாவிடம் போகிறேன்!—" ஜகந்நாதனின் மனைவி அம்புஜத்தின் கண்டிப்புக் கலந்த பேச்சு அவனை உணர்வு பெறச் செய்தது. அவன் மனத்தில் பவானியின் மேல் அன்பு சுரந்தது; ஆனால், அது பிரதிபலித்த விதம் வேறு.

பவானியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க அவன் கண்கள் கூசின. "அம்மா! நான் சொல்கிறேன் என்று வருத்தப்படாதே! என்னைப் போல்தான் உன் மற்ற இரண்டு பிள்ளைகளும் சம்பாதிக்கிறார்களே! அவர்களும் உன்னை ஆதரிக்கக் கூடாதா? காசி அப்படிச் சொல்லி விட்டான் என்று நீ என்னிடம் வந்தாய். நான் என்ன உன்னை 'வராதே' என்று தடுத்தேன்! அதே போல் என் சௌகரியத்தையும் அனுசரித்து உன்னைச் சேகரனிடம் அனுப்புகிறேன். கொஞ்ச நாள் அவனிடம் இருந்து விட்டு வந்தால் உனக்கு ஆறுதலாக இருக்காதா? அவன் அடுத்த வாரந்தான் கல்கத்தா போகப் போவதாக எழுதியிருக்கிறான். நீ இன்றைக்கு ராத்திரி மெயில் ஏறினால் முப்பது மணி நேரத்தில் பம்பாய் போய் விடலாமே! இதையெல்லாம் அனுசரித்துத் தானம்மா நடந்து கொள்ள வேணும்."

அம்மாவுக்கு உபதேசம் செய்து விட்டு அவளை இரவு ரயிலுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தான் ஜகந்நாதன். பவானி பேசும் சக்தியை இழந்து சிலை போல் நின்றாள்.

"பாட்டி! இப்ப ஊருக்குப் போயிட்டு எப்ப வருவே!" என்று குழந்தை பானு, பாட்டி

பவானியின் கால்களைக் கட்டிக் கொண்டு மழலைமொழியில் கேட்டாள்.

பவானி தர்மசங்கட நிலையில் சிக்கித் தவித்தாள்.

"டீ, பானு! வாடி இங்கே! பாட்டியைப் பிரிந்து உன்னால் இருக்க முடியாதோ?" என்று சீறிக்கொண்டு வந்து வீறிட்டழும் பானுவை இழுத்துச் சென்றாள், பவானியின் நாட்டுப்பெண் அம்புஜம்.

கடிகாரம் வஞ்சகமின்றிக் காலத்தைக் காட்டியது. தன் பிரயாணத்தைத் துவக்க வேண்டிப் பவானி தயாராகி விட்டாள். மனித உணர்ச்சி அவளிடம் மரத்து விடாததால் இனியும் அங்கே தங்கியிருக்க அவள் விரும்ப வில்லை. பெற்ற பிள்ளைகளில் இரண்டு பேரையும் அவள் உணர்ந்து விட்டாள். இனி மூன்றாமவன் எப்படியோ?......

"அம்மா! கவலைப்படாதே! ஸ்டேஷனுக்கு வரச் சொல்லிச் சேகருக்குத் தந்தி அடித்திருக்கிறேன். வந்து விடுவான்!" என்று தைரியம் கூறிப் பவானியை அனுப்பி விட்டான் ஜகந்நாதன். தன் சுமை குறைந்து விட்டால் யாருக்குத்தான் திருப்தி ஏற்படாது?

ஓடும் வண்டித் தொடர் பம்பாயை அடைய முப்பது மணி நேரமாகலாம். ஆனால், பவானியின் சிந்தனை மூன்றே வினாடிகளில் பம்பாய் நகரையும், சேகரையும் பற்றி நினைத்து முடித்து விட்டது!

"நீ பெற்ற பிள்ளைகள் உன்னைக் கை விட்டு விடுவார்களா?" என்று அவள் கணவர் அன்று கேட்டார். இன்று அவர் உயிரோடு இருந்தால்?...

பவானியின் சிந்தனை குரங்கைப் போல் கிளைக்குக் கிளை தாவியது. "இவர்கள் இரண்டு பேரும் ஏதோ கொஞ்ச நாள் தங்களிடம் இருக்க அனுமதித்து விட்டு அனுப்பினார்கள். சேகரனோ, நான் கிளம்புவதற்கு முன்பே, 'இப்போது அனுப்பாதே!' என்று எழுதியிருக்கிறான். ஹூம்! நானும் அவனைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்!" பவானி பிரயாணம் முடிவதற்குள் இம்மாதிரி பலமுறை சிந்தித்துப் பார்த்து விட்டாள்.

இரண்டு இரவுகள் கழிந்து பொழுதும் விடிந்தது. பம்பாய் நகரை அடையும் மகிழ்ச்சியால் பூதாகாரமான என்ஜின் நீண்ட குரலில் கூவி நிறுத்தியது. அதே வண்டித் தொடரில் பம்பாய் நெருங்கி விட்டதே என்று ஏங்கித் தவித்துப் பெருமூச்சு விட்டது ஓர் மனித யந்திரம்.

* * *

காலை மணி எட்டு. வண்டி 'விக்டோரியா டெர்மினஸி'ல் வந்து நின்றது. பாஷை புரியாத ஜனங்கள்; பார்த்தே இராத ஊர். பதற்றம் மேலிடப் பரிதவிப்பு தாங்காமல் அலை பாய்ந்தாள் பவானி. பல திசைகளிலும் பார்த்தாள். ஹூஹூம்! சேகர் வந்திருப்பான் என்று அவள் எள்ளளவும் நம்ப வில்லை. அவள் ஆசைகள்தான் நிராசையாகி விட்டால் அவள் அறிவுமா மழுங்கி விடும்?

பிரயாணக் களைப்பு; மன உளைச்சல்; பீதி நிறைந்த உள்ளம். இவை பவானியை அங்கிருந்து நகரவொட்டாமல் தடுத்தன. அவள் ஆஸ்தியெல்லாம் அடங்கிய ஒரு பை; அதை இறுகப் பிடித்துக் கொண்டு நடமாட்டம் குறைவான இடத்தில் பிளாட்பாரத்தில் உட்கார்ந்தாள் பவானி!

"பெற்ற பிள்ளைகள் தான் அவளை விரட்டி விட்டார்கள்! பிளாட்பாரமாவது அவளை உட்கார அனுமதிக்குமா?"—பவானி பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

"ஹூம்! சேகர் ஸ்டேஷனுக்கு வருவான், போ!" என்றான் ஜகந்நாதன். அத்துடன் அவன் கடமை தீர்ந்து விட்டதாக அவன் நினைத்தான்.

"அம்மாவை இப்போது அனுப்ப வேண்டாம்! அடுத்த வாரம் கல்கத்தா போகிறேன் நான்!" என்று சேகர் எழுதி விட்

கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி
நினைவுச் சிறுகதைப் போட்டி
2000 ரூபாய் பரிசு

தமிழில் அருமையான பல கதைகள் எழுதி அழியாப் புகழ் பெற்ற கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

தேர்ந்தெடுக்கும் கதைகளுக்குப் பரிசுத் தொகை ரூ. 2000 கீழ்க் கண்டவாறு வழங்கப்படும் :

முதல் பரிசு ரூ. 500/- :: இரண்டாம் பரிசு ரூ. 250/-
மூன்றும் பரிசு ரூ. 125- வீதம் பத்துக் கதைகளுக்கு.

இந்தப் போட்டியின் முடிவுத் தேதி 30—6—1955

நிபந்தனைகள் :

1. போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனையாக, தமிழ் நாட்டின் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் இசைந்த முறையில் இருக்க வேண்டும்.
2. 'கல்கி' இதழில் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாத அளவில் அமைய வேண்டும்.
3. நல்ல காகிதத்தில் இடைவீடுகள் விட்டு ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும்.
4. முதலாவது பக்கத்தின் தலைப்பில் 'கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், கல்கி, சென்னை - 10" என்ற விலாசத்துக்கு 1955 ஜூன் 30-ந் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.
5. முடிவுத் தேதிக்குப் பின் வந்து சேரும் கதைகள் இந்தப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.
6. ஒரே எழுத்தாளர் இந்தப் போட்டிக்கு என்று மூன்று கதைகள் வரை அனுப்பலாம்.
7. கதை அனுப்பும்போது, அத்துடன் எழுதியவர் தமது கைப்பட இக் கதை சொந்தக் கற்பனை என்றும், தமிழிலோ அல்லது வேறு மொழியிலோ இந்தக் கதை அல்லது இதுபோன்ற கதை தம்மாலோ அல்லது வேறொருவராலோ எழுதப்படவில்லை என்றும் ஒரு உறுதி மொழி அனுப்ப வேண்டும்.
8. பரிசுக்குத் தேர்ந்தெடுத்த கதைகளைக் 'கல்கி' இதழில் வெளியிட்ட பிறகு, இக் கதைகளை வேறு மொழிப் பத்திரிகைகளிலோ அல்லது புத்தகமாகவோ வெளியிடுவதற்கு உரிய எல்லா உரிமைகளும் கதை எழுதிய ஆசிரியரையே சாரும்.
9. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கதைகளுடன் போதிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். கதைகள் திரும்ப அனுப்பப்படும் என்று உறுதி கூறுவதற்கில்லை.
10. பரிசுக்குரிய கதைகள் தவிர, பிரசுரத்துக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுபவை, 'கல்கி' இதழ்களில் வெளியாகும். அவற்றிற்கு வழக்கம் போல் சன்மானம் அளிக்கப்படும்.
11. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு பரிசிலனைக் குழு நியமிக்கப்படும்.
12. இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

கல்கி காரியாலயம்
சென்னை-10

சதாசிவம்
மானேஜிங் டைரக்டர்

டான். அவனும்தான் தன்னுடைய கடமையை உணர்ந்து முன்னறிவிப்பாகத் தெரிவித்து விட்டான்.

ஆனால் இருதரத்தாரும் உதைக்கும் பந்து நடு மைதானத்தில் உருளுவதைப் போல், பவானி பம்பாய் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் தனித்து நின்றாள்.

கூச்சலிட்டபடி சுமைகளைத் தாங்கிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ஓடும் பிரயாணிகளைப் பவானி மௌனமாக உட்கார்ந்து கொண்டு கவனித்தாள். ஹூம்! மனத்தில் சந்துஷ்டியுடன் அங்குமிங்கும் ஓடும் ஜீவன்களின் முன் துயரமே உருவெடுத்து ஆதரவற்று உட்கார்ந்திருக்கும் தன்னைப் பற்றி நினைத்துப் பார்த்தாள்.

பவானியின் முன் ஏதோ நிழலாடவே திடீரென்று தலை நிமிர்ந்தாள். அவள் முகத்தை உற்றுக் கவனித்தான். அவள் எதிரில் நின்ற அந்த வாலிபனின், "மாமி, மாமி! பவானி மாமி! நீங்களா?" என்று ஆச்சரியம் கலந்த குரலைக் கேட்டுப் பவானி எழுந்து நின்றாள்.

அந்தப் புதிய பிராந்தியத்தில் அவளுக்கு அறிமுகமான ஒரு புதிய நபர் இருப்பதைக் கண்டு அவள் வியப்பு எல்லை மீறியது. தலை முதல் கால் வரை அந்த வாலிபனை உற்றுப் பார்த்து விட்டு, "யாரு நீ...நம்ப சிதம்மா பிள்ளை ராமச்சந்திரனா?" என்றாள். வறண்ட தொண்டையிலிருந்து வார்த்தைகள் வெளிவரத் தயங்கின.

"ஆமாம், மாமி! எங்கே இப்படித் தனியாகக் கிளம்பி விட்டீர்கள்?"

வியப்புடன் அவன் கேள்வி கேட்டதும் பவானிக்கு எந்தவித பதிலும் சொல்லத் தோன்றவில்லை. பழைய சிந்தனை அவள் மனத்தில் பின்னிக் கொண்டது. அவள் கணவர் உயிருடன் இருந்தபோது அவள் வீட்டில் சமையல்காரியாக இருந்த சிதம்மாவின் பிள்ளைதான் அந்த வாலிபன். தன் பிள்ளைகளைப் போல் அவனையும் அன்புடன் கவனித்தாள் பவானி. அன்று அவள் காட்டிய அன்புதான் அவ்வாலிபனை இன்று அனாதரவாக நிற்கும் அவளை நோக்கி ஆகர்ஷித்துள்ளது.

"மாமி! ஏன் பேச மாட்டேனென்கிறீர்கள்?" என்று பிரமிப்புடன் கேட்டான் அந்த வாலிபன். பவானி தன்னைச் சமாளித்துக் கொண்டு "ம்.........ராமு! அம்மா சௌக்கியமா?" என்று கேள்வியைப் போட்டாள். அவன் தன் அம்மாவை எந்த நிலையில் வைத்திருக்கிறான் என்பதை அறிய அவள் உள்ளம் துடித்தது. ஆனால் அந்த வாலிபன் சொன்ன பதிலிலிருந்து சிதம்மா தன்னைப் போல் துரதிர்ஷ்டசாலியாக இராமல் பிள்ளையை ஒரு வழிக்குக் கொண்டு வந்து விட்டுத் தன் கண்ணை மூடிவிட்டாள் என்பதையறிந்து கொண்டாள். ராமச்சந்திரன் அவளிடம் தொடர்ந்து பேசினான்.

"மாமி! உங்கள் கடைசிப் பிள்ளை சேகர் இங்கு தாதரில்தானிருக்கிறான். ஒருநாள் நான் அவனைச் சந்தித்துப் பேச முயன்றபோது என்னைத் தெரியாதவன் போல நடந்து கொண்டு விட்டான். அப்புறம் நான் அவனுடன் பேசவில்லை. நேற்று ராத்திரி வேலை முடிந்து நான் திரும்பும் போது அவன் கல்கத்தா மெயிலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்!" என்று கூறி நிறுத்தினான் ராமச்சந்திரன்.

அவன் சொன்னதைக் கேட்டுத் தீயை மிதித்தாற்போல் துள்ளினாள் பவானி. "என்ன, அவன் கல்கத்தா போய் விட்டானா?" என்றாள் பீதி கலந்த குரலில்.

ராமச்சந்திரன் விஷயத்தை ஊகித்துக் கொண்டு விட்டான்.

"மாமி! உங்களை வரச் சொல்லிவிட்டா அவன் போய் விட்டான்?" சேகரின் செய்கையை இழிவாக நினைத்துத்தான் அவளிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

ராமச்சந்திரன் இவ்வாறு கேட்கவும், என்னதானிருந்தாலும் பவானியின் பெற்ற மனம் தன் பிள்ளையைப் பிறர் இழித்துக் கூற இடங் தராததால் அவள் உண்மையை மறைத்து விட்டாள்.

"இல்லே ராமு! நான்தான் திடீரென்று கிளம்பி வந்து விட்டேன்!" என்றாள் துக்கத்தை விழுங்கியபடி.

ஆனால், ராமச்சந்திரன் நன்றி மறக்கவில்லை. தன்னையும் தன் தாயாரையும் உப்பிட்டு வளர்த்த பவானியை அவன் கைவிட்டு விடவில்லை. அவள் நிலைமை அவனுக்குப் புரிந்து விட்டது!

"சேகர் இங்கு இல்லையே என்று நீங்கள் கவலைப் படாதீர்கள்! அவன் திரும்பி வரும்வரை என் வீட்டில் நீங்கள் தாராளமாகத் தங்கி யிருக்கலாம். உங்களால்தானே மாமி நான் முன்னுக்கு வந்தேன்! பத்தாவது பரீட்சைக்குப் பணம் உங்கள் கையிலே வாங்கித்தானே கட்டினேன்! பையைக் கொடுங்கள். நான் எடுத்து வருகிறேன்!" என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே பவானியிடமிருந்து பையை வாங்கிக் கொண்டான் ராமச்சந்திரன்.

ஆழ் கடலில் அலைமோதும் கப்பல் திசையை நோக்கிச் செல்வதைப் போல் பவானி ராமுவைப் பின்தொடர்ந்தாள்.

"ம்...நான் பெற்ற பிள்ளைகள் என்னை ஆதரிப்பார்கள் என்று நான் கனாக் கண்டேன். ஆனால் இந்த அனாதரவான நிலையில் என்னை ஆதரித்தவன் என் வயிற்றில் பிறவாத பிள்ளையான நீதான் ராமு!" என்று தனக்குள் முனகிக் கொண்டே பவானி நடப்பதை ராமு அறிவானா?


நம் நாட்டு நங்கை
விரும்புவது
நாகரீகச்சேலை
சக்தி ஸில்க் எம்போரியம்
8. வடக்கு மாட வீதி,
மைலாப்பூர், மெட்ராஸ்-4.
SAKTHI
SILK EMPORIUM



சிதம்பரம் ஸ்ரீமந் நடராஜமூர்த்தி திருக்கோயில் திருப்பணி

மஹா கும்பாபிஷேகம்

மன்மத வருஷம் ஆனிமீ 23உ (7-7-55) வியாழக்கிழமை

○●○

"திருச்சிற்றம்பலம்" **"திருச்சித்திரகூடம்"** ஆக சிவ - விஷ்ணு மூர்த்தங்களின் பொது உறைவிடமாகத் திகழும் **தில்லை திருக்கோயிலில்** பழுதடைந்த பல்வேறு முக்கியமான பாகங்களைப் புதுப்பித்து **திருப்பணி** வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப் பூலோக கைலாயத்தில் எழுந்தருளியிருக்கும் "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" ஆகிய **ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கு** நாளது ஆனி மாதம் 23-ம் தேதி (7-7-55) வியாழக்கிழமை **சம்புரோக்ஷணை - மகா கும்பாபிஷேகம்** நடைபெறவிருக்கிறது. மேற்படி தேதிக்குள்ளாக **திருப்பணி** வேலைகளை முடிப்பதற்கு ஏராளமான பொருள் தேவையாக இருக்கிறது. ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு **சித்சபையில்** திருநடனம் புரியும் **ஸ்ரீமந் ஆனந்தத் தாண்டவ மூர்த்திக்கு** நடைபெற்று வரும் தெய்வப் பணியில் சிவநேசச் செல்வர்களும் ஆஸ்திகப் பொது மக்களும் மனமுவந்து பெரும் பங்கெடுத்துக் கொண்டு, **"சத் கைங்கரியம்"** திட்டப்படி சிறப்புற நடைபெறச் செய்ய வேணுமாய்க் கோருகிறோம். மேற்படி தெய்வப்பணிக்கான நன்கொடைகளை "ஸ்ரீ சபாநாயகர் கோயில் திருப்பணி மகா கும்பாபிஷேகக் கமிட்டி, சிதம்பரம்" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

சிதம்பரம்
15 - 5 - 1955

திருப்பணி மகா கும்பாபிஷேக கமிட்டியார்

ரவிசந்திரிகா



சோமு

10. "குழப்பம் வந்ததடி!"

ரவீந்திரனை அவனுடைய வீட்டிலே கொண்டு போய் விட்டு விட்டுத் தமது காரைத் திருப்பிக் கொண்டு டாக்டர் புறப்பட்ட போது, இரவு இரண்டரை மணிக்கு மேல் இருக்கும். அந்த அகாலத்தில் புத்தூரிலுள்ள தம்முடைய வீட்டுக்குப் போவது என்றால், டாக்டர் எத்தனை வேகமாகக் காரை ஓட்டியிருக்க வேண்டும்! ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை; செய்ய முடியவில்லை. அவருடைய கார் மிக மிக மெதுவாகத்தான் நகர்ந்தது. அவருடைய மனம் முழுதும் ரவீந்திரன் தன் இதயத்தை அப்படியே விண்டு சொன்ன அந்தரங்க மொழிகளிலேயே உருண்டு புரண்டு கொண்டிருந்தது.

ஆமாம்; திருச்சி ஜெனரல் ஆஸ்பத்திரியில் தம்முடைய அறைக்குள்ளே ரவீந்திரனை அழைத்துச் சென்று அவனுடைய ரகசியங்களையெல்லாம் தம்மிடம் சொல்லும்படி செய்வதற்கு எத்தனை சாமர்த்தியமும் இங்கிதமும் கையாண்டார் டாக்டர்! அந்த ரகசியங்களைத் தெரிந்து கொள்வதிலேதான் அவருக்கு எத்தனை ஆவல் இருந்தது! ஆனால் அவற்றைத் தெரிந்து கொண்ட பின்போ? ஆவல் அடங்கிற்று. ஆனால் கவலை? அது பன்மடங்காக அதிகரித்து விட்டது!

"டாக்டர், நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று எனக்குப் படுகிறது. அதனால் அந்த சோகக் கதையை உங்களிடம் சொல்கிறேன். இன்னொரு டம்ளர் தண்ணீர் கொண்டு வரச் சொல்லுங்கள்!" என்று ரவீந்திரன் கூறியதும், டாக்டர் தாமே சென்று ஒரு கண்ணாடித் தம்ளரில்

தண்ணீர் கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்தார் அல்லவா? அதில் ஒரு மடக்குக் குடித்து விட்டு ரவீந்திரன் பேச ஆரம்பித்தான்.

சந்திரிகாவின் கதையை ஆதியிலிருந்து சொல்ல ஆரம்பித்தான் ரவீந்திரன். முதன் முதலாக அவளை ரயில் வண்டியில் சந்தித்ததிலிருந்து தொடங்கினான். மெதுவாக ஆரம்பித்த பேச்சு, நேரம் ஆக ஆக வேகத்தோடும் படபடப்போடும் ரயில் வண்டியின் வேகத்தில் ஓட ஆரம்பித்தது!

"டாக்டர்! இலஞ்சிக் கச்சேரிக்குப் போய்விட்டு நான் ஊர் திரும்பிய போது, ஜட்கா வண்டியிலிருந்து என்னுடன் ஒரு சிறு பெண் இறங்கியதைக் கண்டு, வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு வந்த கல்யாணி திகைத்தாள். அப்படியே திகைப்போடு பார்த்தாள்.

"காட்டிலே வளர்ந்த மல்லிகை இது. ஜன்ம ஜன்மாந்தர வாசனைகள் நிரம்பியது!" என்று சந்திரிகாவை என் மனைவிக்கு அறிமுகப்படுத்தினேன். மீண்டும் திகைப்போடுதான் அவளைப் பார்த்தாள் கல்யாணி. அந்தப் பெண் ஒரு பிச்சைக்காரச் சிறுமியாகக் கந்தல் உடையில் காணப்பட்டதால் என் மனைவி அப்படித் திகைப்போடு பார்த்தாள் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ? அதுதான் இல்லை. அந்தக் கந்தல் துணியையெல்லாம் தென்காசியிலேயே அவளுடைய தலையைச் சுற்றித் தூர எறிந்துவிட்டேன். புதிதாக ஒரு சிட்டிப் பாவாடையும் கருநீல வர்ணத்தில் கத்திரிப் பூப் போட்ட ரவிக்கையும் வாங்கி, என் வாழ்க்கையில் முதன் முதலாகச் சந்திரிகாவுக்கு அலங்காரம் செய்தேன். அந்த அலங்காரத்தோடேயே தான் அவளை வீட்டுக்கு அழைத்து வந்திருந்தேன்.



அப்படியானால் ஏன் என்னுடைய மனைவி அந்தச் சிறுமியைப் பார்த்து அப்படித் திகைத்தாள்? இந்தக் கேள்விக்குப் பதில் தெரிந்து கொள்ள எனக்குப் பலநாள் ஆயிற்று. பெண்களுடைய இதய தத்துவம் அந்தக் காலத்தில் எனக்கு அவ்வளவாகப் புரிந்திருக்கவில்லை. நீங்கள் டாக்டரானதால் உங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். அப்படித்தானே?

இதன் பிறகு நான்கு வருஷங்கள் என் வாழ்க்கை எவ்வித இடையூறும் இன்றி ஓடிற்று. அந்த நாலு வருஷங்களில் நான் சந்திரிகாவுக்கு எனக்குத் தெரிந்த கடன முறைகள் அனைத்தையும் கற்பித்தேன். புகழ் பெற்ற கங்கமுத்து நட்டுவனாரின் பரம்பரையில் பிறந்ததின் பயனாக, வழி வழிச் சொத்தாக எனக்குக் கிடைத்திருந்த இசைச் செல்வத்தையெல்லாம் சந்திரிகாவுக்கு மகிழ்ச்சியோடு வழங்கினேன்.

டாக்டர், இந்த சந்தர்ப்பத்தில் என் இதய ஆசை ஒன்றை உங்களுக்குச்சொல்ல

வேண்டும். ஆரம்பத்தில் நான் என் சங்கீத வாழ்க்கையை வாய்ப்பாட்டிலே தான் தொடங்கினேன். ஆனால் நாளடைவில் "மகரக் கட்டு" என்ற பாழாய்ப் போகிற தொல்லையினால் என் சாரீரம் இனிமை இழந்து லாகவமற்றுப் போயிற்று. அதன் பிறகுதான் புல்லாங்குழல் வாத்தியம் சாதகம் செய்ய ஆரம்பித்தேன். அப்படியில்லாமல் வாய்ப்பாட்டே நீடித்திருக்குமானால், என் வாழ்க்கை இதற்குள் வேறு எப்படியெல்லாமோ திரும்பி யிருக்கும். ஆனால் அது குறித்து இப்போது எண்ணிப் பயனில்லை. வருந்த வேண்டியதும் அவசியமில்லை. உண்மையில் சந்திரிகாவின் சந்திப்பு எனக்கு எப்பொழுது கிட்டியதோ அப்பொழுதே என் கனவுகள் எல்லாம் நிறைவேறும் காலம் வந்து விட்டது என்று எண்ணி மகிழ்ந்தேன். என் கனவுகளும், என் ஆசைகளும் நனவாகும் பாக்கியம் என் சொந்த வாழ்வில் இல்லாமற் போய் விட்டாலும், சந்திரிகாவினது நடனத்தின் மூலம் அத்தனையும் நிறைவேறும் என்று மனக் கோட்டை கட்டினேன். ஆனால் இப்பொழுது ஏற்பட்டு விட்ட சிக்கல்களைப் பார்த்தால் உள்ளம் நடுங்குகிறது. எந்த நேரத்தில் என்ன விபரீதம் வந்து தொலைக்குமோ என்று எப்பொழுதும் பயப்படுகிறேன் டாக்டர்!"

இப்படிச் சொல்லி விட்டு ரவீந்திரன் மீண்டும் ஒரு மடக்குத் தண்ணீர் குடித்தான். பிறகு கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மேலே பேச ஆரம்பித்தான்.

"குளுமையான பௌர்ணமி இரவுகளில், மாடியிலே ஜமக்காளம் விரித்து அதில் நின்று நடனம் ஆடுவாள் சந்திரிகா. நான் அவளுடைய நடனத்துக்குப் புல்லாங்குழல் வாசிப்பேன். நேரம் போவதே தெரியாமல் நாங்கள் இருவரும் பரிபூரணமான இன்பம் நிறைந்த இசை யுலகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருப்போம்.

இப்படி யிருக்கும்போதுதான், டாக்டர், ஒரு நாள் நான் சந்திரிகாவுக்குப் பாரதியாரின் கண்ணன் பாடல் ஒன்றைச் சொல்லிக் கொடுத்தேன். அந்தக் காலத்தில் மிக மிகப் பிரசித்தமாக வந்து கொண்டிருந்த பாடல் அது.

"தூண்டிற் புழுவினைப்போல்—வெளியே
சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சம் துடித்ததடி!"

என்று பாடிக் கொண்டே அபிநயம் பிடித்து நடனம் ஆடினாள் சந்திரிகா.

இந்தப் பாட்டின் மூலமாகத்தான் என் வாழ்விலே பின்னல் விழுந்தது!"

இப்படி ரவீந்திரன் சொன்னபோது கண் இமைகளை மூடி, ஒரு விநாடி வினையின் இமைகளை ஒன்று சேர்த்தான்! கைகளை மேஜைமேல் வைத்து, அந்தக் கைகளின்மேல் முகத்தைச் சாய்த்தவாறு அமர்ந்திருந்த டாக்டரோ நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். ரவீந்திரன் வார்த்தைகளை வேகமாகச் சொல்லிக் கொண்டே போனான்:—



"உணவு செல்லவில்லை—சகியே
உறக்கம் கொள்ளவில்லை
மணம் விரும்பவில்லை—சகியே
மலர் பிடிக்கவில்லை !"

என்ற வார்த்தைகளுக்குச் சந்திரிகா அபிநயம் பிடிக்கும்போது நான் திகைத்தேன். புல்லாங்குழலைக் கீழே வைத்து விட்டு அவளையே பார்த்தேன். காரணம், அந்தச் சொற்களின் பாவம் அவளுடைய முகத்தில் பூரணமாகப் பிரதிபலிக்கவில்லை.

"குணம் உறுதியில்லை—எதிலும்
குழப்பம் வந்ததடி
கனவும் உன்னத்திலே—சுகமே
காணக் கிடைத்ததில்லை !"

என்று, சந்திரிகா அந்தப் பாட்டை ஏதோ பாடம் ஒப்பிப்பது போல் ஒப்பித்துக் கொண்டே அபிநயத்தைத் தொடர்ந்தாள்.

காதலின் தவிப்பினால், கண்ணனோடு கலந்து நின்ற உள்ளத்தின் ஏக்கத்தினால், அளவு கடந்த ஆற்றாமையினால், ஏற்படுகிற சஞ்சலங்களையெல்லாம் கவி அந்த வார்த்தைகளில் எத்தனை அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார் ! அந்த உணர்ச்சிச் சாயலைச் சந்திரிகாவினால் தன் முகத்திலே கொண்டு வந்து பிரதிபலிக்க முடியவில்லை.

"பாலும் கசந்ததடி—சகியே
படுக்கை நொந்ததடி
கோலக் கிளிமொழியும்—செவியில்
குத்தல் எடுத்ததடி !"

என்ற வார்த்தைகள் வரும் போது நான் அப்படியே எழுந்து நின்றேன்.

"சந்திரிகா ! இன்றுதான் முதன் முதலாக உன் அபிநயத்தில் தோல்வி காண்கிறேன். வார்த்தைகளின் பொருளை மட்டுமே உன் அபிநயம் காட்டுகிறது. ஆனால் அந்தச் சொற்களிலே இழைகின்ற உணர்ச்சியின் ஆழத்தை, அந்த இன்ப வேதனையை உன் முக பாவத்திலே காணோம் !" என்று சொன்னேன். இப்படிச் சொன்ன போது என் வார்த்தைகளின் பொருளை நானே உணரவில்லை. சந்திரிகா சிரித்தாள். சொன்னாள் :

"ஆமாம் ! தோல்வியை ஒப்புக் கொள்கிறேன். எனக்கே புரியாத ஒரு விஷயத்தைப் பிறர் புரிந்து கொள்ளும்படி நான் எப்படி முகத்திலே காட்டுகிறது ?" என்று கேட்டாள் சந்திரிகா. அப்பொழுதுதான் நான் என்னுடைய குற்றச்சாட்டின் பொருளை உணர்ந்தேன். திகைத்துப் போய்க் கீழே உட்கார்ந்தேன். சந்திரிகா தொடர்ந்து சொன்னாள் :

"பால் எங்காவது கசக்குமா ? கிளி மொழி எங்காவது செவியிலே போய்க் குத்தல் எடுக்குமா ?—இந்தப் புரியாத கற்பனைகளையெல்லாம் எப்படி அபிநயத்திலே கொண்டு வருவது ?"

இந்தக் கேள்விக்கு நான் எவ்விதமான பதிலும் சொல்லவில்லை.

"சரி, மேலே பாடு !" என்றேன். சந்திரிகா என்னுடைய குரலிலே தொனித்த அதிருப்தியைக் கவனித்தவளாக மீண்டும் அந்தப் பாட்டை ஆரம்பத்திலிருந்து பாடினாள்.

"குணம் உறுதியில்லை—எதிலும்
குழப்பம் வந்ததடி !"

என்ற அடிகளை அவள் பாடி அபிநயம் பிடித்த போது, நான் அந்தப் பாடலின் வசமாகி அப்படியே அவள் அருகிலே சென்று நின்று கொண்டு, கண்களும் கைகளும் அந்த இடத்தில் எப்படிச் சோர்ந்து போக வேண்டும் என்பதையும், 'குழப்பம் வந்ததடி !' என்ற இடத்தில் கைகளை நெற்றிக்குப் பக்கத்திலே கொண்டு போய்க் குழப்பத்தை எப்படிச் சுழற்றிக் காண்பிக்க வேண்டும் என்பதையும் அவளுக்குக் கற்பித்தேன். அப்பொழுது நான் அவளுடைய கையைப் பிடித்து அந்தச் சுழற்சியைச் சுழற்றிக் காட்டினேன்.

டாக்டர், உண்மையைச் சொல்கிறேன். நாலு வருஷங்களிலும் இல்லாதபடி அன்று என்னுடைய உடம்பு நடுங்கியது. சந்திரிகாவுக்கோ கையெல்லாம் பதறியது !

இது ஒரு நாள் அநுபவம்.

ஒரு வாரம் கழித்து, இன்னொரு நாள் மீண்டும் அந்தப் பாட்டைப் பாடி அபிநயம் பிடித்தாள் சந்திரிகா. ஆனால் அன்று முன்னைவிட உணர்ச்சியின் சாயல்கள் முகத்திலே இன்னும் தெளிவாக ஓடின. அதிலும்,

"அச்சம் ஒழிந்ததடி—சகியே
அழகு வந்ததடி"

என்று பாடி விட்டு,

"என்னும் பொழுதெல்லாம்—அவன்கை
இட்ட இடத்தினிலே
தண்ணென் றிருந்ததடி—புதிதோர்
சாந்தி பிறந்ததடி !"

என்ற அடிகளை அவள் பாடிய போது, முகத்திலே விளையாடிய உணர்ச்சிகளை எப்படிச் சொல்லுவேன் ! அப்படியே மெய்ம் மறந்து போய் எழுந்தேன். "சந்திரிகா" என்று கூப்பிட்டுக் கொண்டே அவளுடைய கரங்களைப் பற்றினேன். ஏதோ ஒரு மின்சாரம் அவளுடைய உடம்பிலிருந்து புறப்பட்டு, அந்த வளைக் கரங்களின் வழியாக என்னுடைய கைகளிலே தாவி என் உடம்பெல்லாம் ஓடித் துவண்டது !

"அண்ணா" என்றாள் அவள். அப்படித்தான் அவள் என்னை எப்பொழுதும் அழைப்பாள். அந்த அழைப்பு உடனே என்னை இந்த பூமிக்குக் கொண்டு வந்து நிறுத்தியது. திகைத்துப் போய் நின்றேன்.

"அண்ணா, எங்கோ தெரு வீதியிலே அலைந்து திரிந்து திண்ணைகளிலும் சாலை ஓரத்திலும் படுத்துறங்கி மிருகமாக வாழ வேண்டிய என்னை, இந்த நிலைக்குக் கொண்டு வந்தது உங்களுடைய அன்பு தான். இந்த உடம்பு உங்களுடையது. இந்த சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அணுவும் உங்களுக்குச் சொந்தம். இதை எப்படி ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டுமோ அப்படிச் செய்ய உங்களுக்குப் பூரண உரிமை உண்டு. ஆனால்......ஆனால்...... ஆனால்......" என்று வார்த்தைகளை இழுத்தாள் சந்திரிகா.

"ஆனால் அப்படிச் செய்வது முட்டாள்த்தனம், மிருகத்தனம்!" என்று அந்த வாக்கியத்தை முடித்தேன் நான்.

இது இன்னொரு நாள் அநுபவம்.

இதன் பிறகு எத்தனையோ நாட்கள் நாங்கள் இருவரும் தனிமையாக அந்த மாடியிலே பௌர்ணமி இரவுகளில் பாட்டும் கூத்துமாக ஒரே ஆனந்தத்தில் இருந்திருக்கிறோம். அப்பொழுதெல்லாம் அளவு மீறிய கட்டுப்பாடும் ஜாக்கிரதையும் என்னை வரம்பு செய்து காத்து வந்தன.



டாக்டர், என்னை வித்தியாசமாக நினைக்காதீர்கள். இத்தனை கட்டுப்பாட்டோடும் விழிப்போடும் நான் நடந்து வந்தபோதிலும், என் உள்ளத்திலிருந்து அந்தக் காட்சியை மட்டும் அழிக்க முடியவில்லை. தன்னந் தனியாக உட்கார்ந்து நான் யோசித்துக் கொண்டிருந்தால், திடீரென்று அந்தக் காட்சி என் கண்முன் தோன்றும். சந்திரிகா மௌனமாக நிற்பது போலவும், நான் அவளுக்கு அருகிலே சென்று, அவளுடைய அந்தப் பூங்கரங்களைப் பற்றுவது போலவும் எல்லாம் கனவு காண்பேன்.

நாட்கள் இப்படி ஓடிக் கொண்டிருந்தன. ஒரு நாள் இரவு, நான் மாடியில் திறந்தவெளியிலே படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தேன். நிலவும், இளம் காற்றும் சேர்ந்து சுகமாக இருந்தன. உறங்கி விட்டேன். திடீரென்று யாரோ என்னுடைய கைகளைப் பிடிப்பது போல் இருந்தது. கனவுதானோ என்று பதறி விழித்தேன். வளையல்கள் குலுங்கிய ஓசை கேட்டது. சந்திரிகா பதறிப் போய்த் தன்னுடைய கைகளை உதறிக் கொண்டு நின்றாள்.

"சந்திரிகா" என்றேன். அந்த அழைப்பிலே என் இதயமும் ஆத்மாவுமே சேர்ந்து ஒலித்தன.

"அண்ணா—" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்த சந்திரிகா, தன் நினைவுக்கு வந்தவளாக, "ஒன்றுமில்லை. அன்று நீங்கள் என் கைகளைப் பிடித்தீர்களல்லவா? எப்படிப் பிடித்தீர்கள் என்று நானும் பிடித்துப் பார்த்தேன்-" என்று சொல்லி விட்டு, முகம் எல்லாம் வெளிறிப் போய் நின்றாள். நிலைமையைச் சமாளித்துக் கொள்ளக் கஷ்டப்படுகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட நான், "பேஷ்! பேஷ்!" என்று சொல்லிக் குலுங்கக் குலுங்கச் சிரித்து என் உள்ளத்தின் உணர்ச்சிகளையெல்லாம் கொண்டு குலுக்கிச் சிதறினேன்!

டாக்டர், இதுதான் எனக்கும் சந்திரிகாவுக்கும் இடையே உள்ள தொடர்பு. இது வரை ஒரு வரம்புக்குள்ளேயே நாங்கள் இருவரும் இயங்கி வந்து விட்டோம். இந்த நிமிஷம் வரை எங்களுடைய இதய அரங்கத்திலே நடைபெறுகிற உணர்ச்சிகளின் நடனத்தில் தாளம் தவறியதில்லை. இந்த வினாடிவரை எங்களுடைய இதய கீதத்தில் அபஸ்வரம் பேச வில்லை. ஆனால்...... ஆனால்... ஆனால்...டாக்டர், எண்ணவே பயமாக இருக்கிறது. என்றைக்கு வரம்பு கடந்து விடுமோ, எந்த நிமிஷம் தாளம் தவறுமோ, எந்த வினாடி அபஸ்வரம் விழுந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். அதிலும் என் மனைவியின் கோப தாபங்கள் அதிகரிக்க அதிகரிக்க இந்த அச்சமும் என் உள்ளத்தில் அதிகரிக்கிறது. எல்லையைத் தாண்டாதே என்று அறிவு சொல்கிறது. இதயமோ எல்லை கடந்து பொங்குகிறது. என்ன செய்வேன்? என்னுடைய உள்ளத்தை ஒரு வீணை என்று சொன்னீர்கள். மெய்யான வார்த்தை. இந்த வீணை சில சமயங்களில் சுருதி கலைகிறது. அந்த வேளையில் இதைச் சுருதியிலே கூட்டிச் சேர்க்க வேண்டுமென்றால், மாடகத்தை மெதுவாகத் திருக்க வேண்டும். கல்யாணி பல சமயங்களில் ஆவேசத்தோடு இந்த வீணையை முறுக்க ஆரம்பித்து விடுகிறாள். அப்பொழுதெல்லாம் என் நரம்புகள் துடிக்கின்றன. வீணையின் தந்திகள் சின்னாபின்னம் ஆகி விடுகின்றன!

டாக்டர், இந்த வீணையை லாகவமாக எடுத்து வாசித்தால் எத்தனை கீதங்கள் எழும்! ஐயோ! இந்தத் தந்திகளை மெதுவாக இங்கிதமாகச் சுருதி கூட்டும் ஒரு மெல்லிய பூங்கரத்தை நாடி என் இதயம் தவிக்கிறது. இதன் ஒலியோடு ஒத்து ஒலிக்கும் ஒரு வீணைக்காக என்னுடைய

இந்த இதய வீணை ஏங்குகிறது. ஆனால் அதே சமயம் அந்த நாட்டம் தவறானது. அந்த ஏக்கம் பிசகானது என்று என் உள் மனத்தில் ஏதோ ஒன்று இடித்துக் கூறிக்கொண்டேயிருக்கிறது. என்றாலும்... என்றாலும், என்றோ ஒருநாள்...டாக்டர், நீங்கள்தான் மனத் தத்துவம் தெரிந்தவர் ஆயிற்றே, சொல்லுங்கள், என்றோ ஒரு நாள், ஒரு பௌர்ணமி இரவில் நான்... நான்...இந்தக் கடினமான வரம்பைக் கடந்து விடுவேனோ?''

டாக்டர் ஒரே மௌனமாக இருந்தார். கம்பிய குரலில் உணர்ச்சியின் வசமாகி வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டே செல்லும் ரவீந்திரனை அவர் இடைமறிக்கவில்லை. அவனுடைய கலங்கும் விழிகளையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கண்களிலேதான் எத்தனை சோகம்! கண்ணீர் பொங்கிப் பெருகும் அந்தக் கருவிழிகளிலே கண்ணீர்த் துளியையும் ஊடுருவிக் கொண்டு அறிவின் பிரகாசம் நின்றது. அந்த ஒளியைப் பார்த்தவாறு டாக்டர் கவனமாக வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார்.

''டாக்டர், நீங்களே சொல்லுங்கள். எனக்கும் சந்திரிகாவுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது? காதல் என்று அதைச் சாதாரணமான வார்த்தையிலே சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னால் அது சரியா? நான் எடுத்து வளர்த்த குழந்தை சந்திரிகா. அவளிடம் உள்ள பாசத்தைக் காதல் என்று எப்படிச்சொல்வது? ஆனால் வெறும் அன்பு என்றுதான் அதைச் சொல்ல முடியுமா? அதுவும் தவறு. உண்மையில் அவளை ஒரு நிமிஷம் பார்க்கவில்லையென்றால் என் மனம் எப்படியெல்லாம் ஏங்குகிறது! அவளுடைய முன்னிலையில் என் உள்ளத்தில் எத்தனை இசைக் கற்பனைகள் தோன்றி எழுகின்றன! அவளுக்காக என் இதயம் எத்தனை ஏங்குகிறது! சதா சர்வதா அவளோடு இருக்க வேண்டும் என்றல்லவா என் நெஞ்சம் துடிக்கிறது! இது காதல் இல்லையென்றால் பின் எதுதான் காதல்? இது காதல் இல்லை என்றால், அவளைக் காதலிப்பதற்கு இன்னொரு மனிதன் இந்த உலகில் இருக்கிறானா? ஐயோ! அந்த நினைவையே என்னால் தாங்க முடியவில்லையே! இன்னொரு மனிதன் சந்திரிகாவைக் காதலிப்பதா? டாக்டர், டாக்டர் என் மூளை குழம்புகிறது. அறிவு குமைகிறது. சொல்லுங்கள். இந்தக் குழப்பத்துக் கெல்லாம் என்ன பெயர் என்று சொல்லுங்கள், டாக்டர்! எனக்குப் புரியவில்லையே!''



ரவீந்திரனுடைய கண்களிலிருந்து பொல பொல வென்று நீர்த்துளிகள் உதிர்ந்தன. குரல் நன்றாக அடைத்துக் கொண்டு கம்பியது.

இதுவரை மௌனமாக இருந்த டாக்டர் இப்பொழுது பேச ஆரம்பித்தார் :—

''ரவீந்திரன், உங்களுடைய உணர்ச்சிகளையெல்லாம் நன்றாக வாங்கிக் கொண்டேன். உங்கள் குழப்பத்தில் நானும் பங்கு கொள்கிறேன். மற்றப்படி வேறு என்ன சொல்லுவேன்? மனத்தின் தன்மைகளை எப்படி நிர்ணயிப்பது? சரீரத்தைச் சோதிக்க என்னிடம் எத்தனையோ கருவிகள் இருக்கின்றன. ஹிருதயத்தைப் பரிசோதிக்க இதோ 'ஸ்டதஸ்கோப்' கிடக்கிறது. ஆனால் உள்ளத்தைச் சோதித்துப் பார்த்து அறிவது எப்படி? மனத்துக்கு மனம் எத்தனை வேறுபாடுகள் காண்கிறோம்! இதில் எதை எப்படி நிர்ணயிப்பது? ஆனாலும்—''

''ஆனாலும் என்ன டாக்டர், சொல்லுங்கள் டாக்டர்! பண்பாட்டின் எல்லையைக் கடந்து விடுவேனா டாக்டர்! ஐயோ! சந்திரிகாவின் மேனியும் அதன் லாவண்யமும் என்னைப் பைத்தியம் ஆக்கிவிட்டதா! அப்படியானால் கல்யாணி? அவளுடைய கோபதாபங்கள்? அந்தக் கோபமும் தாபமும் என்னிடம் அவளுக்குள்ள அபார அன்பின் அடையாளங்கள்தானே? அவற்றிற்குத் துரோகம் செய்து விடுவேனா நான்?''


டாக்டர் இந்த இடத்தில் புன்முறுவல் புரிந்தார். சொன்னார் :

''ரவீந்திரன்! கவலைப்படாதீர்கள்! உங்களுடைய மன இயல்பு எனக்கு நன்றாகப் புரிகிறது. நீங்கள் இன்றிரவு வீட்டுக்குச் செல்லுங்கள். உங்களுடைய மனைவி வீட்டில் இல்லையல்லவா? சந்திரிகா தனியாகத்தான் இருக்கிறாள். எனவே இரவு முழுதும் சந்திரிகாவுடன் தனியாகத்தான் இருக்கப் போகிறீர்கள். அப்படியே இருங்கள். உங்கள் இதயத்தின் நாட்டத்துக்கும் அறிவின் கட்டளைக்கும் எப்படிப் போர் நடக்கிறது, பிறகு என்ன முடிவு ஏற்படுகிறது என்பதைப் பார்ப்போம். கவலைப்படாதீர்கள். புறப்படுங்கள். நானே உங்களைக் கொண்டு போய் வீட்டில் விடுகிறேன்'' என்றார் டாக்டர்.

''கல்யாணி என்ன ஆனாள்?'' என்று கேட்டான் ரவீந்திரன், மிக்க கவலையோடு.

''அவன் மயக்க மருந்தின் வேகத்தில் நன்றாக உறங்கிக் கொண்டிருக்கிறான். காலை எட்டு மணிக்குத்தான் மயக்கம் தீர்ந்து விழிப்பான். அதற்குள் நீங்களும் உங்களுடைய மயக்கம் எல்லாம் தீர்ந்து நிம்மதியாக இங்கு வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.''

இவ்வாறு சொல்லிவிட்டு ரவீந்திரனைத் தோளின்மேல் கை வைத்துக் கூட்டிக் கொண்டே காரிலே ஏற்றித் தாயுமானவர் தெருவை நோக்கிப் புறப்பட்டார், திருச்சி ஜில்லா வைத்திய உதவி அதிகாரி டாக்டர் சுரேஷ்.



* * *

படிகளிலே ஏறிய ரவீந்திரன் பாம்பை மிதித்தவன் போலத் திகைத்து நின்றான் அல்லவா? தாளிடப்பட்டிருந்த வீட்டின் மாடியிலிருந்து வேற்றுக் குரல், வாலிபக் குரல், ஆண் குரல் நன்றாகக் கேட்டது ரவீந்திரனுக்கு. காலால் மிதித்த பாம்பின் விஷம் தலைக்கு ஏறிற்று.

வழக்கம்போல் ரவீந்திரனுடைய உடம்பெல்லாம் பதறிற்று. கையும் காலும் 'வெடவெட' என்று ஆடின.

''ஆண் குரல்! இந்த நிசி நேரத்தில் அதிக ஓசையில்லாமல் மெதுவான பேச்சு! தாளிடப்பட்ட அறையிலே தன்னந் தனியாக இருக்கும் சந்திரிகாவோடு ஒரு ஆடவன் இந்த நேரத்தில் உறங்காமல் பேசுகிற ரகசியப் பேச்சு! கதவைத் தட்டிய பின்னும் திறப்பதில் தாமதம்!''

இத்தனை எண்ணங்களும் இன்னும் கோடிக் கணக்கான எண்ணங்களும்—எல்லாம் ஒரு விநாடிக்குள்ளே!

கதவைத் தட்டிய ரவீந்திரனுடைய கை அதற்கு மேல் தட்டுவதை நிறுத்தியது. 'சந்திரிகா' என்று அன்போடு கூப்பிட்ட நாக்குச் சொல்லற்று நின்றது. அந்தப் படிகளிலே வேகமாக இறங்கினான் ரவீந்திரன். தெரு வீதிக்கு வந்தான். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. மாடியிலிருந்து சந்திரிகா வந்து கதவைத் திறப்பதற்கு முன் அந்த இடத்திலிருந்து மறைந்து விட வேண்டும் என்று எண்ணியவனாக, தாயுமானவர் தெருவைத் தாண்டித் தெற்குத் தெருவுக்கு வந்து, மலைவாசல் படிகளிலே ஓட்டமும் நடையுமாக இறங்கி, பெரிய கடை வீதியை அடைந்து 'விறு விறு' என்று காற்றின் வேகத்திலே படர்ந்தான்.

காரும் வண்டியுமாக எத்தனையோ சுருசுருப்பாக இரைச்சல் போடுகின்ற திருச்சிக் கடைவீதி அயர்ந்து போய் நித்திரை செய்து கொண்டிருந்தது. வானத்தில் அரைகுறையாகத் தோன்றிய சந்திரன் மேகத்திலே பட்டும் படாமலும் வெளிறிப் போய் மிதந்து கொண்டிருந்தான். கடைகள் எல்லாம் கதவுகள் மூடி ஒரே மோன அமைதியிலே சீண்டுவாரற்றுக் கிடந்தன!

வீதியில் நடக்க ஆரம்பித்த ரவீந்திரனுடைய கால்களுக்கு, எங்கிருந்துதான் அத்தனை வேகம் வந்ததோ! மனம் முந்தியதோ, அல்லது கால் முந்தியதோ என்று சொல்ல முடியாத அத்தனை வேகத்தில் 'படபட' என்று கைகளை வீசிய வண்ணம் நடந்தான், இல்லை, ஓடினான் ரவீந்திரன். அந்தக் காட்சி பரிதாபமாக இருந்தது!

மனித மனத்தின் இயல்புகளை எப்படி நிர்ணயித்துக் கூறுவது என்று சொன்னார் டாக்டர். உண்மையான வார்த்தை. எந்தச் சந்திரிகாவிடம் ஒரு விநாடிக்கு முன்பு வரை எல்லையற்ற பாசம் இருந்ததோ, எந்தச் சந்திரிகாவுக்காக அத்தனை ஏக்கம் ஏங்கி அத்தனை அன்பு மொழிகளை டாக்டரிடம் சற்று முன்பு பொழிந்தானோ, எந்தச் சந்திரிகாவினுடைய தொடர்பினால் தன்னுடைய வாழ்வின் கனவுகள் எல்லாம் மலரும் என்று இதயபூர்வமாக ஆசைப்பட்டானோ அதே சந்திரிகா இப்பொழுது வேம்பாகக் கசந்து விட்டாளா? எந்தப் பெண்ணின் அன்புக்காக அவனுடைய உள்ளம் அத்தனை துடிப்புத் துடித்ததோ அந்தப் பெண்ணை வெறுத்தா அவன் அப்படி நடந்தான்? ஆர அமர ஆராய்வதற்குக் கூட உள்ளம் இடம் தராதா? ஆத்திரம் என்பது அத்தனை கொடுமையானதா? இதயத்தின் ஏகபோக உரிமையுணர்ச்சிக்குத்தான் எத்தனை விபரீத நினைப்புக்கள் எவ்வளவு சீக்கிரம் ஏற்பட்டு விடுகின்றன! என்ன விந்தை மனிதர்கள்! என்ன விநோதமான மன இயல்புகள்! அன்பு அதிகமாக அதிகமாக விபரீத எண்ணங்களும் சந்தேகங்களுங்கூட அதிகமாகி விடுமோ?

''குணம் உறுதியில்லை—எதிலும்
குழப்பம் வந்ததடி!''

என்று கவி பாடினாரே, அது எவ்வளவு உண்மையாகி விட்டது!

பாரசீகக் கவிஞன் பாடியபடி, சிருஷ்டி உலகத்திலே மனிதர்களை ஆக்குகின்ற கையானது, மண்டையோட்டிலே ஒரு எழுத்தாணியைப் பிடித்து வேகமாக எழுதிக் கொண்டிருக்கிறது! அதற்கு எதைப் பற்றித்தான் கவலை? (தொடரும்)



உமா ஒரு பூனைக் குட்டி வளர்த்து வந்தாள். கீதா என்று அதற்குப் பெயர். கீதா மிகவும் நல்ல பூனைக்குட்டி. திருட்டுத்தனமாக அது பாலைக் குடிக்காது; எங்காவது நல்ல காரியமாய்ப் போகும்போது குறுக்கே போகாது; நடு இரவிலே 'மியாவ், மியாவ்' என்று கத்தித் தூக்கத்தைக் கெடுக்காது.

இப்படிப்பட்ட பூனைக்குட்டியின் மேல் ஒரு நாள் உமாவின் அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது. ஏன்? அது ஏதாவது தப்புச் செய்து விட்டதா?

அன்று 'அம்மா, அம்மா!' என்று கூவிக்கொண்டே அம்மாவிடம் ஓடிவந்தாள் உமா. அப்போது அவள் கையிலே கண்ணாடி டம்ளர் உடைந்து இரண்டு துண்டுகளாயிருந்தது. அதைக் காட்டி, "இதோ பாரம்மா, நான் காப்பி குடித்து விட்டுச் சுவர் ஓரமாக டம்ளரை வைத்திருந்தேன். கீதா தட்டி உடைத்து விட்டது" என்றாள்.

அதே சமயம் கீதாவும் அங்கே வந்தது. "என்ன, கீதா உடைத்துவிட்டதா? இவ்வளவு நாளும் சாதுமாதிரி இருந்ததே இந்தப் பூனைக் குட்டி. இப்போது என்ன கேடு காலம் வந்து விட்டது?" என்று சிறிது கோபமாகக் கூறினாள் உமாவின் அம்மா.

"என்னம்மா, இப்படி என் மேலே பழியைப் போடுகிறீர்களே! உங்கள் மகள் உமா அவசரமாக ஓடி வரும்போது அவள் கால் பட்டு டம்ளர் உடைந்து விட்டது. அதற்கு நான் என்ன செய்வது?" இப்படி அந்தப் பூனைக்குட்டி கீதாவுக்குப் பேசத் தெரிந்திருந்தால் சொல்லியிருக்கும். ஆனால், அதற்குத்தான் பேசத் தெரியாதே! அதனால், உமா சொன்னதை அவள் தாயார் அப்படியே உண்மையென்று நம்பி விட்டாள். 'அம்மாவை ஏமாற்றி விட்டோம்' என்று உமா அப்போது ஆனந்தப்பட்டாள்.

மறுபடியும் இதே போல் ஒன்று நடந்தது. உமா வீட்டுக்கு அடுத்த வீட்டிலே சந்திரா என்று ஒரு பெண் இருந்தாள். இருவர் வீட்டுக்கும் நடுவிலே கம்பிவேலி போடப்பட்டிருந்தது. சந்திராவைப் பார்ப்பதற்கு உமா வேலிக் கம்பிகளுக்கு இடையிலே புகுந்து போவதுண்டு. சுற்றிப் போவதற்குச் சோம்பேறித்தனம்!

அன்று உமா வேலி வழியாகப் புகுந்து போகும்போது அவளுடைய பாவாடை வேலிக் கம்பியிலிருந்த முள்ளிலே சிக்கிக் கிழிந்து விட்டது. இரண்டு அங்குல நீளத்துக்கு அந்தப் புதுப் பட்டுப் பாவாடை கிழிந்து போய் விட்டது! இந்தக் குற்றத்தையும் கீதா தலையில் போட்டு விட்டாள் உமா! இதையும் உண்மையென்று நம்பி, கீதா மீது கோபப்பட்டாள்.

இது நடந்து பத்து நாள் இருக்கும். அன்று அப்பா ஆபீசுக்குப் புறப்பட்டுப் போய் விட்டார். அவர் போனதும், அவருடைய மேஜை அருகே உமா சென்றாள். அங்கிருந்த மேஜைக் கடிகாரத்தைக் கையிலே எடுத்தாள். அப்பாவைப் போல் சாவி கொடுத்துப் பார்க்க வேண்டுமென்பது அவளுடைய எண்ணம். ஆனால், சாவி கொடுக்கும் போது கை தவறி விட்டது. 'டங்' என்ற ஓசையுடன் கடிகாரம் கீழே விழுந்தது. அவ்வளவுதான். இந்த சத்தத்தைக் கேட்டதும், உமாவின் அருகே நின்று கொண்டிருந்த கீதா பயந்து அடுத்த அறைக்கு ஓடிவிட்டது. அம்மாவும் அப்போது அங்கே வந்துவிட்டாள்!

"ஐயையோ! இந்தக் கடிகாரத்தை யார் தள்ளியது?" என்று பதறிக் கொண்டே கடிகாரத்தைக் கையில் எடுத்துப் பார்த்தாள். முன்னாலிருந்த கண்ணாடி சுக்கு நூறாக உடைந்து போயிருந்தது. முள்ளிலே ஒன்று வளைந்திருந்தது. 'டக் டக்' என்ற சத்தமும் நின்று போய் விட்டது.

உடனே உமா, "இந்தக் கீதா ரொம்ப மோசம், அம்மா. அப்பாவுடைய நாற்காலியிலே அது ஏறி, ஒரே தாவாக மேஜை மேலே தாவினதைப் பார்த்தேன். உடனே கடிகாரத்தைத் தள்ளிவிடுமோ என்று பயந்து மேஜை அருகிலே ஓடினேன். நான் போகிறதுக்குள்ளே தள்ளி விட்டு ஓடிப் போய் விட்டது, அம்மா!" என்று சொன்னாள்.

உடனே அம்மாவுக்குக் கீதா மேல் சொல்ல முடியாத கோபம். "வீட்டிலே ஒரு சாமான் வைக்க விடாது போலிருக்கிறதே! சேச்சே, உன் அப்பாவுக்கு இது தெரிந்தால் இந்தப் பூனைக்

குட்டியை வீட்டை விட்டே துரத்தி விடுவார்!" என்றாள் அம்மா.

இதைக் கேட்டதும் உமாவுக்குத் 'திக்' கென்றது. 'ஐயோ! அம்மா சொன்ன மாதிரி அப்பா செய்து விட்டால், அப்புறம் எனக்கு எப்படிப் பொழுது போகும்? கீதா என்னிடத்திலே எவ்வளவு பிரியமா யிருக்கிறது! பாவம்!' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

இது நடந்த தினத்தன்று இரவு அப்பா ஆபீஸிலிருந்து வர வெகு நேரமாகி விட்டது. அவர் வருவதற்குள் உமா தூங்கி விட்டாள்.


மறுநாள் காலை மணி ஏழு இருக்கும். உமா படுக்கையை விட்டு எழுந்தாள். வழக்கமாகத் தலைமாட்டிலே வந்து உட்கார்ந்திருக்கும் கீதாவை அன்று காண வில்லை. ஒவ்வொரு அறையாகத் தேடிப் பார்த்தாள். கிடைக்க வில்லை. பிறகு அம்மாவிடம் சென்று "அம்மா, கீதா எங்கே?" என்று கேட்டாள்.

"அந்தப் பூனைக் குட்டி எங்கே தொலைந்தால் என்ன? உன் அப்பா ராத்திரி வந்ததும் நடந்ததைச் சொன்னேன். அவருக்கு வந்த கோபத்திலே அந்தப் பொல்லாத பூனைக் குட்டியைப் பிடித்து வீட்டுக்கு வெளியே தள்ளிக் கதவை அடைத்து விட்டார். எவனாவது பிடித்துப் போய்இருப்பான்!" என்றாள்.

பாவம், உமாவுக்கு ஒரே கவலை. வீடு விடாகச் சென்று தேடியும் கீதாவைக் காணாமல் அவள் கண்ணீர் விட்டுக் கொண்டே யிருந்தாள். சரியாகச் சாப்பிடக் கூட இல்லை. விளக்கு வைக்கும் நேரம் அடுத்த வீட்டுச் சந்திரா வந்தாள். அவள் கீதா கிடைத்ததா என்று விசாரிக்கவே வந்தாள். அவளிடம் உமா, "சந்திரா, பாவம், அது ஒரு பாவமும் அறியாது. நான்தான் அடிக்கடி தப்புப் பண்ணி விட்டு, அது மேலே பழியைப் போட்டேன். அப்பா அம்மா அடிப்பார்களே என்று பயந்துதான் அப்படிச் செய்தேன். கோபத்தில் அப்பா கீதாவை வீட்டை விட்டுத் துரத்தி விட்டாரே!" என்று அழுது கொண்டே கூறினாள்.

"என்ன, தப்புப் பண்ணினதெல்லாம் நீதானா?" என்று கேட்டாள் சந்திரா.

உமா நடந்ததை அப்படி அப்படியே சொன்னாள். சந்திரா உமா பேச்சைக் கேட்டதும், "சரிதான், பொய் சொன்னால் கடவுள் தண்டனை கொடுத்து விடுவாராம். என் அம்மா சொல்லி யிருக்கிறாள். நீ பொய் சொன்னாய், அதனாலே கடவுள் கீதாவைக் காணாமல் போகச் செய்து விட்டார். நீ இது மாதிரி பொய் சொல்லலாமா?" என்றாள்.



மறுநாள் பொழுது விடிந்தது. உமா எழுந்தாள். உடனே வீட்டை விட்டு வெளியே கிளம்பினாள். நேராக அரை மைல் தூரத்திலுள்ள கோயிலுக்குப் போனாள். அது ஒரு முருகன் கோயில். பழைய காலத்துக் கோயில். அந்தக் கோயிலுக்குள் உமா போய் முருகன் சந்நிதியில் நின்றாள். "கடவுளே, நான் செய்ததெல்லாம் தப்பு. கடவுளே, என்னை மன்னித்து என் பூனைக்குட்டியைத் திரும்பி வரும்படி செய்ய மாட்டாயா?" என்று கும்பிட்டாள்.

அப்படி அவள் வேண்டிக் கொண்டிருக்கும்போதே, "மியாவ், மியாவ்!" என்ற குரல் கேட்டது.


"ஆ, கீதா!" என்று ஆசையுடன் கட்டிப்பிடித்துத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

அப்போது எதிரே ஓடி வந்தாள் சந்திரா. அவள் உமாவைக் கீதாவுடன் கண்டதும், "உமா, கோயிலில்தானே கீதா இருந்தது?" என்று கேட்டாள்.

"ஆமாம், அது எப்படி உனக்குத் தெரியும்?" என்றாள் உமா.

"விஷயத்தைக் கேள். உன் அப்பா சற்று முன்பாக எங்கள்


சிறுவர்கள் சித்திரப்போட்டி



1



2



3

வீட்டுக்கு வந்தார். என் அப்பாவோடு பேசிக்கொண்டிருந்தார். அவர் முந்தின நாள் வீட்டுக்கு வந்ததும், கடிகாரத்தைக் கீதா உடைத்ததாக உன் அம்மா சொன்னாளாம். உடனே உன் அப்பா மிகவும் கோபப் பட்டாராம். நேற்றுக் காலையிலே, நீ எழுந்திருப்பதற்கு முன்பே உன் அப்பா எழுந்து விட்டாராம். எழுந்ததுமே கீதாவைத் தூக்கிக் கொண்டு நேராக முருகன் கோயிலுக்குப் போனாராம். அந்தக் கோயில் மடப்பள்ளியிலே எலிகளின் தொந்தரவு அதிகமாம். அங்கே எலிகளைப் பிடிக்கச் சிலபூனைகளைக் கொண்டு வந்தார்களாம். அந்தப் பூனைகளெல்லாம் எலிகளைப் பிடிக்கிறதோடு மடப் பள்ளியிலிருக்கிற சோறு, பால், நெய் இவைகளையும் ருசி பார்த்து விடுமாம். அதனாலே திருடித் தின்னாத பூனை வேணுமென்று அந்த மடப்பள்ளிக் காரர் உன் அப்பாவிடம் எப்போதோ சொன்னாராம். உன் அப்பா இதுதான் சமயமென்று கீதாவை அங்கேகொண்டு போய் விட்டு விட்டார்.

"கீதா இல்லாததனாலே நீ சாப்பிடவே இல்லையாம். அதனாலே எப்படியும் இன்றைக்குக் கீதாவைத் திருப்பி வாங்கி வந்து விடுவதாகச் சொன்னார். அவருக்கு முன்னாலே நான் போய்க் கீதாவைக் கொண்டு வர நினைத்து ஓடி வந்தேன். எனக்கு முன்னாலே நீ போய்க் கொண்டு வந்து விட்டாயே!" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் சந்திரா.

"அடேடே! அப்படியானால் நான் சாமி கும்பிடுகிறபோது மடப்பள்ளியிலிருந்து என்னைப் பார்த்து விட்டுக் கீதா ஓடி வந்திருக்கிறது! அப்படித் தானே கீதா?" என்று கீதாவைப் பார்த்து உமா கேட்டாள்.

அது 'ஆம்' என்பதற்கு அடையாளமாக 'மியாவ்' என்றது.

"சரி, சந்திரா! நான் உடனே ஓடிப் போய்க் கீதா தப்புச் செய்யவே இல்லை. தப்பெல்லாம் என் மேலேதான். என்னை மன்னித்து விடுங்கள் என்று என் அப்பா அம்மாவிடம் சொல்லப் போகிறேன்" என்று கூறிக் கொண்டே வீட்டை நோக்கி ஓடினாள் உமா!

1. ஆர். மாலதி, வயது 11, சென்னை-1. 2. இ. நவமணி தேவி, வயது 10, ஆரப்பற்றை, காத்தாங்குடி, இலங்கை. 3. வி. சாரதா, வயது 11, மாதுங்கா, பம்பாய்.

ஹாஸ்யக் களஞ்சியம்






"அவரா! அவர் ஒரு சங்கீத வித்வான் யாருக்கோ பாடம் கற்பிக்கப் போகிறார்."



"பல்லைக் கழத்துக் கொண்டு கொஞ்ச நாள் இருந்து விடுங்கள், என்று நீங்கள் மறுபடியும் சொல்லாதிர்கள்..பல் இருந்த போது கழந்துக் கொண்டு இருந்து விட்டேன். இப்பொழுது எப்படி முடியும்!"



"அந்த மாமாவைப் பார்த்தால் எப்பொழுதும் பாவமாக இருக்கிறது. மேலே துணியே இல்லாமல் குச்சியாய் நிற்கிறார்."


"அவள் யாரையும் மதித்துப் பேசமாட்டாள் என்று எனக்குத் தெரியும்; தன் கணவரிடம் பேசுகிறாளோ?"
மாட்டாள்; அதான் சொன்னேனே, அவள் பெரிய ஆபீஸரின் மனைவி யாரையும் மதித்துப் பேசமாட்டாள்
சாமா
"டேய், மணி! மேல் மாடியிலிருந்து கீழே குதித்தால் என்ன ஆகும்?"
"அப்பா திட்டுவார்."
தங்கமீனுக்கே மழையில் நனையுமா!
சிரமப்பட்டு இப்பொழுதுதான் தூங்கப் பண்ணி இருக்கிறேன் சத்தம் போடாமல் போய்விடலாம்!
"தானே தூக்கிக் கொண்டு போகக் கூடாதோ! இதுக்கு ஒரு ஆளைப் போட்டுக் கொண்டு விட்டார்!"

நெல்லை மணிமாளிகை ஆயத்த அணிகல அங்காடி அதிபர்

திருவாளர் மு. சுப்பிரமணியன் செட்டியார்

மறைவு

திருநெல்வேலிப் பிரபலப் பொன் வணிகரும், ஆயத்த அணிகல அங்காடி அதிபரும், செந்தமிழ்ப் புரவலரும், சிறந்த கொடை வள்ளலுமான திரு மு. சுப்பிரமணியன் செட்டியார் 26—5—55 இரவு 4 மணிக்குத் திருநெல்வேலி தெற்குப் புதுத் தெருவிலுள்ள தமது சித்திவிநாயக ரகத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.



திரு செட்டியார் நெல்லையில் ஆயத்த அணிகல அங்காடி, கனிக்கரணகம் முதலியவற்றை அமைத்து நாணயமான பொன் வாணிகத்தை நாற்பதாண்டுகளுக்கு மேலாகச் சிறப்புற நடத்தி வந்தனர். தனித் தமிழ் இயக்கத்தில் கொண்ட பற்றின் காரணமாகத் தம்முடைய கடைக்கு 'ஆயத்த அணிகல அங்காடி' என்ற பழந்தமிழ்ப் பெயரையமைத்துச் சிறந்த தமிழ்ப் பணியாற்றி வந்தனர். பல சமயத் தமிழ்ப் பணிகளுக்குப் பெரும் பொருள் வழங்கிய வள்ளலாவர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தலைவராக விளங்கியவர். மந்திரமூர்த்தி உயர் நிலைப் பள்ளி நிருவாக சபை உறுப்பினராகத் திகழ்ந்தவர். வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம், சைவச் செட்டியார் சங்கம், கோவில் திருப்பணிக் கமிட்டிகள் போன்ற பல ஸ்தாபனங்களிலிருந்து பெரும் பணி புரிந்தவர். இவர்கட்கு அண்மையில் சென்ற தைமாதத்தில் அறுபதாண்டு நிறைவு மிகச் சிறப்பாக நடந்தேறியது. இப்பொழுது அறுபத்தோரு வயது ஆகிறது. ஆறு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருக்கிறார்கள். தமது அருமை மனைவியாரையும், ஏழு மக்களையும் விட்டுப் பிரிந்து மறைந்தார். அவருடைய மறைவைத் தெரிந்ததுமே நெல்லை நகரில் உள்ள வியாபாரிகளும், செல்வர்களும் அறிஞர்களும் திரள் திரளாக வந்து தங்களுடைய அநுதாபத்தைத் தெரிவித்தனர்.

27-5-55 மாலை மூன்று மணிக்கு அன்னாரின் சடலம் வைதிகக் கிரியைகளோடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது. சடலத்தின் பின்னர் நெல்லைப் பெரு மக்கள் திரளாக வந்து தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர். அவரது புதல்வர்கள் தகனக்கிரியை செய்தனர். இரண்டாம் நாள் சடங்கும் முறையே நடைபெற்றது. அவரது அஸ்தி காசி, முதலிய புண்ணிய தீர்த்தங்களில் சேர்ப்பதற்காக எடுத்து வைக்கப் பெற்றுள்ளது.

ADVT.

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

23. ஆஸ்துமாவுக்குச் சிரசாசனத்தின் சிறந்த சேவை

ஆஸ்துமாவுக்குத் தற்காலம் அநேகமாய் உபயோகமாகும் ஊசி மருந்து அட்ரினேலினும், பிட்யூடரினும்தான் என்று முன்பு வந்த பல கட்டுரைகள் மூலம் நேயர்கள் அறிவார்கள். அட்ரினேலின் எனும் மருந்து அட்ரினேல் எனும் சுரப்பியின் இரசத்திலிருந்து தயார் செய்தது. பிட்யூடரின் எனும் மருந்து பிட்யூடரி சுரப்பியின் இரசத்திலிருந்து தயார் செய்தது. இதில் அட்ரினேலின் மருந்தை விட பிட்யூடரின் மருந்துதான் அநேகமாக வேண்டியிருக்கின்றது. இந்த மருந்துடன் பல துணை மருந்துகள் கலந்து பலவித உபயோகத்தில் பலவிதப் பெயர்களுடன் தயாராகி விற்கப்படுகின்றன.

சிரசாசனம் செய்வதால் பூமியின் ஆகர்ஷண சக்தி சிரசுக்கே அதிக இரத்தத்தை இழுக்கின்றது. அப்பொழுது சிரசின் மையத்தில் இருக்கக்கூடிய பட்டாணி அளவே உள்ள பிட்யூடரி சுரப்பிக்குச் சாதாரணமாய் வந்து போகும் இரத்தத்தைவிட அதிக இரத்தம் வந்துபோக முடிகின்றது. சுரப்பிகளின் வேலை தன்னிடம் வரும் இரத்தத்தில் தன் இரசத்தைக் கலப்பது தான் என்பதைப் பலதடவை அறிந்துள்ளோம். அம்முறையில் அதிக அளவு பிட்யூடரி ரசம் இரத்தத்தில் கலக்கிறது. அவ்வாறு கலக்கப்பட்ட இரத்தம் உடல் முழுதும் பரவி நுரை சுரல் மற்றும் அதனைச் சார்ந்த பாகங்களுக்கு வருகின்றன. அப்பொழுது பிட்யூடரின் ஊசி மருந்தினால் என்ன பலன் உடனடியாக உடலில் ஆஸ்துமாக்காரர்களுக்கு உண்டாகின்றதோ அப் பலன் சிரசாசனம் செய்வதனால் உண்டாகி விடுகின்றது. உடனே ஆஸ்துமாக்காரர்கள் தங்களுக்கு ஒரு விடுதலை கிடைத்தாற் போல உணர்கின்றார்கள்.

பிட்யூடரின் கலந்த இரத்தம் நுரை சுரலிலுள்ள காற்றுக் குழாய்களுக்குச் செல்லும் போது காற்றுக் குழாய்களின் இறுக்கம் தளர்ந்து சாதாரணமாய் மூச்சுவிட முடிகின்றது. அதனால்தான் ஆஸ்துமா குறைந்ததாக உணர்கிறார்கள்.

சிரசாசனம் செய்யும் போது முதுகந்தண்டின் நீர்,— செரப்ரோ ஸ்பைனல் புளுயிட்,— வேகமும் அதிகமாகின்றது. சிரசாசனத்தில் சிரசில் இருக்கும் மெடுல்லா பாகத்துக்கு இரத்தம் அதிகமாய் வந்து தாக்குவதால் முதுகந் தண்டின் நீரின் ஓட்டமும் அதிகமாகிறது. அப்போது மெடுல்லா பாகத்தில் வந்து முடியும் சிம்பதெடிக் நரம்புகளும், வேகஸ் நரம்புகளும் சுறுசுறுப்படைகின்றன. இந்த நிலைமை சர்வாங்காசனத்தில் ஏற்படும் போது சில ஆஸ்துமாக்காரர்களுக்கு மூச்சுத் திணறல் அதிகமாகி ஆஸ்துமா அதிகமாகும். ஆனால் சிரசாசனத்தில் மெடுல்லா பாகமும், மற்ற நரம்புகளும், முதுகந்தண்டின் நீரும் ஆகிய இவைகளெல்லாம் சுறுசுறுப்பாய் வேலை செய்தாலும் ஆஸ்துமாக்காரர்களுக்கு மூச்சுத் திணறல் உண்டாவதில்லை. காரணம் பிட்யூடரி ரசம் நன்கு இரத்தத்தில் கலந்து, இவைகளின் வேகத்துக்குத் தக்கபடி அதுவும் காற்றுக் குழாய்களுக்கு விமோசனம் அளிப்பதால் சிரசாசனம் செய்யும் ஆஸ்துமாக்காரர்கள் ஆஸ்துமாவிலிருந்து விடுதலை அடைகின்றனர்.

எனவே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு தூரம் சிரசாசனத்தையே பழகக் கற்றுக் கொள்ளுதல் ஆஸ்துமாக்காரர்களுக்கு நல்லது. சர்வாங்காசனம் செய்வதனால் மூச்சுத் திணறல் ஏற்படுபவர்கள் சர்வாங்காசனத்தை விட்டுச் சிரசாசனம் செய்வது நல்லது. சிலருக்கு மத்ஸ்யாசனம் செய்தாலும் மூச்சுத் திணறல் அதிகமாகும். அவர்கள் மத்ஸ்யாசனத்தை அதிக நேரம் செய்யாமல் முடிந்தமட்டும் செய்யலாம்.

பிட்யூடரி கோளத்துக்கு இராஜகோளம் என்ற பெயரும் உண்டு. மற்ற சுரப்பிகளின் வேலைகள் இதனை அனுசரித்தே நடைபெறுகின்றன. எனவே நேரடியாக இராஜ தரிசனம் கிடைத்தாற் போல் சிரசாசனம் செய்து விட்டால், மற்ற அதிகாரிகளாகிய மற்ற சுரப்பிகளின் வேலை வெகு சுலபமாய் முடிந்து விடுகிறது. அட்ரினேல் கோளமும் சிரசாசனத்தில் சுறுசுறுப்படைந்து அட்ரினேலின் ரசம் அதிகமாய் இரத்தத்தில் கலந்து இரத்தத்தின் வேகம் அதிகரிக்கச் செய்து உடலை உஷ்ணப்படுத்துகிறது.

சாதாரணமாய் ஆஸ்துமாக்காரர்களுக்குக் குளிர்ச்சி எந்த ரூபத்திலும் ஆகாது. அவர்களுக்கு உணவு, உடை, ஜலம், இருக்கை, காற்று முதல் சகலமும் உஷ்ணமாகவே இருக்க வேண்டும். சிறிது குளிர்ச்சியும் அவர்களுக்கு ஆஸ்துமாவை வரவழைத்து விடும். அட்ரினேல் சுரப்பி அவர்களுக்குச் சரிவர வேலை செய்யாமையே இவைகளுக்குக் காரணம். சிரசாசனத்தின் மூலம் அட்ரினேல் சுரப்பியும் அதன் கடமையை நாளடைவில் சரிவர ஆற்றத் தொடங்கி விடுகிறது. எனவே ஆஸ்துமா நாளுக்கு நாள் குணமாகிப் பின் முற்றிலும் குணமாகி விடுகிறது.

ஆரம்பத்தில் ஆஸ்துமாவுக்கு இந்த பிட்யூடரின், அட்ரினேலின் மருந்தைச் செலுத்தினதும் உடனே ஆஸ்துமாவிலிருந்து விடுதலை கிடைத்து விடும். பின் நான்கைந்து ஊசிகளில் ஆஸ்துமா மறைந்தே விடும். பின் ஆறுமாதம் பொறுத்தோ ஒரு வருடம் பொறுத்தோ மறுபடியும் ஆஸ்துமா வரும். அப்பொழுது மறுபடியும் முன் குணப்படுத்தின ஊசி மருந்து

களையே போடுவார்கள். ஆனால் முன்பு நான் ஐந்து ஊசியில் குணமானது இப்பொழுது பத்து ஊசிகளாவது போட்டுக் கொண்டால் தான் முடியும். பின் ஆறு மாதம், ஒரு வருடத்துக்கு ஒரு முறையாக வந்து கொண்டிருந்த ஆஸ்துமாவானது இப்பொழுது மூன்று மாதம், பின் மாதம் ஒரு முறை என்று வர ஆரம்பித்து விடும். அப்பொழுது முன்பைவிட அதிக வேகமுள்ள மருந்துகளும், ஊசிகளும் தேவைப்படும். இம்மாதிரியே தலைவலி போக மாத்திரைகள் விழுங்கி விழுங்கிப் பின் சிலகாலத்தில் நான்கு மாத்திரைகள் விழுங்கினாலும் தலைவலி போகாமல் அவஸ்தைப் படுவதைப் போல, ஆஸ்துமா போக எத்தனை ஊசிகள், மருந்துகள் போட்டுக் கொண்டாலும் அரை மணி ஒரு மணிக்கு மேல் உடலில் தங்கி வேலை செய்ய முடிவதில்லை. மூத்திரக் காய்கள் மருந்தை வடிகட்டி விடுகின்றன. ஆஸ்துமாவும் விலகினபாடாய் இருக்காது.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறதென்றால் முதன் முதலில் சிறிதளவு பலவீனமாய் இருந்த பிட்யூடரி, அட்ரினல் கோளங்கள் பின் அதிகப் பலவீனமாகி, அவற்றின் வேலையைச் சரிவரச் செய்ய முடியாமலேயே போய்விட்டன என்று நன்கு தெரிகிறதல்லவா! இந்த நிலைமையை மாற்ற என்னதான் மருந்துகளைப் பிரயோகித்தாலும் மருந்து ரத்தத்தில் இருந்து வேலை செய்யும் வரை தான் குணம் உண்டு. மூத்திரக்காய்கள் அவற்றிலுள்ள மருந்தை வடிகட்டினதும் பழைய நிலையை அடைந்து விடும். இன்றுள்ள மருந்து உலகம் இதைவிட வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

தைராய்ட் கோளம் கெட்டு விட்டால் அல்லது பலவீன மடைந்து விட்டால் குரங்கின் தைராய்டை வைத்துப் பொருத்தி ஆபரேஷன் செய்து விடுகின்றனர். ஆனால் பிட்யூடரி கோளத்தை எடுத்து இதுவரை ஆபரேஷன் செய்து வெற்றி காண முடியவில்லை. பட்டாணி அளவேயுள்ள இந்தக் கோளத்தின் மூர்த்தி சிறிதாய் இருந்தாலும் இது சுமார் உடலின் இருபத்தொரு விதமான வேலைகளைச் செய்கின்றது. கடுகளவுள்ள பாகம் பெயர்ந்தாலும் உடலின் தத்துவம் பலவிதத்தில் மாறுபாடடைந்து விடும். ஆகையால் விஞ்ஞானத்தில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ள இந்தக் காலத்திலும் இதனைச் சீர்திருத்த முடியவில்லை.

ஆகையால்தான் டாக்டர்கள் அலசி ஆராய்ந்து ஆஸ்துமாவானது மருந்துகளினால் குணமாகாது, தேகப் பயிற்சிகளினால்தான் குணமாகும் என்று முடிவு கட்டிவிட்டார்கள்.

மற்றும் பலவித ஆஸ்துமா உண்டாவதுண்டு. சிலருக்கு இதயம் பழுதடைவதால் ஆஸ்துமா உண்டாவதுண்டு. பலவித கண்ட கண்ட மருந்துகளைச் சாப்பிட்டு அவற்றின் வேகத்தால் இருதயம் பலவீனமடையும். நாம் சாப்பிடும் மருந்து வகைகள் ஏதோ நோய் உள்ள பாகத்துக்கு நேரிடையாகச்சென்று ஒருவேலைக்காரன் குறித்த வேலையைச் செய்ய ஏவினால் எவ்வாறு செய்வானோ அவ்வாறு மருந்தும் வேலை செய்யும் என நினைக்கிறோம். ஆனால் அது அவ்வாறு மட்டும் செய்வதில்லை. வாய் மூலமாகச் சென்றாலும் சரி, ஊசியின் மூலமாக உட்சென்றாலும் சரி, அவை இரத்தத்தில் கலந்து, இரத்தம் போகும் இடமெல்லாம் போய்த் தான் குணப்படுத்துகின்றன. அந்த இரத்தம் இருதயத்துக்குப் பலமுறை வந்து வந்து போகும் போது நாம் சாப்பிட்ட மருந்துகளிலுள்ள பாஷாணங்களின் வேகம் இருதயத்தையும் பாதிக்கத்தான் செய்யும். அவ்வாறே பலநாள் ஆக ஆக இருதய வேக்காடு, பலவீனம், இருதயம் ஒழுங்காக வேலை செய்யாமல், சில சமயம் அதிவேகமாகவும், சில சமயம் மெதுவாகவும் வேலை செய்தல் முதலியன வெல்லாம் ஏற்படுகின்றன. அவ்வாறு ஏற்படும்போது உடலின் பாகங்களெல்லாம் பாதிக்கப்படுகின்றன. சிலருக்கு நுரைசரலையும் பாதித்து ஆஸ்துமா உண்டாவதுண்டு. அவர்களுக்கு இருதயம் ஆரோக்கிய மடைந்தாலல்லாது ஆஸ்துமா விலகாது.

இவ் வகையில் சேர்ந்த ஆஸ்துமாவுக்கும் சிரசாசனத்தில் விமோசனமுண்டு. பிட்யூடரியின் ஆளுகை நேரடியாக இருதயத்தின் மேல் உண்டு. எனவே, சிரசாசனம் செய்யும்போது பிட்யூடரி பூரண ஆரோக்கியமடைந்து அதன் ரசம் கலந்த இரத்தம் நிறைய இருதயத்துக்குச் செல்வதால் நாளடைவில் இருதயமும் பூரண ஆரோக்கியம் அடைந்து, ஆஸ்துமாவும் விலகுகிறது.

மற்றும் மூத்திரக்காய்கள் கெடுவதாலும் ஆஸ்துமா உண்டாவதுண்டு. அவை கெடுவதற்குக் காரணம் முன் சொன்ன மருந்துகளின் பிரயோகமே ஆகும். மற்றும் ஆகாரச் சீர்கேட்டினாலும் உண்டாகலாம். எவ்வாறு ஏற்பட்டாலும் கழிவுகளை, விஷத்தை, அழுக்கை நீக்கக் கூடிய குண்டிக்காய்களே சுகவீனம் அடையும் போது உடலில் என்னதான் ஏற்படாது! விஷங்கள், கழிவுகள் இரத்தத்தில் தங்கி மயக்கம், பலவீனம். நரம்புத் தளர்ச்சி, உடலில் நமைச்சல், சொறி, சிரங்கு, இருமல், கோழை, ஆஸ்துமா முதல் சகலமும் உண்டாக ஏதுவாகின்றது. அவை அத்தனையும் விலகவேண்டுமானால் பழையபடி மூத்திரக் காய்கள் ஆரோக்கியமடைந்து அவற்றின் வேலையைச் சரிவரச் செய்ய வேண்டும். அதற்கும் சிரசாசனம் துணை செய்கிறது. மூத்திரக் காய்களின் ஆட்சி பிட்யூடரியின் கையில்தான் இருக்கிறது.

மற்றும் ஆஸ்துமாக்காரர்களுக்கு அஜீரணத்தால் ஆஸ்துமா வருவது உண்டு. அவர்களும் சிரசாசனம் செய்வார்களானால் ஜடராக்னி அதிகமாகிச் சாப்பிட்ட உணவை ஜீரணமாக்கி ஆஸ்துமா வராமல் செய்யும். நல்ல பசி தாகம் ஏற்படும். உணவுப் பையின் லகானும் பிட்யூடரியின் கையில்தான் இருக்கிறது. எனவே, ஆஸ்துமாக்காரர்களுக்குச் சிரசாசனமானது கற்பகத் தருவைப் போன்றது. எந்தெந்த விதத்தில் என்ன காரணத்தினால் ஆஸ்துமா உண்டானாலும் அத்தனைக்கும் விலக்களித்து இரட்சிக்கக் கூடியது. மனோ அதிர்ச்சியினால் ஆஸ்துமா உண்டாவதையும் சிரசாசனம் மூலம் தடுக்கலாம். மூளையையும் அதனைச் சார்ந்த பாகங்களையுமே சிரசாசனம் ஆட்சி செய்யும் போது எந்தக் காரியம்தான் நடைபெறாது!



நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
புதிது!
PROTEX
All Purpose
TOILET POWDER
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
PROTEX
All Purpose
TOILET POWDER
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்



'அனஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளது.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள்

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெறஎப்பொழுதும் அனஸினையே கேட்டுவாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 43

தன்மானம்

புஷ்யன்

"நிர்மலாவுக்கு அபாயம். உடனே வரவும்" என்ற தந்தியைக் கண்டதும் ஆத்மநாதய்யர் செயலிழந்து அப்படியே நின்று விட்டார். அதற்குள் அவருடைய மனைவி பார்வதியம்மாள் அங்கு வந்தவள், "என்ன தந்தி!" என்று கலவரத்துடன் கேட்டாள். நிர்மலாவுக்கு அபாயகரமான நிலை என்பதை அறிந்ததும் பார்வதியம்மாள், "ஐயோ... நிர்மலா" என்று கூவிக் கதறுவதற்கு ஆரம்பித்து விட்டாள்.

"எவ்வளவு மேன்மையாக அவளை வைத்துக் கொள்ள நினைத்துக் கோட்டை கட்டினேனே! படுபாவி அவளை இப்படிச் செய்து விட்டானே! இந்நேரம் என்ன கதியாகி யிருக்குமோ!" என்று நெஞ்சம் குமுறினார் ஆத்மநாதய்யர்.

"ஐயோ, பெண்ணே! மோசம் செய்து விடாதேடி! எங்கள் வயிற்றில் பாலை வார்த்து விடடி!" என்று கூவிய பார்வதியம்மாள், "என்ன பேசாமல் இருக்கிறீர்கள்! உடனே காரை எடுக்கச் சொல்லுங்களேன்!" என்று துடியாய்த் துடித்தாள்.

"டேய் சம்பந்தம், டிரைவரைக் கூப்பிட்டுக் காரை எடுக்கச் சொல், அவசரம்!" என்றார் ஆத்மநாதய்யர் கண்களில் நீர் வழிய.

வேலைக்காரர்கள் தங்கள் சின்ன எஜமானியம்மாள் நிர்மலாவுக்கு ஏதோ ஆபத்து என்று தெரிந்து கொண்டு பரபரப்புடன் அவர்கள் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தனர். ஆத்மநாதய்யர் தம்முடைய குடும்ப டாக்டருக்குப் போன் செய்து தயாராய் இருக்கும்படியும், காரில் வந்து அவரை அழைத்துக் கொண்டு போவதாகவும் கூறினார்.

கார் அவர்களை ஏற்றிக் கொண்டு செங்கல்பட்டை நோக்கி வேகமாகப் பறந்தது.

வண்டியில் சோக சித்திரமாய் அமர்ந்திருந்த ஆத்மநாதய்யரின் மனத்திரையில் அருமைப் புதல்வி நிர்மலாவின் எழில் உருவம் நிகழ்ந்தது. அதற்கு அடுத்த கணம் அவள் நோயால் உடல் இளைத்து, மரணத்தின் வாயிற்படியில் நிற்கும் காட்சியைக் கற்பனை செய்து பார்த்த போது அவருக்கு நெஞ்சமே வெடித்து விடும்போல் இருந்தது. அவர் அவள் மேல் எவ்வளவு ஆசை வைத்திருந்தார்! ஆனால் அதை அவள் சிறிதும் பொருட்படுத்தாமல் அவரைத் துச்சமாகத் தூக்கி எறிந்து விட்டுப் போய் விட்டாள். வலுவில் வறுமையை வரவழைத்துக் கொண்டு இப்போது அந்த வறுமையிலேயே உயிரை விடப் போகிறாள்! இதற்கெல்லாம் காரணம் அவளுடைய கணவன் சந்திரன்தான் என்று எண்ணி அவன் மேல் அவருக்குக் கோபமும் வெறுப்பும் பொங்கின.

* * *

நிர்மலா ஆத்மநாதய்யருடைய மூன்றாவது பெண். ஆத்மநாதய்யர் செல்வவந்தர். நாதன் கம்பெனியின் முதலாளி. பலவிதமான வியாபாரங்களில் தேர்ந்திருந்தார். மாதம் ஆயிரக் கணக்கில் பணம் குவிந்தது. கார், பங்களா என்று செளக்கியமாய் வாழ்ந்து வந்தார். அவருக்கு வரிசையாக மூன்று பெண்கள் பிறந்தனர். அதற்குப் பின் ஒரு குழந்தையும் பிறக்க வில்லை. முதல் இரண்டு பெண்களையும் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்ற இடத்தில் விவாகம் செய்து வைத்தார். ஒரு மாப்பிள்ளை பம்பாயில் மில் ஒன்றில் மானேஜராகவும், இன்னொரு மாப்பிள்ளை டில்லியில் அரசாங்க உத்தியோகத்திலும் இருந்தார்.

நிர்மலா அப்போது கல்லூரியில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தாள். பி. ஏ. பரீட்சையில் தேறியதும் அவளுக்கும் நல்ல இடத்தில் விவாகம் செய்து வைத்து விட்டால் அப்புறம் தமக்கு எவ்விதக் கவலையும் இல்லை என்று எண்ணினார் ஆத்மநாதய்யர்.

அப்போதுதான் பார்வதி அம்மாள் அவரிடம் ஒரு யோசனை கூறினாள்.

"நமக்கோ பிள்ளை இல்லை. நாளைக்கு நிர்மலாவும் கல்யாணமாகிப் போய் விட்டால் அப்புறம் இவ்வளவு பெரிய வீட்டில் நீங்களும் நானும் தான் வளைய வளைய வந்து கொண்டிருக்க வேண்டும். அதனால் நிர்மலாவை யாராவது ஒரு ஏழைப் பையனுக்கு விவாகம் செய்து வைத்து அவர்கள் இருவரையும் வீட்டோடு வைத்துக் கொண்டு விட்டால் என்ன!" என்று கேட்டாள்.

ஆத்மநாதய்யருக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. "சே, சே! நிர்மலாவை ஏழைப் பையனுக்குக் கொடுப்பதாவது? உனக்கு ஏதாவது பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன? அவளுடைய படிப்பு என்ன? அந்தஸ்து என்ன! ஜானகிக்கும், ரமாவுக்கும் கிடைத்த இடங்களை விட உயர்ந்த இடமாக நிர்மலாவுக்குப் பார்க்க வேண்டும் என்றிருக்கிறேன்!" என்று கூறினார் ஆத்மநாதய்யர்.

ஆனால் பார்வதியம்மாள் மேலும் மேலும் பிடிவாதம் பிடிக்கவே, அவர் வேறு வழியின்றி அவளுடைய கோரிக்கைக்குச் சம்மதித்தார்.

அவருடைய கம்பெனியிலேயே சாம்பசிவம் என்ற பெயருடைய ஒரு குமாஸ்தா இருந்தான். தாய் தந்தையற்ற அவன் ஒரு அறையில் வசித்துக் கொண்டு ஹோட்டலில் சாப்பிடுகிறான் என்பதையும் அறிந்து கொண்டார். அவன் பி. ஏ. படித்திருந்தான். வேலையிலும் திறமையாக இருந்தான். அவனைத் தம் மாப்பிள்ளையாக்கிக் கொண்டு வியாபார நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்து விடுவதென்று முடிவுக்கு வந்தார். அன்று இரவு வீட்டுக்கு வந்த அவர் தம் எண்ணத்தைச் செயலாக்க நினைத்த பொழுதுதான் நிர்மலாவின் உள்ளம் அவருக்கு விளங்கியது.

"நான் இடை நிலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது என்னுடன் சந்திரன் என்று ஒருவர் படித்தார். அவர் மிகவும் ஏழை. அவருக்கும் தாய் தந்தையர் கிடையாது. அவர் தம் மாமாவின் வீட்டில் இருந்து கொண்டு படித்து வந்தார். இடைநிலை வகுப்புப் படித்து முடித்துக் கொண்டு வேலை தேடினார். பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயராக வேலை கிடைத்தது. அவரை மணந்து கொள்ளலாம் என்ற எண்ணம்......" என்று இழுத்தாள் நிர்மலா.

அதைக் கேட்டதும் ஆத்மநாதய்யருக்குக் கடுங் கோபம் வந்து விட்டது. "யாரோ வழி

யில் போகிறவனை நீ காதலிப்பது! நான் ஒப்புக் கொள்வதா! அதெல்லாம் முடியாது. நீ சாம்பசிவனைத்தான் மணந்து கொள்ள வேண்டும்!'' என்று கண்டிப்பாய்க் கூறினார்.

ஆனால் நிர்மலா தாயாரிடம் போய் முறையிட்டுக்கொள்ளவே, தாயார் அவள் பக்கம் நின்று வாதாடி அவர் மனத்தை மாற்றி விட்டாள். இருந்தாலும் ஆத்மநாதய்யருடைய உள்ளத்தில் விஷவித்து ஊன்றி விட்டது. அவர் தமது இரண்டு நோக்கங்களும் நிறைவேறாமல் போய் விட்டது கண்டு உள்ளம் கொதித்தார். பணக்கார மாப்பிள்ளையாகப் பார்க்க வேண்டுமென்பதைத் தடுத்தாள் பார்வதியம்மாள். சரி என்று அவள் இஷ்டப்படி ஏழையாக அவரே ஒரு வரனைக் கண்டு பிடித்தார். அதிலும் தோல்வி. அவருக்கு முன்னமே நிர்மலா ஒரு ஏழையைக் கண்டு காதலித்து அவனை மணக்கப் பிடிவாதம் பிடித்தாள். அதற்குப் பார்வதி துணை நின்று அவர் முயற்சியை முறியடித்தாள். இந்த எண்ணங்கள் அவருக்குப் பெருத்த கோபத்தை உண்டாக்கின. தமது கோபத்தை யாரிடம் காட்டுவது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது அவருக்கு நிர்மலாவின் கரம் பிடித்த சந்திரன் தான் அகப்பட்டான்.



* * *

விவாகத்தை ஆடம்பரமின்றி நடத்தினார். மாப்பிள்ளைக்குச் செய்ய வேண்டியதை யெல்லாம் மிகவும் சாதாரணமாகவே செய்தார். அவருடைய மனைவி பார்வதியம்மாள் எவ்வளவோ திட்டம் போட்டிருந்தாள். அவற்றை யெல்லாம் அவர் சிதறடித்து விட்டார், பார்வதி அவருடன் சண்டை யிட்டபோது, ''எல்லாம் தெரியும் எனக்கு...யார் யாருக்கு எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்படிச் செய்ய எனக்குத் தெரியும். எனக்கு யாரும் சொல்ல வேண்டியதில்லை'' என்றார். இந்த விஷயத்தில் பார்வதியம்மாளின் பிடிவாதம் பலிக்கவில்லை.

நிர்மலாவும், ''நீ ஏன் அம்மா இதற்கெல்லாம் கவலைப்படுகிறாய்! வெறும் ஆடம்பரத்தில் என்ன இருக்கிறது!'' என்று கூறிப் பார்வதியைச் சமாதானம் செய்தாள். அவளுக்குத் தன் காதல் நிறைவேறி விட்டது என்ற சந்தோஷமே உள்ளத்தை நிறைத்து விட்டது. அதனால் ஆடம்பரங்கள் இல்லாதது ஒன்றும் அவளுக்குக் குறைவாகப் படவில்லை. ஒரு விதத்தில் அவை இல்லாதது சௌகரியமாகவே இருந்தது.

விவாகம் முடிந்ததுமே ஆத்மநாதய்யர் சந்திரனைக் கூப்பிட்டு, ''உபாத்தியாயர் உத்தியோகத்துக்கு நீ நாளையிலிருந்து போக வேண்டாம்!'' என்று கூறிவிட்டார்.

சந்திரனுக்கு ஆறு மாதங்கள் ஒரு வேலையும் இல்லாமலே ஓடி விட்டன. உபாத்தியாயர் உத்தியோகத்தை விடச் சொன்ன தகப்பனார் தம் கம்பெனியிலேயே அவனுக்கு உத்தியோகம் தந்து அவனை முன்னுக்குக் கொண்டு வந்து கம்பெனியை அவனிடமே ஒப்படைத்து விடுவார் என்று எண்ணினான். ஆனால் ஆறு மாதங்கள் கழிந்தும், தகப்பனார் பேசாமல் இருக்கவே, அவளுக்கு என்னவோ போலிருந்தது. தன் கணவன் சும்மா வீட்டில் உட்கார்ந்து தன்னையே சுற்றிச் சுற்றி வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை. பார்ப்பவர்களும் மாமனார்வீட்டில் தண்டச்சோறு சாப்பிடுகிறான் என்று ஏளனம் செய்ய மாட்டார்களா!

* * *

அதனால் அன்றிரவு தன் தகப்பனாரைப் பார்க்க நேர்ந்தபொழுது, ''அப்பா, அவரை நாளையிலிருந்து உங்களுடன் கம்பெனிக்கு அழைத்துப் போங்களேன்!'' என்றாள்.

''கம்பெனிக்கா! எதற்கு!'' என்று ஆத்மநாதய்யர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''வீட்டில் எத்தனை நாள்தான் அவர் சும்மா இருப்பார்!'' என்றாள் நிர்மலா.

''கம்பெனியில் என்ன வேலை செய்யப் போகிறான் அவன்!'' என்றார் ஆத்மநாதய்யர் அலட்சியமான குரலில்.

அவருடைய அந்த ஏளனச் சொற்கள் அவளுக்குச் 'சுருக்'கென்று பட்டன. இருந்தாலும்



அதைப் பாராட்டாமல், "ஏன், மானேஜர் வேலை போட்டுக் கொடுங்களேன்!" என்றான்.

"மானேஜர் வேலை செய்வதென்றால் இன்னுக் கிரையா! அதற்கு நிறைய அனுபவம் அல்லவா வேண்டும்!"

"சொல்லிக் கொடுத்தால் அவர் கற்றுக் கொள்கிறார்......"

"உபாத்தியாயர் வேலை பார்த்தவனுக்கு வியாபார வேலையெல்லாம் வராது. தெரியுமா!' என்றார் ஆத்மநாதய்யர்.

நிர்மலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவள் படபடப்புடன், "அப்படி யென்றால் அவர் உபாத்தியாயர் வேலைக்காவது போகட்டும்!" என்றாள்.

ஆத்மநாதய்யர் கோபத்துடன், "அவன் வாத்தியார் வேலை பார்ப்பதானால் இந்த வீட்டில் இருக்கக் கூடாது! என் மாப்பிள்ளை ஒரு வாத்தியார் என்று உலகம் கூறுவதை என்னால் பொறுக்க முடியாது. ஏன், அவனுக்கு வீட்டில் சுகமாக உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண் டிருக்கப் பிடிக்கவில்லையாமோ! வேறு யார் அவனை வீட்டில் உட்கார வைத்து ராஜோபசாரம் செய்ய விருக்கிறார்களாம்!" என்றார்.

"அவர் தண்டச் சோறு சாப்பிடத் தயாரா யில்லை. அவர் நாளையிலிருந்து உபாத்தியாயர் வேலைக்குப் போகப் போகிறார்!" என்று வெகு துணிச்சலாகக் கூறினாள் நிர்மலா.

"எப்படிப் போகிறானோ, பார்க்கிறேன். என் வார்த்தையை மீறிப் போனால் இந்த வீட்டுப் படியை மிதிக்க மாட்டான் அவன்! தெரியுமா!" என்றார் ஆத்மநாதய்யர் கோபக் குரலில்.

"இந்த வீட்டுக்குள் நுழைய அவரும் காத்திருக்கவில்லை. நானும் இனி இங்கே இருக்கத் தயாரா யில்லை!" என்று கூறிய நிர்மலா அங்கிருந்து விடுவிடு வென்று வெளியேறி விட்டாள்.

நேரே தன் கணவனிடம் சென்று, "இப்பொழுதே புறப்படுங்கள்! நாளையிலிருந்து இந்த வீட்டில் நமக்கு இடமில்லை!" என்றாள்.

"என்ன, நிர்மலா! என்ன இப்படிப் படபடப்புடன் இருக்கிறாய்!" என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் சந்திரன்.

"உங்களை அவமதிக்கும் இந்த வீட்டில் இனி நமக்கென்ன வேலை!" என்றாள்.

"என்ன நடந்தது! விவரமாகச் சொல்லேன்!" என்றான் சந்திரன்.

நிர்மலா நடந்ததை யெல்லாம் சொன்னாள்.

"நிர்மலா, அவசரப் படாதே! உன் தகப்பனார் கூறுவதும் நியாயந்தானே!"

"என்ன, நியாயமா! உங்களுக்கு மாமனார் வீட்டுச் சுகங்களை விட்டு வர மனமில்லையோ! இந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டு வாழ்வதைக் காட்டிலும் எங்கேயாவது சென்று பிச்சைப் பிழைப்புக்கூடப் பிழைக்கலாம்! நீங்கள் புறப்படப் போகிறீர்களா, இல்லையா!" என்று கேட்டாள் நிர்மலா.

"புறப்படுகிறேன், நிர்மலா! ஆனால் நீ என்னுடன் வந்து எதற்காக அவதியுற வேண்டும்! செல்வத்தில் வளர்ந்தவள் நீ..." என்றான் சந்திரன்.

"செல்வத்தில் வளர்ந்தவள்தான் நான். ஆனால் அது இல்லாமலும் என்னால் இருக்க முடியும். நீங்கள் இருக்கும் இடம்தான் எனக்குச் செல்வபுரி!" என்றாள் நிர்மலா.

நிர்மலாவின் தாயார் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவளும் சந்திரனும் அங்கே தங்க மனமில்லாமல் புறப்பட்டு விட்டார்கள்.

ஆத்மநாதய்யருக்குச் சந்திரன் மேல் தான் கோபம் கோபமாய் வந்தது. அவன்தான் எல்லாவற்றுக்குமே மூல காரணம் என்று எண்ணி அவனை முன்னிலும் பன் மடங்கு அதிகமாக வெறுக்கத் தொடங்கினார்.

சந்திரனுக்குச் செங்கல்பட்டில் உயர்தரப் பள்ளி ஒன்றில் வேலை கிடைத்தது. அதே பள்ளிக்கூடத்தில் நிர்மலாவுக்கும் வேலை கிடைத்தது. இருவரும் சந்தோஷமாகக் காலம் கடத்தினார்கள்.

காலம் போகும் போக்கு

இன்று காலம் போகும் போக்கைப் பார்த்தால் இயற்கையன்னை இந்த உலகத்தினிடம் பழி வாங்கத் திட்டமிடுகிறாளோ என்றே எனக்குத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் மனுஷ்யத் தன்மையின் தலைமேலே இன்று சாபம் என்னும் கருங் கத்திகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொங்குவானேன்? ஒருவேளை இயற்கையன்னை இந்த உலகத்தை அறிவாளிகளின் கையிலிருந்து பிடுங்கிக் குரங்குகளின் கையில் ஒப்படைத்துவிட நினைக்கிறாளோ? —ஹக்ஸ்லே

ஆத்மநாதய்யர் இரண்டு கடிதங்கள் நிர்மலாவுக்கு எழுதினார். ஆனால் நிர்மலா அவற்றுக்குப் பதிலே எழுதவில்லை. பார்வதியம்மாள் தான் பாவம், தவித்தாள். ஆத்மநாதய்யரிடம் எவ்வளவோ முறையிட்டாள். ஆனால் அவர் சிறிதும் இரங்கவில்லை.

நிர்மலாவுக்குத் திடீரென்று உடம்பு சரியில்லாமல் போய் விட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் குணமாகவில்லை.

அன்று அவளிடம், "நிர்மலா, உன் அப்பா அம்மாவுக்கு எழுதி அவர்களைத் தருவிக்கிறேன். பாவம், அவர்கள் மிகவும் கவலைப் படுவார்கள்!" என்றான் சந்திரன்.

நிர்மலா அந்தக் கவலைக்கிடமான நிலையிலும் கோபமாக, "என்மேல் ஆணையாக அவர்களுக்கு எழுத வேண்டாம். நான் இப்படியே இந்த வைத்தியத்தினால் தேறினால் தேறிக் கொள்கிறேன். இல்லாவிட்டால் உங்களுடைய மடிமீதே இறக்கிறேன்!" என்றாள்.

"ஆனாலும், உனக்கு இந்த வீம்பு கூடாது, நிர்மலா. நான் எழுதுகிறேன்" என்றான் சந்திரன்.

"வேண்டாம் என்றால் வேண்டாம். எனக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு என்ன! எனக்குத் தெரியாமல் எழுதினீர்களானால், அப்புறம் நான் விஷம் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்வேன்" என்று பயமுறுத்தினாள் நிர்மலா.

சந்திரன் தர்மசங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டான்.

நிர்மலாவின் தேகநிலை நாளுக்கு நாள் கேவலமாக ஆகிக் கொண்டே வந்தது. ஒரு நாள் அவளுடைய நாடி மிகவும் பலவீனமடைந்து விட்டது. சந்திரன் அபவாதத்துக்கு இடம் ஏற்படக்கூடாது என்பதற்காக நிர்மலாவுக்குத் தெரியாமல் அவள் சொல்லையும் மீறி அவள் பெற்றோருக்கு ஒரு தந்தி கொடுத்து விட்டான்.

* * *

"நிர்மலா, என் செல்வம்! உனக்கு என்னடி வந்து விட்டது, கண்ணே!" என்று அலறியவாறு பார்வதியம்மாள் உள்ளே பாய்ந்து வந்தாள். நிர்மலா அப்போது பிரக்ஞையற்ற நிலையில் இருந்தாள்.

எல்லோருக்குமே சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. பார்வதி அம்மாள் 'கோ'வென்று கதறியழ ஆரம்பித்து விட்டாள். ஆத்மநாதய்யருக்கு அந்த நிலையிலும் சந்திரனுடன் முகம் கொடுத்துப் பேச மனம் இடம் தரவில்லை.

அரை மணி அங்கு பயங்கர அமைதி நிலவியது. பார்வதி அம்மாளின் புலம்பல் அவ்வப்போது எழுந்து கொண்டிருந்தது.

நிர்மலா சிறிது அசைந்து கொடுத்தாள். முனகல் ஒலி ஒன்று கிளம்பியது, "அம்மா... உம்..." என்று. பார்வதியம்மாள், "என் கண்ணே, நிர்மலா...இதோ என்னைக் கண் திறந்து பாரடி, தங்கம்!" என்று கவலையும், ஆவலும், பாசமும் நிறைந்த குரலில் உரக்கக் கூவினாள்.


நிர்மலா கண் திறந்து பார்த்தாள். அவள் தாயார் அவள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். "அம்மா..." என்று ஈனஸ்வரத்தில் மறுபடி முனகினாள். பிறகு தன் கணவனைத் தேடினாள். அவள் கண்களில் ஆத்மநாதய்யர் தென்பட்டார். அந்தச் சமயத்திலும் அவளுடைய முகம் சுளித்தது. அவருக்குச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த தன் கணவனைக் கண்டதும் அவளுடைய கண்களில் திடீரென்று கோபம் தெறித்தது. அவனை அருகில் வரும்படி சைகை செய்தாள்.

"இவர்கள் எப்படி வந்தார்கள்? ஏன் இவர்களுக்குத் தெரிவித்தீர்கள், என்னுடைய பேச்சை மீறி...!" என்று கோபத்துடன் கேட்டாள் நிர்மலா.

ஆத்மநாதய்யர் திகைத்தார். அந்தப் பலவீனமான நிலையிலும் அவளுக்கு அவ்வளவு கோபம் கலந்த குரல் எப்படி வெளிவந்தது என்று ஆச்சரியப்பட்டார். தம் பேரில் எத்தனை வெறுப்பிருந்தால் அவ்வளவு தூரம் தன் சுர வேகத்திலும் அவ்விதம் கூறியிருப்பாள் என்பதை நினைத்துப் பார்த்தார். அவள் நிலையைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கக் கூடவேண்டாம் என்று அவள்தான் அவனைக் கட்டுப்படுத்தியிருந்தாள் என்பதை உடனே உணர்ந்து கொண்டார். 'எவ்வளவு தன் மதிப்பு தன் கணவனுடைய கௌரவத்தில்!......' என்பதை நினைத்துப் பார்த்தார்.

அடுத்த கணம் அவர் அவளருகில் சென்று, "நிர்மலா, என்னை மன்னித்து விடு! நான்தான் கர்வத்துடன் இருந்து விட்டேன். உன் உள்ளத்தில் ஏற்பட்ட புண்ணை இன்றுதான் உணர்கிறேன். சந்திரனை இனி என் கம்பெனிக்கு உரிமையாளனாக்கி விடுகிறேன்!" என்றார் தழுதழுத்த குரலில்.

தன்மானமுள்ள நிர்மலா அதற்கு எத்தகைய பதிலாவது சொன்னால்தானே!



ஆனந்தம்-அவர்கள்
ஆரோக்கியமே காரணம்!



OVALTINE

பிள்ளை மனம்

எஸ். டி. சீனிவாசன்



"எவ்வளவுதான் குறைத்துக் குறைத்துப் போட்டாலும் இந்த மாசம் பத்து ரூபாய் துண்டு விழும்போல இருக்கிறது. வரவையும் செலவையும் எப்படிச் சரிக்கட்டுவது என்று தான் புரியவில்லை. உனக்கு வேறு கட்டாயம் இந்த மாசம் ஒரு புடைவை வாங்கியே ஆகணும்..." காப்பி குடித்த காலி டம்ளரைப் பங்கஜத்திடம் கொடுத்துக் கொண்டே தன் கஷ்டத்தை விவரித்தான் ரங்கநாதன்.

சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் பங்கஜம், "இருங்கோ, இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்று, ரங்கநாதனின் பெயருக்கு அன்றையத் தபாலில் வந்திருந்த ஒரு கார்டைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். அதைப் பரபரவென்று படித்தான் அவன்.

"சிரஞ்சீவி ரங்கநாதனுக்கு,

பிப்ரவரி மாதம் வரை ஒழுங்காக மாதம் இருபது ரூபாய் அனுப்பி வந்த நீ, மார்ச்சில் பதினைந்தாக்கி விட்டாய். ஏப்ரலில் அதுவும் இல்லை. மே மாதம் பிறந்து விட்டது. இந்த மாதமும் இதுவரை ஒன்றையும் காணோம். சௌபாக்கியவதி சந்திராவுக்கு உடம்பு சரியில்லை என்று அவளை மாப்பிள்ளை இங்கு கொண்டு வந்து விட்டிருக்கிறார். பால், தயிர், மோர், வைத்தியம் என்று ஏகப்பட்ட செலவு. இந்த மாதம் ஐம்பது ரூபாய் அனுப்பு. அடுத்த மாதம் முதல் இருபத்தைந்து அனுப்பு. என்னால் சமாளிக்கவே முடியவில்லை.

ராகவன்."

ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே ரங்கநாதன் அந்தக் கடிதத்தைச் சுழற்றி மேஜையின்மேல் எறிந்தான்.

"என்ன எழுதி இருக்கிறார் அப்பா?" என்று ஆவலுடன் கேட்டாள் பங்கஜம்.

"உன் அருமை நாத்தனார் பிறந்தகத்தில் சீராட வந்திருக்கிறாளாம்...செலவு அதிகமாம். உடனே ஐம்பது ரூபாய் வேண்டுமாம். போன மாதம் ஒன்றுமே அனுப்பாததற்கும் அதற்கு முந்தின மாதத்தில் ஐந்து ரூபாய் குறைவாய் அனுப்பினதற்கும் கோபித்துக் கொண்டு எழுதி இருக்கிறார். அடுத்த மாதம் முதல் இருபத்தைந்து ரூபாய் வேண்டுமாம். இங்கென்ன ரூபாய் காய்க்கிற மரம் ஏதாவது முளைத்திருக்கிறதா? எல்லாம் அந்தச் சித்தி பண்ணுகிற சதி!" என்று பலமாக இரைந்தான் ரங்கநாதன்.

"நான் சொன்னால் உங்களுக்குத் தப்பாகப் படும். உங்கள் சித்தி அந்தக் காலத்திலும் உங்களைக் கெடுத்தாள். இப்போதும் நாம் உருப்படாத வழி செய்கிறாள். உங்கள் அப்பாவுக்கு எப்போதும் தங்கமான மனசு. ஆனால் அவர் உங்கள் சித்தி ஆட்டி வைக்கிறபடியெல்லாம் ஆடுகிறார்..." என்றாள் பங்கஜம்.

ஒரு நிமிஷம் மௌனம் நிலவியது.

"என்ன பதில் எழுதப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"'இனிமேல் இங்கிருந்து ஒரு தம்பிடி கூடப் பெயராது' என்று கண்டிப்பாக எழுதப் போகிறேன்...ஓட ஓட விரட்டுகிறார் அப்பா..."

"அப்புறம் அப்பா கோபித்துக் கொண்டு விட்டால்?..."

"கோபித்துக் கொள்ளட்டுமே! என் நிலையை உணர்ந்து பாராமல் என்னைப் பிய்த்துப் பிடுங்கினால் நான் என்ன செய்வது? நூற்றி இருபது ரூபாயில் நான் பட்டணத்தில் குடித்தனம் பண்ணுவதா? நீ ஆசைப்பட்டதை உனக்கு நான் வாங்கிக் கொடுப்பதா? எனக்குத்தான் நல்ல உடுப்பாக நான்கு தைத்துக் கொள்வதா? அல்லது இவர்களுக்கு அனுப்புவதா? நமக்கு ஒன்றுமே வேண்டாம், இவருக்கு மாதா மாதம் ரூபாய் சமர்ப்பணம் பண்ணி விடணும். அப்பாவுக்கு அப்படி ஒன்றும் அதிகச் செலவு இடையாது. பெண்ணுக்குச் சேர்த்து வைப்பதற்காக அவள் பண்ணும் சதி இது."

இன்றுபோல் ரங்கநாதன் இவ்வளவு கோபமாகப் பேசியதை இந்த மூன்று வருஷ வாழ்க்கையில் பங்கஜம் என்றுமே பார்த்ததில்லை. அவளே அதைக் கண்டு சற்றுப் பயந்து விட்டாள்.

"கடிதம் எழுதும்போது கொஞ்சம் கோபத்தை அடக்கிக் கொண்டு எழுதுங்கோ. உங்கள் அப்பாவும் முன் கோபக்

காரர். ஒன்று இடக்க ஒன்று நடந்து விட்டால் பிறகு எல்லாருக்கும் கஷ்டம். நம்முடைய உண்மை நிலைமையை விளக்கி எழுதினாலே போதும் என்று நினைக்கிறேன்" என்று சொல்லி விட்டு மெதுவாக அவன் அவ்வறையை விட்டு அகன்றான்.

ரங்கநாதன் மேஜை டிராயரைத் திறந்தான்; ஒரு தபால் கார்டை எடுத்தான். தன் தகப்பனாருக்குக் கடிதம் எழுதுவதற்கு ஆரம்பித்தான்.

* * *

ரங்கநாதனுக்கு ஏழு வயதாய் இருக்கும் போது அவனைப் பெற்றவள் கண்ணை மூடி விட்டாள். சில மாதங்கள் அவன் தன் தாய் மாமன் வீட்டில் இருந்தான். அப்போதுதான் அவனுடைய தகப்பனார் ராஜத்தை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டார். மணமான சில தினங்களுக்குள் தம் இளைய மனைவியை அழைத்துக் கொண்டு வந்து விட்டு ரங்கநாதனையும் அழைத்துப் போக அவன் மாமா வீட்டுக்கு வந்தார். ரங்கநாதனின் மாமா வீட்டார் ஏற்கெனவே அவன் காது பட அவன் தன் இளைய தாயாரிடம் படவிருக்கும் அவஸ்தையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது அவன் மனத்தில் பெரும் புயலை எழுப்பி இருந்தது. இப்போது தான் வர மாட்டேன் என்று மறுத்துக் கூறியும் பிடிவாதமாக அவன் தந்தை அவனைத் தம் ஊருக்கு — திருச்சிக்கு—, கூட்டிச் சென்றது அவன் ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்தியது.

திருச்சியை அடைந்த ரங்கநாதனுக்கு ராஜத்தைக் கட்டோடு பிடிக்கவில்லை. அதோடு அவன் தகப்பனார் அவனிடத்தில் காட்டிலும் அதிக அன்புடன் ராஜத்திடம் பழகுவதைக் கண்டு அவன் மனம் மேலும் கொதித்தது.

அடுத்த வருஷம் ராஜத்துக்குச் சந்திரா பிறந்தாள். பின் தன்னைத் தன் சித்தியோ தன் தகப்பனாரோ கவனிப்பதாகவே ரங்கநாதனுக்குத் தோன்றவில்லை. நாட்கள் ஓடின. ராஜத்தினிடம் எவ்வித ஒட்டுதலும் இல்லாமலே அவன் வளர்ந்தான். அவன் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதிய வருஷம். லீவுக்குத் தன் மாமா வீட்டுக்குச் சென்றான். பரீட்சை முடிவு வந்ததும் தான்



காலேஜில் சேரப் போவதாகத் தன் மாமா விடம் பெருமையடித்துக் கொண்டான். ஆனால் அவர், "உன் அப்பாவுக்கு அப்படி ஒரு எண்ணம் இருந்தாலும் கூட, அது நிறைவேறும்படி உன் சித்தி விட மாட்டாள். நீ என்ன அவளுடைய சொந்தப் பிள்ளையா? உனக்குக் கல்லூரிக்குச் செலவழிக்கும் பணத்தைச் சேர்த்து வைத்தால் தன் பெண் கல்யாணத்துக்கு ஆகும் என்று தான் அவள் சொல்லுவாள்" என்றார்.

அவர் வார்த்தை பொய்க்கவில்லை. பரீட்சைத் தேர்வு வெளி வந்ததும் அவன் திருச்சிக்குத் திரும்பினான். தன்னைக் காலேஜில் சேர்க்க வேண்டும் என்ற விஷயத்தை மெதுவாக,— சித்தி எதிரே இல்லாத சமயத்தில்,—அவன் தன் தந்தையிடம் சொன்னான்.

"உன்னை என்ன செய்வதென்று எனக்குத் தெரியும். காலேஜ் படித்தவர்களெல்லாம் என்னத்தை வாரிக் கட்டிக் கொண்டார்கள்? 'ஷார்ட் ஹாண்ட்', 'டைப் ரைட்டிங்' கத்துக்கோ. கூட 'புக் கீப்பிங்'படி. போதும்......" என்றார் அவன் தந்தை.

அன்று சாயந்திரம் அவன் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால் முகத்தை 'ஒருமாதிரி'யாக வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். அப்போது அவன் சித்தி அங்கே வந்தாள்.

"ரங்கநாதா! அப்பா செய்கிற ஏற்பாடு சரின்னுதான் எனக்கும் தோன்றுகிறது. வீணுக்குக் காலேஜிலே சேர்க்கவில்லை என்று நீ ஏன் வருத்தப்படுகிறாய்?......" என்று கேட்டாள்.

அவள் சொற்கள் ரங்கநாதனுக்கு எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பது போல் இருந்தது.

அவனை ஒரு 'இன்ஸ்டிடியூட்டில்' சேர்த்தார் அவன் தகப்பனார். இரண்டு மூன்று வருஷங்களில் அவன் சுருக்கெழுத்து, டைப் ரைட்டிங் முதலியவற்றை நன்றாகக் கற்றுக் கொண்டுவிட்டான். திருச்சியிலேயே நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு கம்பெனியில் உத்தியோகம் கிடைத்தது.

ஆயினும் தனக்குக் கல்லூரிப் படிப்பும் அதன் மூலம் வாழ்வில் ஒரு உயர்ந்த பதவியும் கிடைக்காமல் போனதற்குத் தன் சித்திதான் காரணம் என்று எண்ணி எண்ணி அவன் மனம் பொருமியது.

அவனுடைய தங்கை சந்திரா வளர்ந்தாள்; மணப் பருவம் அடைந்தவுடன் அவளை நல்ல இடத்தில் கொடுத்தார் அவர் தகப்பனார். ஐயாயிரம் வரை செலவிட்டார். 'தனக்குக் காலேஜுக்குச் செலவு செய்ய மட்டும் அவரிடத்தில் பணமில்லை; சந்திராவின் கல்யாணத்துக்குச் செலவு செய்ய மட்டும் எப்படி ஆயிரக் கணக்கில் அவருக்குப் பணம் கிடைத்தது?' என்று நினைக்க நினைக்க அவனால் துயரம் தாள முடியவில்லை.

மூன்று வருஷங்களுக்கு முன் அவனுக்குக் கல்யாணமாயிற்று. தான் பட்ட கஷ்டமெல்லாம் போதும்; தன் மனைவியும் வேறு தன் மாற்றாந்தாயிடம் கஷ்டப்பட வேண்டாம் என்ற எண்ணத்தில் அவன் தன் உத்தியோகத்தை, சென்னையில் இருந்த அக்கம்பெனியின் தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றிக் கொண்டு, மனைவியுடன் சென்னைக்கு வந்துவிட்டான். சம்பளமும் கொஞ்சம் கூடக் கிடைத்தது.

அவன் சென்னைக்குக் கிளம்பி வரும்போது அவன் தகப்பனார் அவனிடம், "ரங்கா! எனக்கு வயசாகிக் கொண்டே வருகிறது. என்னால் ஓடியாடிச் சம்பாதிக்க முடியவில்லை. மாசம் நீ எனக்கு இருபது ரூபாயாவது அனுப்பு" என்றார்.

சித்தியிடம் அவனுக்குச் சொல்ல முடியாத வெறுப்பு. இருந்தாலும், அப்பாவிடம் பயம் அதிகம். ஆகையால் அவர் சொன்ன வார்த்தைகளை ஒப்புக் கொண்டான். அதன்படி அவன் நடந்தும் வந்தான்.

ஆனால் பட்டண வாழ்வு; தாம்பத்ய வாழ்க்கையின் ஆரம்பம்; இளம் மனைவி. தானும் மற்ற இளம் தம்பதிகளைப் போல் தன் மனைவியுடன் நகர வாழ்க்கையின் பலவித ஆனந்தங்களை அனுபவிக்க அவன் வெகுவாக ஆசைப்பட்டான். ஆனால் பொருளாதார நெருக்கடியினால் தன்னுடைய பல அபிலாஷைகளை அவன் கட்டுப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டியதாய் இருந்தது. சில சமயங்களில் அவனுக்குத் தன் தகப்பனார் மேல் கோபம் கோபமாய் வரும். ஆனாலும் தகப்பனாரின் கட்டளையை மீறும் அளவுக்கு அவனுக்கு வெகுநாள் வரை தைரியம் வரவில்லை.

ஆனால் ஒன்றிரண்டு மாதங்களாகச் செலவு கட்டுக் கடங்காமல் போய் அவனையும் மீறித் தன் தகப்பனாருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது.

தன் கஷ்டங்களை யெல்லாம் எவ்வாறு சமாளிப்பதென்று அவன் மனம் பெரும் போராட்டத்தில் இறங்கி இருந்தபோது, அவனுடைய தகப்பனாரின் 'குற்றச் சாட்டு'க் கடிதம் வந்து, அவனுக்கு ஒரு முரட்டுத் தைரியத்தைக் கொடுத்து விட்டது.

* * *

நான் எழுதின கடிதத்தை அவன் மீண்டும் ஒரு முறை படித்தான்.

"அப்பாவுக்கு, நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைத்தது. சந்திரா உடம்பு சுகமில்லாமல் அங்கு வந்திருந்தால் அதற்கு நானா அகப்பட்டேன்? எனக்கே வரும்படி போதவில்லை. என்னால் உங்களுக்குப் பணம் அனுப்ப முடியவில்லை. என்னுடைய கஷ்ட நிலைமை உங்களுக்குத் தெரியும். ஆனால் சித்தியின் தூண்டுதலின் பேரில் தான் நீங்கள் என்னை அடிக்கடி தொந்தரவு செய்கிறீர்கள் என்பது எனக்கு விளங்கி விட்டது. இதுவரை மிகச் சிரமப்பட்டு என்னால் முடிந்ததைச் செய்து விட்டேன். இனி என்னால் ஒன்றும் செய்ய முடியாது. மன்னிக்கவும்—ரங்கநாதன்."



அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் உடனே தபாலில் சேர்த்துவிட்டான்.

அன்றிரவு, "காரசாரமாக அப்பாவுக்குக் கடிதம் எழுதி விட்டேன். வாழ்வு

பூராவும் என்னைக் கெடுக்க வேண்டும் என்பதுதான் என் சித்தியின் திட்டம். சந்திராவுக்கு உடம்பு சரியில்லையென்றால் வைத்தியச் செலவுக்கு அவள் கணவனைக் கேட்கிறது. அல்லது இவர்களே சமாளித்துக் கொள்வது. இந்தத் தண்டச் செலவுக்கெல்லாம் நாம் தான் அகப்பட்டோமா?'' என்று கேட்டான் ரங்கநாதன் பங்கஜத்திடம்.

அவளுக்கென்னமோ, தன் கணவன் நாசூக்காகக் கடிதம் எழுதவில்லையே என்று வருத்தமாய்த்தான் இருந்தது.

* * *

தன் கடிதத்தைக் கண்டதும் தன் தகப்பனர் மிகவும் கோபமடைந்து, தன்னைச் சரியானபடி திட்டி வேறு ஒரு கடிதம் எழுதுவார் என்பது ரங்கநாதனுக்குத் தெரியும். ஆனல் அதையும் சமாளிக்கத் தன் மூளை தனக்கு ஒரு யோசனை சொல்லாதா என்ற தைரியத்தில் தான் இருந்தான் அவன்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. தந்தையிடம் இருந்து அவனுக்கு அவன் எதிர்பார்த்தபடி ஒரு கடிதமும் வரவில்லை. தன்னிடம் ஏற்பட்ட அதிகக் கோபத்தினல் அவர் தனக்குக் கடிதமே எழுதக் கூடாது என்று இருந்து விட்டாரோ என்ற சந்தேகம் எழுந்தது, அவன் மனத்தில். அந்த நிலையை நினைக்க அவனுக்குச் சற்று பயமாகத்தான் இருந்தது. ஏதோ அவசரத்தில் அவன் தாறுமாருக எழுதி விட்டானே தவிர, திரும்ப ஆர அமர யோசித்துப் பார்த்ததில் அவன் செய்த காரியம் அவ்வளவு சரியானதல்ல என்று அவன் உள்ளுணர்ச்சி அவனைக் குத்தியது. அவனுடைய தந்தையின் மௌனம் வேறு அவன் உள்ளத்தை அதிகம் உறுத்தியது.

சில தினங்களாக அவன் வேறொரு விஷயத்துக்காகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் காரியாலயத்தில் 'காஷியர்' வேலை காலியாயிற்று. இவனுடைய வேலைத் தரத்தையும் பொறுப்புணர்ச்சியையும் கண்ட இவனுடைய மானேஜர் அப் பதவிக்கு இவனைச் சிபாரிசு செய்தார். சம்பளம் கூட ஐம்பது ரூபாய் வரும். ஆனல் மூவாயிரம் ரூபாய் டெபாஸிட் கட்ட வேண்டும். அந்தத் தொகைக்கு எங்கே போவது என்பதுதான் ரங்கநாதனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

இந்தச் சில தினங்களாக அவன் எங்கெங்கோ அலைந்து பார்த்து விட்டான். ஆனல் ஏமாற்றந்தான் அவனை எதிர்கொண்டது. கடைசியாக 'காஷியர்' ஆகும் எண்ணத்தையே அன்று தன் மனத்தில் இருந்து அறவே நீக்கி விட்டு, ஆபீசிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டான்.

வீட்டினுள் நுழைந்ததும், தன் அறையில் சாய்வு நாற்காலியில் தன் தகப்பனார் உட்கார்ந்திருப்பதையும், சமையல் அறையில் சித்தி இருப்பதையும் கண்ட அவன் முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது. தந்தையின் முன் போவதற்கே அவனுக்குப் பயமாய் இருந்தது. அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று நடுங்கியது அவன் உள்ளம்.

ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "அப்பா! எப்பொழுது வந்தீர்கள்?" என்று ஆரம்பித்தான்.

அவன் முடிக்கவில்லை. அதற்குள் அவர், "ஏண்டா! உன்னுடைய கஷ்டம் ஆயிரம் இருக்கட்டும். இருந்தாலும் நீ இப்படியா நடந்து கொள்வது?" என்றார்.

கடிதம் எழுதும்போது இருந்த தைரியம் ரங்கநாதனுக்கு இப்போது இல்லை. அவன் உடலில் ரத்த ஓட்டம் நின்றுவிடும் போல் இருந்தது.

"வந்து நான்......"

"என்னடா வந்து போயி......" என்று சொல்லிக் கொண்டே எழுந்த அவர் ஸ்டாண்டில் மாட்டியிருந்த தம் சட்டைப் பையில் இருந்து ஒரு கவரை எடுத்து அவன் கையில் கொடுத்தார். அதைத் திறந்த ரங்கநாதனின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அதனுள் முப்பது நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

"மூன்று நாட்களுக்கு முன் உங்கள் ஆபீஸின் திருச்சிக் கிளை மானேஜரைப் பார்த்தேன். உங்கள் சென்னை ஆபீஸ் மானேஜர் உன்னை காஷியர் உத்தியோகத்துக்குச் சிபாரிசு செய்திருப்பதாகவும், டெபாஸிட் கட்டப் பணம் இல்லாமல் தவிப்பதாகவும் அறிந்தேன். நீ திருச்சியில் வேலைக்குப் போனதும் முதல் மாதம் வாங்கிய நூறு ரூபாய் சம்பளத்தை என்னிடம் கொடுத்த போது, அந்தப் பணம் உன்னுடையதாகத் தனியாகவே இருக்கட்டும் என்று உன் சித்தி சொன்னாள். நானும் அப்படியே அதைத் தனியே பாங்கில் கட்டி விட்டேன். அப்புறம் நீ அங்கிருந்த ஒன்றரை வருஷமும் மாதா மாதம் கொடுத்த பணத்தை அப்படியே பாங்கில் கட்டிக் கொண்டு வந்தேன். உனக்குக் கல்யாணமாகி இங்கு வந்த போதும்—பட்டண வாழ்க்கையில் எவ்வளவு வந்தாலும் போதாது, கட்டாயத்தின் பேரில் ஏதாவது சேர்த்தால்தான் உண்டு என்று உன் சித்தி யோசனை சொன்னதன் பேரில்—என் செலவுக்ென்று உன்னை மாதம் இருபது ரூபாய் அனுப்பும்படி சொன்னேன். நீயும் அனுப்பி வந்தாய். அதையும் அப்படியே சேர்த்து வந்தேன். அந்தப் பணம் உனக்குத் தேவையான போது ஒரு மொத்த

கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்

★

		ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா, இலங்கை	ரூ.	13-0-0	6-8-0
பர்மா, மலேயா, வெளிநாடு	ரூ.	16-4-0	8-2-0

குறிப்பு:—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை

மாக உனக்கு உபயோகப்படும் என்று நினைத்தது வீண் போகவில்லை. உனக்கு இப்போது பணம் தேவை என்றதும் பாங்கில் இருந்து அதைப் பூராவும் எடுத்தேன். மொத்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு இருந்தது. தேவையான தொகைக்கு ஐந்நூறு குறைகிறதே என்று யோசித்துக் கொண்டிருந்த போது, உன் சித்தி, தான் போட்டுக்கொண்டிருந்த சங்கிலி ஒன்றைக் கொடுத்து விற்றுப் பணமாக்கச் சொன்னாள். உன்னைக் கஷ்டப்படுத்தி நான் வாங்கியதால் உனக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை...''

தன் கண்முன் நடப்பதையும் தன் காதுகளால் கேட்பதையும் — ஒன்றையுமே— அவனால் நிஜமென நம்ப முடியவில்லை. தான் அவ்வளவு காரசாரமாகக் கடிதம் எழுதியும் அதைப் பொருட்படுத்தாமல் —அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல்—தனக்கு உபகாரம் செய்த தன் தந்தையின் பெருந்தன்மை அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதைக் காட்டிலும் ஆச்சரியத்தைக் கொடுத்தது அவன் சித்தியின் எண்ணங்களும் செய்கையும்.

''...நீ இப்படித் திண்டாடிக் கொண்டிருக்கும் போதுதான் என் 'ஐம்பது ரூபாய்'க் கடிதம் உனக்கு வந்திருக்கிறது. ஆனால் நீ அதற்குப் பதில்...''

ரங்கநாதனின் இருதயத் துடிப்பு அதிகரித்தது.

''அப்பா! நான் உன்மையிலேயே...''

''நானும் உன் சித்தியும் எப்பொழுதும் உன் நன்மைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்க, திருவாரூரில் இருக்கும் உன் மாமா, 'ஆவடி காங்கிரஸுக்கு வந்திருந்த போது என் பக்கத்து வீட்டுக்காரரிடம் என்னையும் உன் சித்தியையும் பற்றி ரொம்பக் குறைப்பட்டுக் கொண்டாராம். உன்னைக் காலேஜில் சேர்க்காமல் என்னைத் தடுத்தது உன் சித்திதான் என்றாராம். 'சந்திரா கல்யாணத்தின் போது மாத்திரம் அவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது' என்று கேட்டாராம். வாஸ்தவத்தில் உன்னைக் காலேஜில் சேர்க்க வேண்டும் என்றுமிகுந்த ஆசைப்பட்டவள் உன் சித்திதான். ஆனால் என்னிடத்திலேதான் பணம் இல்லை. உன் சித்தியின் மாமா ஒருவர் ஜபல்பூரில் இருக்கிறார். பெரிய பணக்காரர். சந்திராவின்மேல் இருக்கிற அபிமானத்திலே அவர்தான் அவள் கல்யாணத்தை நடத்தி வைத்தது. உன் மாமாவைப் பார்த்தால் அவரிடம் இதையெல்லாம்சொல்லு...'' என்று கூறிவிட்டு அவர் ஏதோ காரியமாகத் தெருவுக்குச்சென்றார்.

ரங்கநாதன் அடுத்த கணம் சமையல் அறைக்கு ஓடினான். ''சித்தி! நான் பெரிய தவறு பண்ணி விட்டேன். இந்த நிமிஷம் வரை நீ செய்கிற காரியம் அத்தனையும் என்னை உருப்படாமல் செய்வதற்குத்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உன்னைப்போல நல்ல குணமுள்ள ஒருத்தியை இந்த உலகத்திலே பார்க்க முடியாது. அப்பாவின் கடிதம் போன வாரம் வந்ததும் நான் தாறுமாறாகப் பதில் எழுதி விட்டேன். ஆனால் அது......'' உணர்ச்சிப் பெருக்கால் வார்த்தைகள் மேலே வரவில்லை.

''உங்க அப்பா வீட்டில் இல்லாதபோது அது வந்தது. 'அவர் முன் கோபக்காரராயிற்றே. அதைப் படித்தால் ஏதாவது விபரீதமாக நடந்து கொண்டுவிடப் போகிறாரே' என்று நான் அதைக் கிழித்துப் போட்டு விட்டேன்.''

''சித்தி! நான் எவ்வளவு பெரிய முட்டாள்? உன்னை நான் ரொம்பத் தப்பாக நினைத்து விட்டேன்.''

''ரங்கநாதா! என்றைக்கும் நீயும் என் குழந்தைதான்; சந்திராவும் என் குழந்தைதான். உன்மேல் நான் எப்பொழுதுமே வருத்தப்பட்டது கிடையாது. நேற்றுத் திடுமென்று மாப்பிள்ளை வந்து கோயம்பத்தூரிலே ஒரு கல்யாணம் என்று சொல்லிச் சந்திராவை அழைத்துப் போனார். உன்னையும் பங்கஜத்தையும் பார்த்துவிட்டு, இந்த ரூபாயையும் உன்னிடம் கொடுத்து விட்டுப் போகலாம்என்று நாங்கள் புறப்பட்டு வந்தோம்'' என்றாள்.

சற்று முன் வரை தங்களுடைய ஜன்ம வைரியாகத் தோன்றிய ராஜம், ரங்கநாதன் — பங்கஜம் தம்பதிகளுக்கு இப்போது உயர்ந்த பண்பாட்டுடன் கூடிய உத்தம ஸ்திரீயாகக் காட்சியளித்தாள்.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor: Mi. Pa. Somasundaram.


பாப்பாவின் புது கவுன்
ஹா, புது கவுன்!
ஜாக்கிரதையாய் இருக்கணும் பாப்பா
பள்ளிக்கூடத்தில்
வா, நாம் விளையாடலாம்
ஊஹூம், கவுனை வீணாக்கி விடுவேன்
கவுனை கிழித்து விட்டாய் பாப்பா
நான் ஜாக்கிரதையாய் இருந்தேன்!
கடையில்
இந்த கவுனைப் பாருங்கள்!
யார் தைப்பது?
நான் செய்தேன்!
இது அடித்துத் துவைப்பதனால் ஏற்பட்டது!
அடித்துத் துவைப்பதினால் நூலிழைகள் நைந்து துணிகள் கிழிகின்றன. உங்கள் துணிகளை அடித்துத் துவைக்காமல் சுத்தம் செய்யுங்கள்.
ஆமாம்! நிறைந்த நுரையுண்டாகும் ஸன்லைட் துணிகளை அடித்துத் துவைக்காமல் மாசற்றதாக்குகிறது! இப்பொழுது துணிகள் நீடித்திருக்கின்றன. அதோடு பணமும் மிச்சம்!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப் துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது

REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon

